தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 40 ரூபா • தீபம் 158 • 23.09.2018



சூரியன் பதிப்பகம்

சூரியன் பதிப்பகம் தற்போது புதிய முகவரியில்
காகிததாதிகள் விநியோகத்தர்கள்
புதிய கச்சேரி அருகாமை,
523, திருநகர் வீதி, கிளிநொச்சி 077-2882142




## சாள்ஸ் அன்ரனியின் முடிவால் அதிருப்தியடைந்த தீபன்!

## அரசியலாகும் அஞ்சலிகள்!

## முத்தம்... ஆயுள் கூட்டும்!

## அன்ரன் பாலசிங்கம் செய்தது தற்கொலையா?

## வடமாகாணசபை
# சிஸ்டம் சிக்கலானது ஏன்?


கிளிநொச்சி கனகபுரம் வீதியில் குடும்பத்துடன் சுவைத்து மகிழ்ந்திட

YARL AHI Ice Cream
யாழ் அகி ஐஸ்கிறீம்


ஒருமுறை விஜயம் செய்து சுவைத்துப் பாருங்கள்
திருமணநாள் மற்றும் பிறந்தநாள் பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும்
ஏனைய விழாக்களுக்கும் வாகன வசதியுடன் வழங்கப்படும்.
குறிப்பு : மேலதிக விபரங்களை அறிந்திட
www.yarl ahi icecream.comஐ பார்வையிடவும்.



இல:-46,உதயநகர் மேற்கு கிளிநொச்சி T.P:-021-7917585,0770232328


நியூ லலிதா நகை மாளிகை
வழங்கும்
செல்ல மகள் சிறு சேமிப்புத் திட்டம்
மாதாந்த கொடுப்பனவு முறையில் நகை வாங்கலாம்
லலிதா
நியூ லலிதா நகைமாளிகை
NJ Lalitha Jewellery
ஏ9 வீதி, கிளிநொச்சி.
(இலங்கை வங்கி முன்பாக)
0776079619
133, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 0212224648
462, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம். 0212222552


TOPAZ Mall (Pvt) Ltd.
No 1 TOPAZ
TOPAZ
No.01 Shop in Jaffna
திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை சுடிதார் மற்றீரியல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்
ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்
மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச் சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்
We are Specialist in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items
TOPAZ
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645
TOPAZ TAILORING
No 80/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643
Email : topazagn@gmail.com
TOPAZ MALL
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9933
coustomer is king


TILKO hotels
TILKO
JAFFNA CITY HOTEL
TILKO JAFFNA CITY HOTEL
Mob : 077 780 393, 0777 696 443
Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com

## வடமாகாணசபை

# சிஸ்டம் சிக்கலானது ஏன்?

அன்ரனி பாலசிங்கம்

இன்னும் ஒரு மாதத்தில் வட மாகாணசபையின் பதவிக்காலம் முடிவடைகிறது. சரியாக ஐந்து வருடங்களின் முன்னர் வடமாகாணசபை தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு அமோக வெற்றியடைந்து, விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளர் என்றானபோது, நிலவிய காட்சிகள் வாசகர்களிற்கு நினைவிருக்கலாம்.

இந்த ஐந்து வருட காலத்தில் மாகாணசபை நிர்வாகத்தை மீளாய்வு செய்யும் தருணம் இது. அது மாகாணசபைக்குள்ளும் நடக்கும், செய்திகளாகவும் வெளியாகும். ஆனால், மாகாணசபைக்குள் நடக்கும் மீளாய்வுகள் பெரும்பாலும் அரசியல் சார்ந்ததாகவும், அடுத்த தேர்தலை நோக்கியதாகவுமே இருக்கும். தமிழ் அரசியலில் மிக மோசமான ஒரு அவலக்காட்சியை இன்றைய மாகாணசபை பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. அதனால் மாகாண சபைக்குள்ளிருந்து நியாயமான, சரியான அரசியல் பார்வையுள்ள விமர்சனங்கள் வராது.

இன்று மாகாணசபைக்குள் உள்ள மிகப்பெரிய பிரச்சனையே, சரியான ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இல்லாததுதான். இப்போது முதலமைச்சர் அணி, எதிரணி என்ற இரண்டு அணிதான் மாகாணசபைக்குள் உள்ளது. தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட எதிரணி, இந்த இரண்டு அணிகளில் ஒன்றிற்கு தமது தேவைக்கு பொருந்து பக்கப்பாட்டு பாடி, ஒரு குணசித்திர வேடத்தைதான் ஏற்று வருகிறது.

வடக்கு எதிர்கட்சி தலைவர் ஒரு மதிப்பார்ந்த ஆளுமையாக உருவெடுக்க முடியாமல் போனதற்கும் இதுதான் காரணம். மாகாணசபைக்குள் அவரது பாத்திரம் “கரை தேடும் ஓடம்“ பாணியில் ஏதாவது ஒரு அணிக்குள் தஞ்சம் அடையும் நோக்கத்துடன், தர்க்க நியாய கோட்டிற்கு அப்பால் சென்று ஆடும் பாத்திரமென்ற விமர்சனம் அதிகரித்து வருகிறது. இதனால் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு பாத்திரத்தை எதிர்க்கட்சி தலைவரால் வகிக்க முடியாமல் போனது. மாகாணசபயின் வீழ்ச்சிக்கான காரணங்களில் இதுவுமொன்று.

இந்த கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதை போல, மாகாணசபை தேர்தல் முடிந்த ஐந்து வருடங்களின் முந்தைய காட்சிகளை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். வட மாகாணசபை வேட்பாளராக கொழும்பிலிருந்து வந்தவிக்னேஸ்வரன், தமிழரசுக்கட்சி எம்.பியொருவரின் விருந்தினர் விடுதியில் தங்க வைக்கப்பட்டிருந்தார். முதலமைச்சரை விழுந்து விழுந்து கவனித்தார் எம்.பி. தேர்தல் முடிந்ததும், “மலர்ந்தது தமிழர் அரசு” என அவரது பத்திரிகை செய்தியும் வெளியிட்டிருந்தது. அதே பத்திரிகை, ஐந்து வருடங்களின் பின்னர், “முதலமைச்சரை எழுந்து நிற்க பணித்தது நீதிமன்றம்” என செய்தி வெளியிட்டிருந்தது. இரண்டு செய்திகளின் பெறுமானங்கள் என்னவென்ற கேள்விக்கு அப்பால், மாகாண அரசியலில் உள்ள ஆழமான பிளவை புரிந்து கொள்ளலாம். தமிழரசுக்கட்சியின் வேட்பாளராக நுழைந்து முதலமைச்சர், இன்று தமிழரசுக்கட்சிக்கு வேண்டப்படாத ஒருவராகி விட்டார்.


வடமாகாணசபையின் குழப்பங்களிற்கு, வீழ்ச்சிக்கு, குற்றச்சாட்டுக்களிற்கு இந்த மோதல்தான் முக்கிய காரணம்.

முதலமைச்சரை பலவீனமாக்க வேண்டுமென ஒரு அணி செயற்பட, அவர்களிற்கு சவால் விட்டு முதலமைச்சர் செயற்பட, அரசியல் பலப்பரீட்சைக்கான களமாகத்தான் மாகாணசபை அதிகமும். காணப்பட்டது. மக்களின் நிர்வாகத்திற்கான திட்டங்கள் அங்கு வகுக்கப்பட்டதை விட, மாகாணசபைக்குள் எதிர்தரப்பை வீழ்த்துவதற்காக மாகாணசபைக்கு வெளியில் சூழ்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டதே அதிகமாக நடந்தது. இதனால் இந்த மாகாணசபை வினைத்திறனாக தன்னை உருவாக்க முடியாமல் போய் விட்டது.

முதலாவது வடக்கு மாகர்ணசபை ஏன் வெற்றியடையவில்லையென்ற கேள்விக்கு, தனியே முதலமைச்சருக்கு எதிரான அணியிலோ, அல்லது முதலமைச்சரிலோ காரணத்தை தேடுவது அபத்தமானது. மாகாண சபைக்குள் ஒரு அணி முதலமைச்சரை இயங்கவிடாமல் குடைச்சல் கொடுத்தது காரணமென முதலமைச்சர் அணி சொல்லக்கூடும். முதலமைச்சர் நிர்வாக திறனற்றவர் என முதலமைச்சருக்கு எதிரான அணி சொல்லக்கூடும். உண்மையில் இந்த இரண்டும் சேர்ந்துமே மாகாணசபையை செயலிழக்க செய்தது.

வடக்கு முதல்வர் நிர்வாக பாரம்பரியத்தில்வந்தவர் அல்ல. மிதவாததமிழ் தேசிய அரசியலும் செயல்பூர்வமான அரசியல் பாரம்பரியத்தை கொண்டதல்ல. ஒருவகையில் பார்த்தால் முதலமைச்சரும் பேசும் தொழில்தான் செய்தார். மிதவாத தமிழ் தேசிய அரசியல் பாரம்பரியமும் பேசும் அரசியல்தான் செய்தது. தமிழ் தேசிய அரசியலை ஆழ்ந்து கவனித்தால் ஒரு உண்மை புரியும். நன்றாக பேசுபவர்கள், நாடாளுமன்றத்தில் பேசி தமது உரிமைகள்ளை மீட்டு வருவார்கள் என்பதுதான் இனப்பிரச்சனை கூர்மைப்பட்ட நாள் தொடக்கம் வெகுஜன எதிர்பார்ப்பாக இருந்து வருகிறது. இந்த பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவே வடமாகாணசபை நிர்வாகம் அமைந்தது.

முதலமைச்சர் இதுவரை தன்னை ஒரு செயற்பாட்டாளராக வெளிக்காட்டவில்லை. அவர் இன்னும் சகஜமாக கிராமங்களிற்கு செல்லவில்லை. நிர்வாக நடைமுறை





தொடர்ச்சி அடுத்தபக்கம்...

களிற்கு அப்பால் பொதுமக்களை சந்திக்கும் தனிப்பட்ட இயல் பொன்றை அவர் இன்னும் உருவாக்கவில்லை. அரசியல்ரீதியாக அவர் தன்னைப்பற்றி உருவாக்கிய பிம்பத்தை போல, நிர்வாக ரீதியில் உருவாக்கவில்லை. அவர் எதிரிகளை உருவாக்கி, சதா அவர்களுடன் போரிட்டு கொண்டிருந்தார். சிக்கலில் லாமல் தீர்க்ககூடிய விவகாரங்களையும் சிக்கலாக்கி முடிவுகள் எடுத்தார்.

ஆனால், வடக்கின் நிர்வாக குற்றச் சாட்டுக்களிற்கு அதற்கு அப்பாலும் காரணங்கள் உள்ளன. பொதுவாகவே தமிழ் அரச அதிகாரிகளின் நிர்வாக செயல்திறன் என்னவென்பதை நாம் புதிதாக சொல்லி தெரிய வேண்டியதில்லை. வடக்கு முழுவதும் உள்ள அதிகாரிகளில் மிகச்சிறந்த நிர்வாகிகளை கணக்கிட்டால் சொற்ப எண்ணிக்கையானவர்களே தேறுவார்கள். அரச நிர்வாகத்தை வினைத்திறனாகவும், சேவை மனப்பான்மையுடனும் செய்யும் வாழ்க்கை ஒழுக்கம் இன்னும் தமிழர்களிடம் ஏற்படவில்லை. இதனால்தான் "இருப்பவர்கள் இருந்தால் இப்படி ஆகுமா?" என்பதை போன்ற கேள்விகளை இன்னும் கேட்டுக் கொண்டிக்கிறார்கள்.

**அரசியல் தலைமைகள் கொள்கைரீதியான வழிகாட்டுதல்களையே செய்ய வேண்டும், அதிகாரிகளே நிர்வாக வினைத்திறனை பேண வேண்டும். ஆனால் பொதுவாக நம்மவர்களிடம் அப்படியான மனநிலையெதுவும் கிடையாது. மொத்தத்தில் "சிஸ்டம்" சரியில்லை யென்றுதான் கூற வேண்டும்.**



அரசியல் தலைமைகள் கொள்கை ரீதியான வழிகாட்டுதல்களையே செய்ய வேண்டும், அதிகாரிகளே நிர்வாக வினைத்திறனை பேண வேண்டும். ஆனால் பொதுவாக நம்மவர்களிடம் அப்படியான மன நிலையெதுவும் கிடையாது. மொத்தத்தில் "சிஸ்டம்" சரியில்லையென்றுதான் கூற வேண்டும்.

வடக்கு நிர்வாகம் சரியில்லையென ஈ.பி.டி.பி தவராசா தொடக்கம் முன்னைய ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதராஜ பெருமாள் வரை எல்லோரும் ஒவ்வொரு கூட்டத்திலும் பேசுவதை வாடிக்கையாக கொண்டிருக்கிறார்கள். இதன் அர்த்தம் "நாம் நன்றாக நிர்வாகம் செய்வோம்" என்பதே. ஆனால் தமது நிர்வாக காலத்தை பற்றி இவர்கள் எல்லோரும் வசதியாக மறந்து விடுகிறார்கள். வரதராஜ பெருமாள் வடக்கு கிழக்கின் முதலாவது முதலமைச்சர். அவர் இந்திய இராணுவம், மக்கள் இராணுவம் என்ற ஆயுத அணிகளை வைத்தே நிர்வாகம் செய்தார். நிர்வாகம் நடந்தா, குறையிருந்ததா என்பதெல்லாம் மக்களிற்கு தெரியாது. ஏனெனில் வீதியில் யாரும் இறங்க முடியாது. இறங்கினால் அவர்களின் படைக்கு அள்ளி சென்று விடுவார்கள். யுத்தம் முடிந்ததும் மஹிந்த ராஜபக்ச, இராணுவ ஆளுனரின் துணையுடன் ஈ.பி.டி.பி யாழ்ப்பாணத்தில் நிர்வாகம் செய்தது. அவையெல்லாம் முறையான சிவில் நிர்வாக செயற்பாடுகள் கிடையாது. அதனால், அவர்களது ஒப்பீடுகள் பொருத்தமானவையா என்ற கேள்வியுள்ளது.




உள்வீட்டு பிரச்சனை, வெளிவீட்டு பிரச்சனையென அரசியல் போட்டா போட்டிகளே மாகாணசபை தொடர்பான எதிர்மறையான பிம்பத்தை பெருமளவிற்கு ஏற்படுத்தியுள்ளது. நமது அரச அலுவலர்கள், அதிகாரிகளை கொண்ட இந்த சிஸ்டத்தின் மீது எந்த முதலமைச்சர் உட்கார்ந்தாலும், இப்படித்தான் இயங்கும்.

வடக்கிலிருந்து நிதி திரும்பி சென்றதாக முன்னர் அதிகமாக பேசப்பட்டது, பிரசாரப்படுத்தப்பட்டது. இதை இன்றும் அதிகமான மக்கள் நம்புகிறார்கள். ஆனால், வடக்கு மாகாணசபையின் புள்ளிவிபரங்கள் வேறுவிதமாக சொல்கின்றன. ஆக, அரசியல் ரீதியான காரணங்களும், மாகாணசபை மீதான எதிர்மறை பிம்பத்தை உருவாக்க ஒரு காரணம்.

ஆனால், இந்த மாகாணசபையின் செயற்றிறன் போதுமென யாரும் திருப்திப்பட முடியாது. சிஸ்டத்தை சரியாக இயங்க வைக்கும் பொறிமுறையை மாகாண சபையை பொறுப்பெடுப்பவர்கள் தெரிந்திருக்க வேண்டும். அதற்கு முன்னர் இந்த மாகாணசபைக்குள் குடுமிப்பிடி சண்டை பிடித்ததை போல, அடுத்த சபையிலும் சண்டை பிடிக்க கூடாது. அதுதான் இந்த மாகாணசபையை இயங்க விடாமல் செய்த வேகத்தடை.

எல்லா தரப்பும் இதில் சுயபரிசீலனை செய்து கொள்வது அவசியம்.


# தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

**தொடர்புகளிற்கு**

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com

Home

# என்ன சொல்கிறார்கள் நெட்டிசன்கள்?

**செய்தி: ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியை 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆப்கான் அணி தோற்கடித்தது.**



**Vaiththilingam Rajanikanthan:**

ஸ்ரீலங்கா இன்றைக்கும் தோற்குதா என கிரிக்கெட் பார்க்க, அம்மா பேசுறா ஏன்றா இந்த சிங்களவன பார்க்கிற என்று



**Sathyaseelan Sajirathan:**

ஆப்கானிஸ்தான் வெல்லுமா?

இல்லை அதிர்ச்சித் தோல்வியடையுமா?



**Makinsan Maki :**

வாங்கடா நீங்க வாங்கடா...






**Paiwa Asa:**

கலைந்தது இலங்கையணியின் ஆசியக்கிண்ணக் கனவு.

இருந்த பிடரி மயிரையும் இழந்தது சிங்கம்.

**Yfc Uduvil:**

RIP...

Srilankan cricket...

Pack பண்ணுங்கோ இனி உங்க என்ன வேல...



**Prashanthan Navaratnam**

இலங்கை அணியின் தோல்விக்கு காரணமான பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் மீது ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் முறையிடப்படும்

சுமந்திரன் ஆவேசம்



**ThurShiyan :**

சிம்பாவே கூட தோத்திங்க சகிச்சி கொண்டன்... ஆனா ஆப்கான்காரனோட தோத்திங்கனா மக்காள்... இனிமே உங்க கிரிக்கெட்டே பாக்க [illegible]ட்டன்டா...



**Prashanthan Navaratnam :**

வயலுக்கால் இலங்கை ரசிகர்கள் ஓடிய போது கிளிக்கியது






**Mynthan Shiva :**

feeling உசிரே உசிரே எங்கையாவது தப்பிச்சு ஓடிவிடு.

To my dear SL fans...



**Sarvananthan Arumugam:**



அடுத்த இங்கிலாந்து தொடருக்கு ஆயத்தமாகவே முன்னரே வெளியேறினோம் மத்தியூஸ்



"சுயசரிதை எழுதணும்ங்கிற ஆர்வம் எப்படி வந்தது தலைவரே?"

"என் மேல போடப்பட்ட எப்.ஐ.ஆர்களைப் படிக்க எனக்கே சுவாரஸ்யமா இருந்தது! அதான்."



"சர்வர், இதென்ன செல்ஃபி தோசை?"

"மாவு கொடுப்போம். நீங்களே சுட்டு சாப்பிட்டுக்கணும்!"




"பயம் என்ற வார்த்தை என் அகராதியில் கிடையாது!"

"ஆம் மன்னா! 'நடுக்கம்' என்றுதான் போட்டிருக்கிறது!"



"வாடகை கேட்க வரும் போதெல்லாம் வீட்டுல யாரும் இருக்க மாட்டேங்கிறீங்களே?"

"யாரும் இல்லாத வீட்டுக்கு எதுக்கு வாடகை கேட்கறீங்க?"



# திலீபன் நினைவுநாள் சர்ச்சை

## என்ன நடந்தது.... என்ன தீர்வு?

எஸ்.நிதர்ஷன்

யுத்தத்தின் பின்னர் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பெரிய சவால்களில் ஒன்று கடந்தகால வரலாற்றையும், நினைவுச்சின்னங்களையும் பேணுவது. அரசும், அரச நிறுவனங்களும் அவற்றை மெதுமெதுவாக உருமாற்றும் காரியத்தை கச்சிதமாக செய்து கொண்டிருக்கிறது. இந்த சவாலை எப்படி எதிர்கொள்வதென தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் சமயத்தில், தமிழர்கள் தமக்கு தானே புதிய பிரச்சனையொன்றை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நினைவு நிகழ்வுகளை யார் செய்வது? அஞ்சலி செலுத்த யாருக்கெல்லாம் உரித்துள்ளது? யார் தியாகி? யார் போராளி? இப்படி தமக்குள் தாமே கேள்விகளையும் கேட்டு, தமக்குதாமே பட்டங்களையும் சூடி, மோதிக் கொண்டிருக்கிறார்கள்.

தமது வரலாற்றை பேணுவதுடன், இன்றைய வரலாற்றை நாளைய சந்ததிக்கு கடத்தும் பணியை உலகெங்குமுள்ள இனங்கள் மிக அவதானமாக செய்து கொண்டிருக்கின்றன. நினைவேந்தல், கலாசார நிகழ்வுகள் என அதற்கான வழிமுறைகளை வகுத்து வைத்துள்ளார்கள்.

ஆனால் தமிழ் சமூகத்திடம் யுத்த காலத்திலும், யுத்தத்திற்கு பின்னான காலத்திலும் பெரிய பிளவுகள் இருந்து வருகிறது. தமிழ் சமூகம் தொடர்ந்து தோல்வியடைந்து வருவதற்கு பிரதான காரணங்களில் இதுவுமொன்று. இறந்தவர்களை கூட சச்சரவின்றி தமிழர்களால் அஞ்சலிக்க முடியவில்லையென்பது மிக வேதனையானது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளிலே தொடங்கிய இக்குழப்பம் முற்றுப்பெறாமல் இப்போது திலிபனுடைய நினைவேந்தல் நிகழ்வுகளிலும் வந்து நிற்கின்றது.

நினைவேந்தல்கள் என்பது தனியே அரசியல் கட்சிகள் சார்ந்து அல்லது தனிப்பட்ட நபர்கள் சார்ந்த விடயமாக இல்லாமல் பொது விடயமாக மாற்றப்படுவதே இந்த சிக்கல்களை தீர்க்க ஒரே வழி.

பொது குழுவொன்றின் மூலமே நினைவேந்தல்களை ஒருங்கிணைப்பதே அரசியல் கட்சிகள் இதற்குள் புகுவதை தடுக்க ஒரே வழி. அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இந்த குழு மாற்றப்பட வேண்டும் என்பதை மீண்டும் ஒரு தடவை வலியுறுத்தும் வகையிலே தியாகி திலீபனுடைய நிகழ்வுகளிலே ஏற்பட்ட குழப்பம் சுட்டிக்காட்டுகிறது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளில் ஏற்பட்ட குழப்பங்களைத் தொடர்ந்து வட மாகாண சபையிலே ஒரு பொதுக் குழுவொன்று அமைக்கப்பட்டு அந்தக் குழுவே நிகழ்வுகளைச் செய்யுமென அறிவிக்கப்பட்டிருந்தது.


தனிப்பட்ட நபர்கள் இவ்வாறான நிகழ்வுகளை ஒழுங்கமைக்கின்ற போது ஏற்படும் பாதுகாப்பு பிரச்சனைகளில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளவும் முடியும்.

அரசியல்வாதிகள், புத்திஜிவிகள்; சமூக ஆர்வலர்கள் இதனை கவனத்திலெடுத்து இவ்வாறான பொதுக் குழுவொன்றை அமைக்க வேண்டும். அதுவே தமிழ் மக்களினதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.


தீலீபனின் நினைவு நிகழ்வு ஆரம்ப. தினத்தன்று கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட குழப்பங்களை நியாயப்படுத்த முடியாது. அவ்வாறான குழப்பங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டிய கடமையும் பொறுப்பும் ஒவ்வொருவருக்கும் உள்ளது.

திலிபனின் நினைவு தின ஆரம்ப நாளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குமிடையிலான முரண்பாடு மோசமான ஒரு சம்பவம். இனியும் இப்படியான சம்பவங்கள் தொடராமலிருப்பதை உறுதிசெய்ய வேண்டியது கட்சித் தலைமைகளின் கடமையும், பொறுப்புமாகும்.

தொடர்ச்சி அடுத்தபக்கம்...









# திலீபனின் தூபியடியில் என்ன நடந்தது?

**செல்வராசா கஜேந்திரன்**
பொதுசெயலாளர்
தமிழ் தேசிய மக்கள் முன்னணி


செல்வராசா கஜேந்திரன்

நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவிற்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சிக்குமிடையில் உருவாகிய குழப்பத்தில் நாங்களும் தலையிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அன்று முதலாவது நிகழ்வாக கரும்புலி ஒருவருடைய சகோதரி ஈகச் சுடரோற்றி திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவிப்பதென ஏற்பாட்டுக்குழு அறிவித்திருந்தது.

அந்த பெண்மணி சுடரேற்றிவிட்டு மேலே சென்று படத்திற்கு மலர் மாலை போடுவதற்கு முன்னதாக ஜனநாயகப் போராளிகள் கட்சியின் வேந்தன், அந்தப் படத்திற்கு கீழே இன்னொரு படத்தை கொண்டு வந்து வைத்து, அந்தப்படத்திற்கு ஓடிப் போய் மாலை அணிவித்தார். நிகழ்ச்சி ஏற்பாட்டின்படி, அந்த மாவீரருடைய சகோதரி மலர் மாலை அணிவிப்பதற்கு முன்னதாக, இவர்கள் ஒரு படத்தை வைத்து அதற்கு மலர் மாலை அணிவித்தனர். இது குழப்பத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை. நிகழ்வை நடத்துவதாக விளம்பரம் தேடிக் கொள்வதற்காக அப்படி செய்திருக்கலாம்.

அதனை நாங்களும் அவதானித்துக் கொண்டிருந்தது போன்று ஏற்பாட்டுக் குழுவினரும் பார்த்தார்கள். குழப்பங்களை உருவாக்கக் கூடாதென்பதற்காக யாரும் ஆட்சேபணை சொல்லவில்லை. அதற்குப் பின்னர் அமைதியாக நிகழ்வுகள் நடைபெற்று, நிகழ்வுகள் முடிவடைவதாக ஏற்பாட்டுக் குழுவும் அறிவித்திருந்தது.

அப்போது ஏற்பாட்டுக் குழுவினரால் திலீபனுடைய நினைவுப் பாடலொன்று ஒளிபரப்பப்பட்டது. அப்போது அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், ஊடகங்களுடன் பேசப் போவதாகவும் பாட்டை நிறுத்துமாறும் சொன்னார். இங்கே எவரும் கருத்துக் கூறுவதற்கு ஏற்பாடுகள் இல்லை என்றும் , அதனைச் செய்ய வேண்டாமென்றும் ஏற்பாட்டாளர்கள் கூறினார்கள்.

தூபியை தானே கட்டியதாகவும், கருத்துக்கூற தனக்கு உரிமையுள்ளதாகவும் அவைத்தலைவர் சொன்னார். நல்லூர் திருவிழா ஆரம்பித்த போது இந்தப் பகுதிகளைத் துப்பரவு செய்து பராமரித்து வந்தோம். திருவிழா முடிந்த பின்னரும் திலீபனின் நிகழ்வை முன்னிட்டும் நாங்கள் தான் அந்தப் பகுதிகளைப் பாதுகாத்து வந்தோம்.

என்றாலும், எங்கள் கட்சி சார்பாக அந்த நிகழ்வு ஏற்பாடுகளைச் செய்யாமல் எல்லோரும் பங்கெடுக்கக் கூடிய வகையில் ஏற்பாட்டுக் குழுவொன்றும் அமைக்கப்பட்டிருந்தது. மூத்த போராளிகளான காக்கா அண்ணா உள்ளிட்டவர்கள் பொது குழுவின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வுகள் நடக்க வேண்டுமென ஏற்கனவே வலியுறுத்தியிருந்தனர். அரசியல் இலாபம் தேடாமல், புனிதத் தன்மையொடு நடத்தப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்திருந்தார்கள். அதன்படிதான் ஏற்பாட்டுக்குழு அமைக்கப்பட்டது.


நாங்கள் அதில் குழப்பத்தை ஏற்படுத்தவில்லை. குழப்பம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவே கருத்துக் கூற வேண்டாமென்றே கூறியிருந்தார்கள். அங்கு ஜனநாயகப் போராளிகள்தான் சண்டித்தனம் செய்தார்கள். ஜனநாயகப் போராளிகள் என்று சொல்லும் ஒரு சிலர் இன்றும் அரச முகவர்களாகத் தான் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்த நிகழ்வில் துளசி எம்மை தாக்கவும் வந்தார்.

முரண்பாடுகள் இல்லாமல் நினைவேந்தலை செய்வதென்றால், மாவீரர்களின் இலட்சியத்தை அடையக் கூடிய வகையில் உறுதியாக நேர்மையாக இருக்கக் கூடியவர்கள் அந்த நிகழ்வு ஏற்பாட்டு பொறுப்பை ஏற்க வேண்டும். அதை விட்டுவிட்டு அரச எடுபிடிகளாக இருப்பவர்கள் மாவீரர், போராளிகளின் பெயர்களைச் சொல்லிக் கொண்டு அப்படி செயற்பட முடியாது. தலைவர் பிரபாகரனே ஒரு விடயத்தை தெளிவாகச் சொல்லியிருக்கின்றார். குதிரைப் பந்தயம் நடக்கின்ற போது ஓடுகின்ற குதிரைக்குத் தான் புல்லுப் போடலாம். நானும் முன்னர் ஓடினேன், இனி என்னால் ஓட முடியாதென்கிற குதிரைகளிற்கு புல்லுப் போட முன்னர், ஓடுகின்ற குதிரைகளிற்குத்தான் புல்லுப் போடலாமென்றார்.

2009 ஆம் ஆண்டுவரை விடுதலை கோசத்துடன் ஓடிவந்தவர்கள் அதனை அடுத்த சமூகத்திடம் கையளித்திருக்கிறார்கள். அந்த விடுதலைக்கான பயணம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பொழுது, அதைப்பற்றி எந்தவித சிந்தனையும் இல்லாமல், தாங்கள் போராளிகள் தலையில் தூக்கி வைத்து ஆட வேண்டுமென்றால் எப்படி?

அவர்கள் போராளிகளுக்குரிய பண்புகளோடு நடந்திருந்தால் அவர்களை போற்றுதற்கும், உயர்ந்த இடத்தில் வைத்து மதிப்பதற்கும், அவர்கள் தலைமையில் செயற்படுவதற்கும் நாங்கள் எப்பொழுதுமே தயாகராகத் தான் இருக்கின்றோம்.

**துளசி**
பேச்சாளர்
ஜனநாயக போராளிகள்


துளசி

திலீபன் அண்ணாவின் நினைவேந்தலை 2015 ஆம் ஆண்டிலிருந்து நாங்கள் தான் செய்து வருகிறோம். முதல் நாள் தூபியைத் துப்பரவாக்கிவிட்டு நிகழ்வுகள் செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருந்த நிலையில், முன்னணியினர் வந்து மேலதிகமான சோடினைகளையும் செய்து முன்னுக்கு ஒரு கட்அவுட்டையும் வைத்தனர். விடுதலைப் புலிகளுடைய நிகழ்வை விடுதலைப் புலிகளே செய்யாமல் மக்களே இந்த நிகழ்வுகளைச் செய்தால் நாங்கள் சந்தோசப்படுவோம். ஆனால் அந்த நிகழ்வு சரியான முறையில் நடைபெற வேண்டும். அஞ்சலியை தங்கள் நேரத்திற்கு 9 மணிக்கு செய்யப் போதாக கூறினார்கள். அப்படியல்ல, அதற்கு ஒரு நேரமுள்ளது, அந்த நேரத்தில்தான் செய்ய வேண்டுமென முன்னணியிடம் நாங்கள் சொன்ன போது, அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஆனாலும் அந்த இடத்திலே முரண்பாடு மெல்ல மெல்லமாக ஆரம்பித்து விட்டது. அதற்குப் பிறகு அகவணக்கம் தொடர்பாக கதைக்கும் போதும் ஒரு முரண்பாடு ஏற்பட்டது.

நேரம் தொடர்பில் பிரச்சனை வந்த போது நான் சொன்னேன் 'அது இயக்கத்திற்கு தெரியும்' என்று. 'இல்ல எங்களுக்கும் தெரியும். நீங்கள் இயக்கம் என்றால் பிள்ளையானும் இயக்கம் தான். மாத்தையாவும் இயக்கம் தான்' என்றார் கஜேந்திரன். அப்போது கஜேந்திரனை நான் பிடிக்க முற்பட்ட போது அவர் பறித்துக் கொண்டு ஓடிவிட்டார். சிவஞானம் அஞ்சலி செலுத்திவிட்டு வெளியே வர ஊடகங்கள் தான் அவரிடம் கேள்வியைக் கேட்டன. அப்போது பாட்டு சத்தத்தை அதிகரித்தார்கள். சத்தத்தை குறைக்கும்படி . சொன்னோம். ஆனால் சத்தத்தை அதிகரித்தார்கள். 'நாங்களும் இயக்கம் நீங்களும் இயக்கமா' என்றும் சண்டித்தனம் செய்தார்கள்.


தலைவர்தான் திலீபன் அண்ணையை உண்ணாவிரதம் இருக்கச் சொன்னார். மில்லர் அண்ணை வெடிக்கப் போகிறேன் என்றதற்கு தலைவர் அனுமதி கொடுத்தார். அல்லது தலைவரின் சிந்தனைக்கு மில்லர் அண்ணை செயல்வடிவம் கொடுத்தார். விடுதலை செய்யப்பட்ட அத்தனை போராளிகளுக்கும் தலைவர் தான் குப்பி தந்தவர். தலைவர் தான் ஆயுதமும் தந்தவர். ஆயுதங்களை வைத்துவிட்டு உள்ளுங்கு போங்கள் என்று தலைவர் சொன்னதாலேயே நாங்கள் ஆயுதங்களை வைத்தவிட்டு உள்ளுக்கு வந்தோம். திலீபன் அண்ணா எடுத்த முடிவிற்கும் இப்போது இருக்கிற போராளிகள் எடுத்த முடிவிற்கும் வித்தியாமில்லை.

தெரிவு செய்யப்பட்ட வட மாகாணசபை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை செய்தது போல, மாநகரசபை திலீபனின் நிகழ்வை பொறுப்பேற்பது இந்தப் பிரச்சனைக்கு தீர்வாக இருக்கும்.

# அதிரியாட்டிக் கடல் தன் கைப்பட எழுதிய கவிதை

## 13 உங்களுக்கு வோட்டர் போலோ தெரியுமா?

சாள்ஸ் ஜெ.போர்மன்





ஸதோன் கடற்கரையில் குளியலை முடித்துக்கொண்டு டுப்ரோவ்னிக் நருக்குப் பேருந்தில் திரும்பி வந்தபோது இருட்டியிருந்தது. நகருக்குள் சன நெரிசல் உருவாகி கடைகள், உணவகங்களெல்லாம் மிகவும் பரபரப்பாகியிருந்தன. நாங்களும் இரவுச் சாப்பாடு அங்கேயே சாப்பிட்டுவிட்டு மற்றப் பேருந்தை எடுத்து எங்கள் அறைக்குப் போகலாம் என்று முடிவுசெய்தோம்.

அத்துடன் அடுத்த நாள் நாங்கள் டுப்ரோவ்னிக் நகரை விட்டுப் போகவும் திட்டமிட்டிருந்தோம். அந்த நகரில் தங்கிய நாட்களில் டுப்ரோவ்னிக் நகருக்குள் சுற்றிப்பார்க்கத் தனியாக நேரத்தை ஒதுக்க முடியவில்லை. அவ்வப்போது நகரிலிருந்து வெவ்வேறு இடங்களுக்குப் போகும்போதுதான் நகரின் சில பகுதிகளைப் பார்க்க முடிந்தது. எனவே அந்த மாலையில் ஓரளவாவது நகரில் எங்கள் நேரத்தைச் செலவழிக்கலாம் என்று யோசித்தோம். அதே நேரம் கடலில் நீச்சலடித்ததால் ஏற்பட்ட களைப்பு உடலைத் தளரவும் வைத்திருந்தது.

நகரின் பிரதான வீதியூடாகக் கொஞ்சத் தூரம் நடந்து ஓரளவு ஜன நடமாட்டம் குறைந்த இடமாக ஒரு குறுக்கு வீதியில் உணவகமொன்றைத் தேடிக்கொண்டோம்.கிரவேஷியாவின் தென்பகுதிப் பிராந்தியமான கொனாவ்லேயின் அதிகாரத் தலை நகரமாகச் செயற்படுகிறது டுப்ரோவ்னிக். எனவே, சுற்றுலாப் பயணிகளுக்கான பல ஹோட்டல்கள் மட்டுமல்லாமல் பல அரசத் திணைக்களக் கட்டடங்களும் அங்கே இருக்கின்றன. அதனால், உணவகங்களில் பெரும்பாலும் விலை அதிகமாகவே இருக்கிறது.

நாங்கள் சாப்பிட உட்கார்ந்த உணவகத்தினுள் ஒரு பக்கமாக விசாலமான தொலைக்காட்சியில் வோட்டர் போலோ விளையாட்டுப் போட்டியொன்றைக் காட்டிக் கொண்டிருந்தார்கள். அதன் முன்னால் கும்பலாக இருந்து சாப்பிட்டுக்கொண்டும், உற்சாகமாகச் சத்தம் போட்டுக் கொண்டும் இருந்தார்கள் பலர். நாங்கள் இதுவரை கண்ட கிரவேஷியக் கடற்கரைகள் பலவற்றிலும் அவ்விளையாட்டிடங்களைக் கண்டிருந்தோம், ஆனால், நேரடியாகவோ தொலைக் காட்சியிலோ பார்த்ததில்லை. முதல் தடவையாகப் பார்க்கக் கிடைத்தது.

எங்களுக்கு உணவு பரிமாற முதல் நாங்கள் கேட்டிருந்தபடி பியரும், பழரசமும் கொண்டுவந்து பரிமாறினார் ஒரு இளம் உணவகப் பணியாள். நான் தொலைக்காட்சியைக் காட்டி அந்த விளையாட்டு நிகழ்ச்சி நேரடியாக ஒளிபரப்பப்படுகிறதா என்று கேட்டேன். அது நேற்று நடந்த நிகழ்ச்சி என்று சொன்ன அவர் இன்றும் இரவு எட்டு மணிக்கு வோட்டர் போலோ இருக்கிறது என்று சொல்லி உணவகத்தின் ஒரு பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த விளம்பரத்தைக் காட்டினார். அது நடக்குமிடம் அங்கிருந்து அதிக தூரத்தில் இல்லை என்றும் சொன்னார்.

எப்போதுமே விளையாட்டில் ஆர்வமுள்ள கதிர், உடனே அந்த ஊழியரிடம் விபரங்களைக் கேட்க ஆரம்பித்தான். என்னைப் பார்த்து "நாங்கள் பார்த்திராத விளையாட்டு, போய்ப் பார்ப்போமே!" என்றான் கெஞ்சலாக. "உனக்குத் தான் களைக்கிறது கால் நோகிறது என்று சொல்லிக் கொண்டிருந்தாயே," என்று சொல்லிச் சிரித்தேன் நான்.

"பரவாயில்லை, சாப்பிட்டால் அதெல்லாம் போய்விடும். நாங்கள் இதைச் சுவீடனில் பார்க்கமுடியாதே," என்றான்.

"கட்டாயமாகப் போய்ப் பாருங்கள், டுப்ரோவ்னிக் நகர வீரர்கள் இவ்விளையாட்டில் உலகப் புகழ் பெற்றவர்கள். வருடாவருடம் இச்சமயத்தில்தான் இவ்விளையாட்டுக்கான முக்கிய போட்டியொன்று டுப்ரோவ்னிக் நகரில் நடக்கும். தவற விடாதீர்கள்!" என்று விளம்பரம் செய்வது போலச் சொன்னார் அந்தப் பணியாள்.


கிரவேஷியாவில் டுப்ரோவ்னிக் நகரம் வோட்டர் போலோ விளையாட்டுக்கு மிகவும் பிரபலமானது. "ஜக்" என்ற டுப்ரோவ்னிக் கழகம் வோட்டர் போலோவின் வைல்ட் லீக் இல் மிகவும் பிரபலமானது. [jug என்ற சொல்லின் அர்த்தம் தெற்கு]. 1925 1937 வரை ஒவ்வொரு வருடமும் இந்த நகரம் ஐரோப்பாவின் முதலிடத்தைப் பெற்று வந்திருக்கிறது. இதுவரை அக்கழகம் சுமார் 50 தடவைகள் வெவ்வேறு சர்வதேசப் போட்டிகளில் வென்று பதக்கங்களைப் பெற்றிருக்கிறது.


அன்றிரவு நடக்கவிருந்த போட்டியில் ஜக் கழகம் விளையாடவிருந்தது. அதனால், அங்கே கூட்டம் அதிகமாகவும், திறந்தவெளி விருந்து போல கோலாகலமாகவும் இருக்கும் என்று தெரிந்துகொண்டோம். வேகமாக இரவு உணவைச் சாப்பிட்டுவிட்டு கடற்கரை மைதானத்தை நோக்கி நடந்தோம். நிறையப் பேர்கள் அவ்விளையாட்டைப் பார்க்கப் போய்க்கொண்டிருந்ததால் விளையட்டு நடக்கவிருந்த நீச்சல் மைதானத்தை நோக்கி நடக்க ஆரம்பித்த நேரத்திலிருந்தே நாங்கள் சந்தோஷ இரைச்சலுள்ள கூட்டம் எங்களைச் சுற்றியிருந்தது. உணவகத்துப் பணியாளன் சொன்னதுபோலவே மைதானத்தை நெருங்க நெருங்க திருவிழா நாள் போன்ற உணர்வு எங்களைச் சுற்றிப் பெருகியிருந்தது.

ஆசியா, ஆபிரிக்கா, தென் மற்றும் மத்திய அமெரிக்கா ஆகிய நாடுகளில் பெரும்பாலும் அறியப்படாத விளையாட்டு வோட்டர் போலோ எனப்படும் நீருக்குள் விளையாடும் பந்து விளையாட்டு. ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் இடம்பெற்றிருக்கும் இவ்விளையாட்டு ஜப்பான், ஆஸ்ரேலியா, ஐக்கிய அமெரிக்கா, கனடா, ரஷ்யா, மற்றும் தென் ஐரோப்பிய நாடுகளில் பரவலாக விளையாடப்படுகிறது. ஐரோப்பாவில் கிரீஸ், ஹங்கேரி மற்றும் பால்கன் நாடுகளில் வோட்டர் போலோ பிரபலமானது.

இது 18ம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் முதல் தடவையாக ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த வில்லியம் வில்சன் என்ற நீச்சல் வீரரால் இங்கிலாந்தில் அறிமுகப்படுத்தப் பட்டது. ஆரம்பத்தில் வோட்டர் ரக்பி என்ற பெயருடன் விளையாடப்பட்ட இவ்விளையாட்டின் ஆரம்பகாலக் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியவரும் அவரே. அதைத் தொடர்ந்து இவ்விளையாட்டு ஐரோப்பிய நாடுகளிடையே அறிமுகமானது. 1900 இல் ஆண்களின் வோட்டர் போலோ அவ்வருடக் கோடை ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் ஒன்றாக கிரிக்கெட், கால்பந்து,

தொடர்ச்சி அடுத்தபக்கம்...





ரக்பி போன்றவற்றுடன் சர்வதேச ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டது.

நாங்கள் அங்கிருந்த கூட்டத்துக்குள் நெருக்கியடித்துக்கொண்டு வோட்டர் போலோ போட்டி நடக்கவிருந்த நீச்சல் குளத்தை வசதியாகப் பார்க்கக்கூடிய ஒரு இடத்தில் நிற்க இடம் ஏற்படுத்திக்கொண்டோம். கூட்டத்து நெருக்கமோ அடிக்கடி எங்களை நெருக்கி விழுத்துவதுபோலத் தள்ளிக்கொண்டே இருந்தது. அடிக்கடி மகனின் கையைப் பிடித்துக்கொண்டே அவனை எங்கும் அசையாமல் நிற்கச் சொல்லி எச்சரிக்க வேண்டியிருந்தது. அந்தக் கூட்டத்துக்குள் நாங்கள் ஒருவரை ஒருவர் தவறவிட்டால் தேடிப் பிடிக்கமுடியும் என்று தோன்றவில்லை.

ஒரு வழியாக விளையாட்டுத் தொடங்க ஆரம்பித்தது. ஒவ்வொரு பக்கத்திலும் 13 வீரர்கள் விளையாடத் தயாராக இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் கோல் காப்பாளராக இருக்க 6 பேர்கள் நீச்சல் குளத்துக்குள் போட்டியில் இறங்குகிறார்கள். வீரர்களின் கால்கள் நிலமட்டத்தில் தொடலாகாது என்பது விதி. அவர்கள் நீந்தியபடி கைகளில் தனக்கு முன்னால் பந்தைத் தள்ளிக்கொண்டு போகலாம் அல்லது இன்னொருவருக்கு எறியலாம். நீர்மட்டத்தின் கீழுள்ள நிலத்தை தொடாமலே விளையாட வேண்டும் என்ற விதி இருப்பதால் வீரர்கள் கால்களைச் சுழற்றிச் சுழன்று "எக்பீட்டர் கிக்" (eggbeater kick) என்ற முறை மூலம் துள்ளி வெளியே பாய்ந்து விளையாடுகிறார்கள்.

விளையாட்டைக் கண்காணிக்க நீச்சல் குளத்தின் இரண்டு பக்கங்களிலும் ஒவ்வொரு நீதிபதிகள் நிற்கிறார்கள். விளையாட்டின் உத்தியோகபூர்வ அதிகாரிகள் அவர்கள் மட்டுமே. அவர்களை அதிகம் கவனிக்க முடியாமல் வெளியேயிருந்து கூச்சல் காதைப் பிளந்தது. விளையாடுகிறவர்கள் அதை எப்படித்தான் தெரிந்துகொள்கிறார்களோ தெரியவில்லை.

எட்டு நிமிடங்களைக் கொண்ட நாலு பகுதியாக விளையாட்டு அமைந்திருக்கிறது. மிகவும் ஆக்ரோஷமாக விளையாடுவதால் வீரர்கள் வேகமாகக் களைத்துவிடுகிறார்கள். உடனே வெளியிலிருந்த ஒருவர் வந்து அவருக்காக விளையாட உள்ளிருப்பவர் வெளியேறுகிறார்.

அவ்வீரர்கள் விளையாடிக் கொண்டிருந்ததைக் காணும்போது அவர்கள் பிரத்தியேக திறமைகளும், பலமும் கொண்ட, எங்கோ நீருக்குள் வாழும் தேவர்கள் போலத் தெரிய ஆரம்பித்தார்கள். சாதாரண நீச்சல் திறமையுடன் அச்சமயம் அவர்களுக்குள் அந்த நீச்சல் குளத்துக்குள் இறங்கினால் உடலைப் பாகங்களாகத்தான் வெளியே எடுக்க முடியும். அத்தனை வேகமும், ஆக்ரோஷமுமாக அவ்விளையாட்டு நடந்துகொண்டிருந்தது.

வைல்ட் லீக் என்ற ஒரு போட்டி அமைப்பின் கோப்பைக்காக அங்கே போட்டிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இது பாதி உத்தியோகபூர்வமானதும் பாதி எவ்வித கட்டுப்பாடுகள் இல்லாததுமான போட்டிகள் என்று தெரிகிறது. இங்கே விளையாடும் நகரக் கழகங்களுக்கு இப்போட்டியில் கோப்பையை வெல்வது போரில் வெல்வது போன்ற கௌரவத்தைக் கொடுக்கிறது. எனவே பல தடவைகள் இப்போட்டிகள் சண்டையாக முடிந்திருக்கிறது என்றும் அறியக்கிடைத்தது. 1992, 1993, 1995ம் ஆண்டுகள் இப்போட்டிகள் நடந்தபோது கழக வீரர்கள், அவர்களின் ஆதரவாளர்களுக்குள் ஏற்பட்ட சண்டையால் .எல்லாம் கைமீறி எவருமே கோப்பையை வென்றதாக அறிவிக்கப்படவில்லை.


எதிர்பாராதவிதமாகக் கிடைத்த சந்தர்ப்பத்தில் வோட்டர் போலோப் பைத்தியங்களின் ஊரொன்றில் பார்த்த திருப்தியுடனும், மகிழ்ச்சியுடனும் அங்கிருந்து வெளியேறி எங்கள் தங்கும் விடுதிக்கு வந்து சேர்ந்தோம். விளையாட்டின் ஆக்ரோஷமும் சுற்றிவர இருந்த ரசிகர்களின் கோலாகலமான கூச்சலும் கிரவேஷியாவின் ஒரு கலாச்சார அங்கமாக இப்போதும் எங்கள் மனதில் நிற்கிறது. **தொடரும்**

# எதியோப்பியாவில் வீசும் புதிய தென்றல்

"ஆபிரிக்காவின் கவலைக்குரிய கொம்பு" என்றழைக்கப்படும் பிராந்தியத்தில் நீண்ட காலமாக போர்களில் ஈடுபட்டிருக்கும் சோமாலியா, எதியோப்பியா, எரித்திரியா, ஜூபூத்தி ஆகிய நாடுகள் இருக்கின்றன. எதியோப்பியாவும் எரித்திரியாவும் 1998 2000 இல் தங்களுக்குள் போரிட்டார்கள். அப்போர் முடிவடைந்தாலும் அவர்களிடையே நிலையான சமாதானம் நிலவவில்லை.

எதியோப்பிய எரித்திரிய எல்லைகளில் 2018 வரையில் அடிக்கடி ஏதாவது பிரச்சினைகள் உண்டாகின. அவைகள் அந்த நாடுகளிடையே மீண்டும் போரை உண்டாக்கும் என்ற நிலைமையே நீடித்து வந்தது. இரண்டு நாடுகளும் மற்றைய நாட்டைத் தங்களது உள்நாட்டுப் பிரச்சினைக்குள் தலையிடுவதாகக் குற்றஞ்சாட்டி வந்தன. அத்துடன் நீண்ட காலமாக உள்நாட்டுப் போர்களிலால் சீரழிந்துகொண்டிருக்கும் சோமாலியாவுக்குள் தத்தம் ஆதரவுக் குழுவை வைத்துப் போரிட்டுக்கொண்டும் இருந்தன.

இவ்வருட ஆரம்பத்தில் எத்தியோப்பியாவில் நிலைமை மாறியது. அங்கே வாழும் பெரும்பான்மையினரான ஒரோமோ இனத்தினரைச் சேர்ந்த அபிய் அஹ்மத் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டார். அதுவரை



©NYSTROM Herff Jones Education Division

உலக யன்னல்

நாட்டை ஆண்டு வந்த இராணுவக் குழுக்கள் நாட்டின் மீதான தங்கள் பிடி தளருவதை உணர்ந்து ஒரோமோ இனத்தைச் சேர்ந்த அபிய் அஹ்மதை அப்பதவியில் அமர்த்தினார்கள்.

புதியதாகப் பதவியில் அமர்ந்த அபிய் அஹ்மது தனது நாட்டின் அதிகாரத்தை மாற்றியமைக்க ஆரம்பித்ததுடன், சிறையில் அடைக்கப்பட்டிருந்த பல எதிர்க்கட்சியினரையும் விடுவித்தார். பக்கத்து நாடான எரித்திரியாவுடனும் சமாதானம் செய்துகொள்ளப் பேச்சுவார்த்தைகள் நடாத்த ஆரம்பித்தார். அதனால் எதியோப்பியாவுக்குள்ளும், எரித்திரியாவுக்குள்ளும் மட்டுமன்றி பக்கத்து நாடுகளிலும் பல மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்திருக்கின்றன.

நீண்டகாலமாக உலகத்துக்கே மூடப்பட்டிருந்த நாடான எரித்திரியாவின் சர்வாதிகாரி இஸாயா அபெவெர்க்கி தனது மக்களுக்கு உரிமைகள் கொடுக்கப்போவதாக அறிவித்திருக்கிறார். இம்மாத ஆரம்பத்தில் பக்கத்து நாடான ஜூபூர்த்தியுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தி சமாதான ஒப்பந்தம் செய்திருக்கிறார்.

அடுத்ததாக அபிய் அஹ்மதுவுடன் கைகோர்த்துக்கொண்டு எரித்திரிய சர்வாதிகாரி தங்களது நாடுகளிடையே நிலவிய போர் நிலைமை நிறைவுபெற்றுவிட்டதாக அறிவித்ததுடன் இவ்விரண்டு நாடுகளிடையேயான மூடப்பட்டிருந்த எல்லையைத் திறந்துவிடுவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். எரித்திரியா எதியோப்பியாவுக்கிடையேயான சமாதான ஒப்பந்தம் விரைவில் சவூதி அரேபியாவில் கைச்சாத்திடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதே சமயம் 1973 இல் எதியோப்பிய இராணுவ அரசுக்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட ஒரோமோ இனத்தினரின் விடுதலை இயக்கமான ஔிலிதி மீதான தடை நீக்கப்பட்டிருக்கிறது. அதைத் தவிர நாட்டில் வாழும் மேலும் இரண்டு சிறுபான்மை இனத்தினர்களின் விடுதலை அமைப்புக்கள் மீதான தடையும் நீக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் சகல இனத்தினருக்கும் உரிமைகள் கிடைப்பதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடாத்தி அரசியல் சட்டங்களை மாற்றியமைக்கவிருப்பதாக அபிய் அஹமது உறுதியளித்திருக்கிறார்.

இதனால் இதுவரை பக்கத்து நாடான எரித்திரியாவில் வாழ்ந்துவந்த சுமார் 1,500 ஒரோமோ விடுதலை இயக்கப் போராளிகள் தமது நாட்டுக்குத் திரும்பியிருக்கிறார்கள். தலைநகரான அடிஸ் அபாபர்வின் முக்கிய சதுக்கத்தில் கூடிப் பல்லாயிரக்கணக்கான ஒரோமோ மக்கள் தங்களது போராளிகளை வரவேற்றிருக்கிறார்கள்.

நிலப்பரப்பில் ஆபிரிக்காவின் 10 வது பெரிய நாடாக இருக்கும் எதியோப்பியா மக்கள் தொகையைப் பொறுத்தவரை ஆபிரிக்காவின் இரண்டாவது பெரிய நாடு. அத்துடன் உலகின் ஆரம்பகால மனிதர்கள் வாழ ஆரம்பித்த நாடு எனவும் குறிப்பிடப்படுகிறது. உலகின் முதலாவது கலாச்சாரம் ஆரம்பித்த நாடான எத்தியோப்பியாவின் நடப்பவைகள் ஆபிரிக்காவின் தலையெழுத்தை மாற்றுபவையாக இருக்கும் என்றே கவனிக்கப்படுகிறது. அதனால், புதிய பிரதமர் அபிய் அஹமதுவின் ஆட்சியில் கொண்டுவரப்படவிருக்கும் மாற்றங்கள் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகின்றன.

# வறட்சிக் காலத் தீவன மேலாண்மை! அசோலா... ஊறுகாய்ப் புல்... மர இலைகள்

போதிய மழைவீழ்ச்சி இல்லை, அதிக வெப்பம் என நிலங்கள் எல்லாம் காய்ந்து கருகிப்போயுள்ளன. மேய்ச்சல் நிலங்களும் காய்ந்து போய்க் கிடப்பதால், கால்நடை வளர்ப்பவர்கள் பெரும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். வன்னியின் பெரும் குளங்களிலும் போதிய நீரில்லாமல் நெல் விளைச்சலும் சரியாக நடக்காமல் போனதால், வைக்கோலுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இப்படிப்பட்ட, இக்கட்டான சூழ்நிலையைச் சமாளிக்க முடியாமல், பெரும்பாலான விவசாயிகள், ஆடு மாடுகளை வந்த விலைக்கு விற்பனை செய்து வருகிறார்கள்.

கால்நடை வளர்ப்பவர்கள், இப்படிப்பட்ட வறட்சிக் காலங்களை எப்படிச் சமாளிப்பது என்று, அது தொடர்பான நிபுணர்களுடன் பேசி இந்தபகுதியைதயார் செய்திருக்கிறோம்.



கோ-4 தீவனப்புல்

### அசைபோடாத பிராணிகளுக்குத்தான் மாவுச்சத்து


மனிதர்கள் வளர்க்கும் கால்நடைகளில் அசைபோடுபவை, அசைபோடாதவை என இரண்டு வகைகள் உண்டு. ஆடு மாடு போன்றவை அசைபோடுபவை. பன்றி, முயல் போன்றவை அசைபோடாதவை. அசைபோடும் பிராணிகளுக்குச் செரிமானத்துக்காக வயிற்றில் (இரைப்பை) நான்கு பாகங்கள் இருக்கும். அசைபோடாத பிராணிகளில் ஓர் இரைப்பை மட்டுமே செரிமானத்துக்கான உறுப்பு. அதனால், அசைபோடும் பிராணிகளுக்குப் பசுந்தீவனத்தை அதிகமாகவும் மாவுச் சத்துள்ள தீவனங்களைக் குறைவாகவும் கொடுக்க வேண்டும். அசைபோடாத பிராணிகளுக்கு மாவுச்சத்துள்ள தீவனத்தை அதிகமாகவும் பசுந்தீவனத்தைக் குறைவாகவும் கொடுக்க வேண்டும். இதுதான் அடிப்படை விதி.

### அசைபோடும் பிராணிகளுக்குப் பழைய சோறு ஆகாது


அசைபோடும் பிராணிகள் சாப்பிடும் பசுந்தீவனம், முதலில் சிறு வயிற்றுப் பகுதிக்குச் செல்லும். சிறு வயிற்றில் அதிகமாக இருக்கும் நன்மை செய்யும் பக்டீரியாக்கள், தீவனத்தைச் செரிக்கச் செய்து உருண்டையாக்கி மீண்டும் வாய்ப்பகுதிக்கே அனுப்பிவிடும். அதைத்தான் ஆற, அமர பிராணிகள் மீண்டும் வாயில் மெல்லுகின்றன. இதுதான் அசைபோடுதல்.

இப்படி மென்று உணவுப்பொருளை நன்கு அரைத்து, மீண்டும் அவற்றை மாவுப்பொருளாக வயிற்றுக்குள் அனுப்பும்போது முழுமையாகச் செரித்துவிடும்.

பசுந்தீவனம் சாப்பிடும் போதுதான் இச்செயல் நடக்கும். ஆனால் அரிசி, பழையசோறு ஆகிய மாவுப் பொருள்களைக் கொடுத்தால், வயிற்றின் முதல் பகுதிக்கு அவை சென்றதுமே அங்கு, ஹைட்ரோகுளோரிக் அமிலம் சுரந்து, வயிற்றிலுள்ள நன்மை செய்யும் பக்டீரியாக்களை அழித்துவிடும். இதனால், செரிமானம் ஆகாது. வயிறு ஊதி பெருத்து, மாடுகள் இறந்து போகக்கூட வாய்ப்புகள் உண்டு. அதனால், பசுந்தீவனம் இல்லையே என்று கண்டதையும் தீவனமாகக் கொடுக்கக்கூடாது.



அசோலா



அகத்தி

### கைகொடுக்கும் மரப்பயிர்கள்

வறட்சிக் காலத்தில் சவுண்டல், அகத்தி, கிளிசெரியா, கல்யாண முருங்கை, கொடுக்காப்புளி ஆகிய மரங்களின் இலைகள், காய்களைப் பசுந்தீவனமாகக் கொடுக்கலாம். இதனால், 30 சதவிகித அளவு புரதச்சத்து கிடைத்துவிடும். இந்த இலைகளைப் பறித்து அப்படியே கொடுக்காமல், 8 மணி நேரம் வெயிலில் காய வைத்து, 90 சதவிகித அளவு நீர்ச்சத்து குறைந்தவுடன் கொடுத்தால் எளிதில் செரிமானமாகும். காயவைத்துக் கொடுக்கும்போது புளிப்புச் சுவை கலந்த வாசனை வெளிப்படுவதால் ஆடு மாடுகள் விரும்பிச் சாப்பிடும். ஓர் ஆட்டுக்கு 250 கிராம் முதல் 400 கிராம் வரை இலைகளைக் கொடுக்கலாம். ஒரு மாட்டுக்கு ஒரு கிலோ வரை கொடுக்கலாம்.

### வறட்சியைத் தாங்கும் தீவனப் பயிர்கள்

இப்பில் இப்பில், வாதநிவாரணி, கோ1, கோ2, கோ3, கோ4, கோ5, கோ 6, கோ.எஃப்.எஸ்29 ஆகிய தீவனப் பயிர்களுக்கு அதிகத் தண்ணீர் தேவைப்படாது. ஓரளவு தண்ணீர் வளம் இருக்கும்போதே இவற்றைச் வளர்த்து வந்தால், வறட்சிக்காலங்களில் சில மாதங்கள் வரை தாக்குப்பிடிக்க முடியும். இவை அதிகமாகக் கிடைக்கும் காலங்களில் பதப்படுத்தி ‘ஊறுகாய்ப் புல்’ தயாரித்து வைத்தால், வறட்சிக் காலங்களை எளிதாகச் சமாளிக்க முடியும். அதேபோல உலர் தீவனமான வைக்கோலையும் தரம் உயர்த்தி வைத்துகொள்ளலாம். வறட்சிக் காலத்தில் கைகொடுக்கும் இன்னொரு தீவனம் அசோலா. குறைவான தண்ணீரிலேயே வளரும் இதை, உற்பத்தி செய்து கால்நடைகளுக்குக் கொடுக்கலாம்.

### தேங்கிய நீர் குடிக்கக்கூடாது

கால்நடைகளுக்கு எப்போதும் சுத்தமான குடிநீர் கொடுக்கவேண்டியது அவசியம். தேங்கிக்கிடக்கும் குட்டை நீரை ஒருபோதும் குடிக்க அனுமதிக்கக் கூடாது. குட்டைத் தண்ணீரில் நத்தைகள் உருவாக்கும் தட்டைப்புழுக்கள் இருக்கும். இந்தத் தண்ணீரைக் குடிக்கும்போது புழுக்கள் வயிற்றுக்குள் சென்று நோய்களை உருவாக்க வாய்ப்புண்டு. கிணற்றுத் தண்ணீரைக்கூட வடிகட்டிதான் கொடுக்க வேண்டும். சாதாரணக் காலத்தில் கால்நடைகளுக்கு, ஒருநாளைக்கு 3 வேளை தண்ணீர் வைக்க வேண்டும். கோடைக் காலங்களில் 6 வேளை வைக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் பழைய தண்ணீரைக் கொட்டி விட்டுத்தான் புதிய தண்ணீரை தொட்டியில் ஊற்ற வேண்டும்.

வறட்சிக் காலங்களில், கால்நடைகளுக்குத் தாது உப்புப் பற்றாக்குறை ஏற்படும். கால்நடை வைத்தியரின் ஆலோசனைப்படி செறிவு குறைக்கப்பட்ட உப்பை வழங்கலாம். இந்த முறைகளைப் பின்பற்றினால் வறட்சிக்காலங்களில் கால்நடைகளைக் காப்பாற்ற முடியும்.

### பல்லாண்டுத் தீவனம்

இப்பில் இப்பில் தானாகவே பரவக்கூடிய பயிர். ஒரு கன்றை நட்டால் போதும். ஒரே ஆண்டில் நன்கு வளர்ந்துவிடும். விதைகள் விழுந்து மிக வேகமாகப் பரவிவிடும். வேலிமசாலில் 24 சதவிகிதம் வரை புரதச்சத்து உண்டு. ஒருமுறை இதை நட்டால் போதும். வெட்ட வெட்ட வளர்ந்துகொண்டே இருக்கும். அதனால்தான் இதைப் ‘பல்லாண்டுத் தீவனம்’ என்பார்கள். விதைத்த இரண்டே மாதங்களில் மூன்றடி உயரத்துக்கு வளர்ந்துவிடும். இதைத் தண்டோடு சேர்த்து நறுக்கிக் கொடுத்தால், ஆடு மாடுகள் விரும்பிச் சாப்பிடும்.

கோ1, கோ2, கோ3, கோ4, கோ 5, கோ6 ஆகிய தீவனப்பயிர்களில் தாதுக்கள் அதிகமுள்ளன. இவற்றைச்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

சாப்பிடுவதால், கால்நடைகளின் தாது உப்புத் தேவை பூர்த்தியாகும். கோ.எஃப்.எஸ்29 ரகத் தீவனப்பயிர் ஓரளவு மழைக் கிடைத்தாலே நன்கு வளர்ந்துவிடும். இதைப் பச்சையாகக் கொடுக்காமல், வெயிலில் காயவைத்து வைக்கோல் போல மாற்றி, உலர் தீவனமாகவும் கொடுக்க வேண்டும். இதில் சுண்ணாம்பும், கார்போஹைட்ரேட்டும் இருப்பதால், பாலில் கொழுப்புச்சத்து கூடும்.

### மாற்றுத் தீவனம் அசோலா

நீர் பாசி வகையைச் சேர்ந்த அசோலா கால்நடைகளுக்கு முக்கியமான மாற்றுத் தீவனமாகும். 200க்கும் மேற்பட்ட பாசி வகைகள் இருக்கின்றன. இதில் உணவாக பயன்படும் பாசிகளில் அசோலாவும் ஒன்று. 30 சதவிகிதம் புரதச்சத்தும், 10-சதவிகிதம் கார்போஹைட்ரேட்டும் இதில் உள்ளன. சிறிய பரப்பிலேயே குறைவான தண்ணீரைப் பயன்படுத்தி அசோலா வளர்க்கலாம்.

9 அடி நீளம், 3 அடி அகலத்தில், பொலித்திலீன் ஷீட் கொண்டு தொட்டி போல அமைக்க வேண்டும். இதில், 10 கிலோ மண், 5 கிலோ பசுஞ்சாணம் ஆகியவற்றைப் பரப்பி, அரை அடி உயரத்துக்குச் சுத்தமான தண்ணீரை நிரப்ப வேண்டும். பிறகு, 30 கிராம் ராக் பாஸ்பேட்(பாறைத்தூள்) போட்டு நன்கு கலக்கி விட வேண்டும். பிறகு, அரைக்கிலோ அசோலா பாசியை இட வேண்டும். தண்ணீரின் அளவு குறையாமல் பராமரித்து வந்தால், பத்து நாட்கள் கழித்துத் தினமும் இரண்டு கிலோ அளவு அசோலா கிடைக்கும். இதை மரத்தடியில் வளர்ப்பது நல்லது.

ஓர் ஆட்டுக்கு தினமும் 150 கிராம் வரை அசோலா கொடுக்கலாம். 10 லிட்டர் பால் கறக்கும் மாட்டுக்கு தினமும் அரைக்கிலோ அசோலா கொடுக்கலாம். ஆரம்பத்தில் மாடுகள் இதைச் சாப்பிடாமல் மறுத்தால், பாசியை நன்கு கழுவி உலர்த்திக் கொடுக்கலாம். கொஞ்சம் கொஞ் சமாக மற்ற தீவனங்களோடு சேர்த்துக் கொடுத்தும் மாடுகளை சாப்பிடப் பழக்கலாம்.

### பால் கறப்பதற்கு முன், அடர்தீவனம்

கறவை மாடுகளுக்குத் தீவனம் கொடுப்பதிலும் கவனமாக இருக்க வேண்டும். கறவை மாடுகளுக்கு அடர்தீவனம் அவசியமான ஒன்று. ஆனால், கறவை மாடுகளுக்குப் பால் கறப்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பே, அடர்தீவனத்தைக் கொடுத்துவிட வேண்டும். அடர்தீவனத்தைப் புட்டுப் பதத்தில் பிசைந்துதான் கொடுக்க வேண்டும்.

### மதிப்புக் கூட்டப்பட்ட வைக்கோல்

உலர்தீவனத்தில் முதன்மையானதாக இருப்பது வைக்கோல். வைக்கோலை மதிப்புக்கூட்டிக் கொடுத்தால் முழுமையான பலன் கிடைக்கும். 10 கிலோ கொள்ளளவு உள்ள பிளாஸ்டிக் பை முழுவதும் வைக்கோலால் நிரப்ப வேண்டும். ஒரு கிலோ கல் உப்பை, ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து வைக்கோல்மீது கொஞ்சம் கொஞ் சமாகத் தெளிக்க வேண்டும். அடுத்து, ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிலோ வெல்லத்தைக் கரைத்துத் தெளித்துப் பிளாஸ்டிக்பையை இறுக்கமாகக் கட்டி, நிழலில் 12 நாட்கள் வைத்து, பிறகு மாடுகளுக்குக் கொடுக்கலாம். இப்படி மதிப்புக்கூட்டப்பட்ட வைக்கோலில் ஒருவித நறுமணம் வீசும். அதனால் கால்நடைகள் மிச்சம் வைக்காமல் விரும்பி எடுத்துக்கொள்ளும்.

### ஊறுகாய்ப் புல்

கடுமையான வறட்சிக் காலத்தில் கால்நடைகளுக்குக் கொடுப்பதற்காகப் பதப்படுத்தி வைக்கப்படும் தீவனம் தான் ஊறுகாய்ப் புல். தீவனச் சோளம்,கோ1, கோ2, கோ3, கோ4, கோ5, கோ6, கினியா புல், கொழுக்கட்டைப் புல், மற்றும் இதர புல் வகைகள் என கிடைப்பவற்றை ஊறுகாய்ப் புல் லாகப் பதப்படுத்தி வைக்கலாம்.

6X6 அடி சதுரம், 3 அடி ஆழம் என்ற அளவில் குழி எடுத்துக்கொள்ள வேண்டும். குழி மேடான இடத்தில் இருக்க வேண்டும். குழிக்குள் கால் அடி உயரத்துக்கு மணலைப் பரப்பி, அதன் மீது கொஞ்சம் சுண்ணாம்பு பொடியைத் தூவ வேண்டும். அதில் ஓர் அடி உயரத்துக்குப் புல் வகைத் தீவனத்தைப் பரப்ப வேண்டும். அதன் மேல் பயறு வகைத் தீவனத்தைப் பரப்ப வேண்டும். அதுக்கும் மேல் உலர் வகைத் தீவனத்தைப் பரப்ப வேண்டும்.

பிறகு, 4 லிட்டர் தண்ணீரில் ஒரு கிலோ கல் உப்பைக் கரைத்துத் தீவனப்பயிர்கள் மீது கொஞ்சம் கொஞ் சமாகத் தெளிக்க வேண்டும். அது அடி வரை இஞ்சியவுடன், 4 லிட்டர் தண்ணீரில் ஒரு கிலோ நாட்டுச் சர்க்கரையைக் கரைத்துத் தெளிக்க வேண்டும். பிறகு, ஒரு பாலித்தீன் ஷீட் கொண்டு குழியை மூடி, ஷீட் நகராத அளவுக்கு மண், சாணம் கொண்டு மெழுகிவிட வேண்டு: இப்படி வைத்தால் 60 நாட்களில் ஊறுகாய்ப் புல் தயாராகிவிடும்.

பசுந்தீவனம் கிடைக்கும் காலங்களில் இப்படி பல குழிகள் எடுத்து பதப்படுத்தி வைத்துவிட்டால், அவற்றை வறட்சிக் காலங்களில் பயன்படுத்திச் சமாளிக்கலாம். ஊறுகாய்ப் புல்லை வெளியே எடுத்துவிட்டால் அதிக நாட்கள் வைக்க முடியாது. அதனால், விரைவாகப் பயன்படுத்தி விட வேண்டும். முற்றிய, தடிமனான தீவனச்சோளத் தண்டுகளைக்கூட இம்முறையில் பதப்படுத்தலாம். ●





வேலிமசால்

## ஒபெக், அமெரிக்காவின் கைப்பாவையா?

"சவூதி அரேபியாவும், எமிரேட்ஸும் சேர்ந்து "ஒபெக்" அமைப்பை ஐக்கிய அமெரிக்காவின் கைப்பொம்மை யாக்கி விட்டனர். ஒபெக் தனது அங்கத்துவர்களின் நலனுக்காக செய்றபடுகிறது என்பதில் இனியும் அதிக நம்பிக்கை ஏதும் இல்லை," என்று பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டியிருக்கிறது அங்கத்துவ நாடுகளில் ஒன்றான ஈரான்.

உலகின் எண்ணெய் வள நாடுகளிடையே கூட்டுறவை ஏற்படுத்த 1960 இல் ஈரான், ஈராக், சவூதி அரேபியா, வெனிசுவேலா, குவெய்த் ஆகிய நாடுகள் பாக்தாத் நகரில் ஏற்படுத்திக்கொண்ட ஒன்றியம்

**உலக யன்னல்**

ஒபெக் அமைப்பு. அல்ஜீரியா, அங்கோலா, கொங்கோ, கபொன், கத்தார், ஈகுவடோர், ஈகுவடோரியன் கயானா, நைஜீரியா, எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் அவ்வமைப்பில் வெவ்வேறு ஆண்டுகளில் சேர்ந்துகொண்டன.

ஒன்றிணைத்து செயற்பட்டுக் குறிப்பிட்ட




அளவு பெற்றோலியத்தை மட்டும் உறிஞ்சி சர்வதேச அளவில் விற்பதன் மூலம் உலகப் பெற்றோலிய விலையைத் தாங்கள் தீர்மானிக்கலாம், அதன் மூலம் தத்தம் வருமானத்தையும் பெருக்கிக்கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் செயற்படுவதே ஒபெக்கின் நோக்கங்களில் முக்கிய மானது. சில சமயங்களில், உதாரணமாக 1970 களில், தங்கள் குறிக்கோளில் ஒபெக் வெற்றிபெற்று எண்ணெய்த் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, மிக உயர்ந்த விலையில் விற்கவும் செய்தது.

ஆனால், தங்கள் பொருளாதார வளர்ச்சிக்கான சக்திக்குப் பெற்றோலியப் பொருட்களில் தங்கியிருக்கும் உலகின் சக்திவாய்ந்த நாடுகள் சுதாரித்துக்கொண்டு ஒபெக் நாடுகளிடையே அரசியல் பிளவு களை ஏற்படுத்தி மீண்டுமொருமுறை அவர்கள் சர்வதேசத்தைத் தங்களிஷ்டப்படி இயக்க முடியாமல் செய்து முடக்கிவிட்டன.

சில மாதங்களுக்கு முன்பு ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தத்தை முறித்துக் கொண்ட அமெரிக்கா தனது பொருளாதாரப் பலத்தைப் பாவித்து உலக நாடுகள் எதையும் ஈரானுடன் வர்த்தகம் செய்யாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது தெரிந்ததே. வர்த்தகத் தடைகளால், ஈரான் தனதுக்கு ஒபெக்கால் அனுமதிக்கப்பட்ட எண்ணெயை விற்க முடிவதில்லை. அதனால் அனுமதிக்கப்பட்ட அளவு எண்ணையையும் உறிஞ்ச முடியாது, புதிய முதலீடுகளையும் செய்ய முடியாத நிலைமையில் இருக் கிறது.

ஈரான் சர்வதேசச் சந்தைக்குக் கொடுக்க முடியாத எண்ணெயை சவூதி அரேபியாவும், ரஷ்யாவும் தமது எண்ணெய் வயல்களில் உறிஞ்சிச் சர்வதேசச் சந்தையில் விற்று வருவதாக ஈரான் குற்றஞ்சாட்டுகிறது. அந்த நடவடிக்கைக்குப் பக்கபலமாக அமெரிக்கா இருப்பதால் ஒபெக் அமைப்பு அவர்களுடைய கைப்பாவையாக்கப்பட்டிருப்பதாக ஈரான் குறிப்பிடுகிறது. ●




# ஏற்றுமதித் தொழிலை எளிதாக விளக்கும் ஃப்ளோ சார்ட்!

பிசினஸ் என்பது எப்போதுமே சவால்கள் நிறைந்ததுதான். ஏற்றுமதி தொழிலும் அப்படித்தான். அவற்றில் பல விஷயங்களை நான் உங்களுக்குக் கடந்த வாரங்களில் விரிவாகக் கூறி வந்திருக்கிறேன். அவற்றைச் சுருக்கமாக விளக்கும் ஃப்ளோ சார்ட் ஒன்றை இங்கே கொடுத்துள்ளேன். இதன்மூலம் ஷிப்மென்டுக்கு முன்பும், ஷிப்மென்டுக்குப் பிறகும் ஏற்றுமதித் தொழிலில் செய்ய வேண்டிய விஷயங்களை 15 ஸ்டெப்களில் நீங்கள் எளிதில் புரிந்துகொள்ள முடியும்.

**ஷிப்மென்டுக்கு முன்**


1. முதலில் என்ன பொருளை ஏற்றுமதி செய்யப்போகிறீர்கள் என்பதை முடிவு செய்துவிட்டு இறக்குமதியாளரைக் கண்டுபிடிக்க வேண்டும்.
2. இறக்குமதியாளரிடம் தெளிவாக பிசினஸ் பற்றிப் பேச வேண்டும். இறக்குமதியாளரிடம் கேட்க வேண்டிய சில முக்கியமான கேள்விகளை முன்பே கூறியிருக்கிறேன். அவற்றை விளக்கமாகப் பேசிய பிறகு பர்ச்சேஸ் ஆர்டரை உறுதி செய்ய வேண்டும்.
3. அடுத்து, இறக்குமதியாளரிடம் பேமெண்ட் முறைகள் பற்றிப் பேச வேண்டும். எல்சி, அட்வான்ஸ் இரண்டில் ஒன்றுக்கு ஓகே சொல்ல வேண்டும். அடுத்து பொருள் கொள்முதலுக்குத் தயாராகிவிடலாம்.
4. எல்சி, அட்வான்ஸ் இரண்டுக்கும் ஒப்புக்கொள்ளவில்லை எனில், பிற பேமெண்ட் முறைகளுக்கு இசிஜிசியிடம் பிரீமியம் எடுத்துக் கொள்ள வேண்டும். இசிஜிசியும் சரிவரவில்லை எனில், வேறு இறக்குமதியாளரை அணுகவும். (பேமெண்ட் முறைகள், இசிஜிசி பற்றியெல்லாம் விரிவாக ஏற்கெனவே சொல்லியுள்ளேன்)
5. அடுத்து, பொருள்களைக் கொள்முதல் செய்ய வேண்டும். இறக்குமதியாளர் கேட்கும் தரத்திலும், லாபகரமானதாக இருக்கும் வகையிலும் கொள்முதல் செய்ய வேண்டும்.
6. பொருளைக் கொள்முதல் செய்த பிறகு, தேவையான ஆவணங்களையும், தேவையான சான்றிதழ்களையும் தயார் செய்ய வேண்டும்.
7. ஆவணங்களை கஸ்டம்ஸ் ஹவுஸ் ஏஜென்ட் வசம் கொடுத்துவிட்டால் மற்ற ஏற்பாடுகளை அவர் செய்வார்.
8. பின்னர், பொருள்களைப் பேக்கிங் செய்து, உங்களுடைய இடத்திலிருந்து துறைமுகத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.
9. துறைமுகத்தில் பொருள்கள் கன்டெய்னரில் ஏற்றப்பட்டு, அது கப்பலில் ஏற்றப்படும்.
10. கப்பல் நம்முடைய துறைமுகத்திலிருந்து இறக்குமதியாளரின் துறைமுகத்துக்குச் செல்லும்.

**ஷிப்மென்ட்டுக்குப் பின்**


11. கஸ்டம்ஸ் ஹவுஸ் ஏஜென்டிடமிருந்து எக்ஸ்போர்ட்டர் காப்பி, பில் ஆஃப் லோடிங் உள்ளிட்ட ஆவணங்களைப் பெற்று, அதில் விவரங்கள் அனைத்தும் சரியாக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும்.
12. பின்னர், அந்த ஆவணங்களை நகல் எடுத்துக்கொண்டு, ஒரிஜினல் ஆவணங்களை வங்கியில் கொடுக்க வேண்டும்.
13. நகல் எடுத்த ஆவணங்களைத் தொழில் வளர்ச்சிக்காகவும் சட்ட நடைமுறைகளுக்காகவும் அலுவலகத்தில் நிர்வகிப்பது அவசியம்.
14. அந்த ஆவணங்களை வைத்து ஜி.எஸ்.டி வரிக் கணக்கை, ஆன்லைன் மூலமாகத் தாக்கல் செய்ய வேண்டும்.
15. வங்கியில் சமர்ப்பித்த ஆவணங்களானது, இறக்குமதி யாளரின் வங்கிக்குச் சென்று, அதை அவர் பெற்றுக் கொண்டு சரக்கை எடுத்தபிறகு, பணம் உங்கள் கணக்குக்கு வரும். ஆவணங்களையும், வருமானத்தையும் வைத்து நம் தொழிலின் நிதிநிலையை நிர்வகிக்க வேண்டும்.


எந்தப் பொருளை ஏற்றுமதி செய்தாலும், இறக்குமதியாளர் யாராக இருப்பினும் மேற்கண்ட 15 ஸ்டெப்களின் அடிப்படையில்தான் செய்ய வேண்டும். **(ஜெயிப்போம்)**

Before Shipment




After Shipment




## வாட்ஸப் வதந்திகளும் கொலைகளும்

கடந்துபோன கோடையில் ஆகக்குறைந்தது 30 பேர்களாவது வாட்ஸப் குழுக்களில் பரப்பப்படும் வதந்திகளால் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று *இந்தியப் பொலீஸ் அறிக்கை தெரிவிக்கிறது.* குறிப்பிட்ட ஒரு பிராந்தியத்தில் பிள்ளைகளைப் பாலியல் இச்சைக்குப் பயன்படுத்துபவர் திரிகிறார் என்பது முதல் பசுக்களைக் கொல்பவர் திரிகிறார் போன்ற வதந்தியால் ஊர்மக்கள் தமது ஊர்களில் காணும் புதிய முகங்கள் யாரையாவது பிடித்து அடித்துக் கொன்றிருக்கிறார்கள்.

கடந்த பங்குனி மாதத்தில் இப்படியான வதந்தியொன்று தமிழ் நாட்டில் பிள்ளைகளைப் பாலியல் இச்சைக்குப் பயன்படுத்துகிறவர்கள் சுமார் 200 பேர்கள் வந்திருப்பதாகப் பரவியது. அதனால் அங்கே வேலைக்காக வந்திருக்கும் வட இந்தியாவின் ஏழைத் தொழிலாளர்களை மக்கள் கும்பலாகச் சென்று தாக்கினார்கள்.

*இப்படியான வதந்திகள் இதேபோன்ற விளைவுகளை* முன்பும் உண்டாக்கியிருப்பினும் சுமார் 200 மில்லியன் பாவிப்பாளர்களைக் கொண்ட வாட்ஸப் தளத்தின் வரவினால் பல தடவைகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் நடந்திருக்கிறது. அதனால், இந்திய அரசு வாட்ஸப் தளத்தின் பாவிப்பில் சில மாற்றங்களை உண்டாக்கும்படி பணித்திருக்கிறது.

இப்படியான வதந்திகளைப் பரப்பிவருகிறவர்கள் யாரென்று அறிய முடியாத விதமாக வாட்ஸப் செய்திகள் குறியீடுகளால் மறைக்கப்பட்டிருக்கிறது. இந்திய அரசின் ஆணைக்கேற்ப வாட்ஸப் நிறுவனம் செய்திருக்கும் மாற்றங்களில் இவ்விடயத்தில் மற்றும் இன்னும் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

உலக யன்னல்

## ஆட்டோ சங்கரின் கதை

# அப்பாவி to அடப்பாவி - பிள்ளையார் சுழி போட்ட போலீஸ்காரரர்!

### இந்தியாவை உலுக்கிய சீரியல் கில்லரின் மரண வாக்குமூலம்




பிறக்கும்போது யாரும் மகான்களாக பிறப்பதில்லை. கேடிகளாகவும் பிறப்பதில்லை. எல்லாருமே 'குழந்தைகளா'தான் பிறக்கிறார்கள். சம்பவங்கள், சூழ்நிலை, படிப்பு, அறிவு, அனுபவம், அதிர்ஷ்டம் எல்லாம் மொத்தம் சேர்ந்துதான் ஒருத்தனை எப்படியெல்லாமோ திசை மாற்றுகிறது. நான்கூட அப்படித்தான் மாற்றப்பட்டேன்.

1975! என்னோட வாழ்க்கை திசை திரும்பிப் போனது இந்த வருஷம்தான். ஜெகதீஸ்வரி கூட எனக்கு இருந்த காதலுக்கு ரெண்டு பக்கத்திலிருந்தும் எதிர்ப்பு! இரண்டு பேர் வீட்டிலிருந்தும் துரத்திட்டாங்க; சரியா சொல்லணும்னா முச்சந்தியிலே நின்றோம். பசி எனக்கு புதுசல்ல. கஷ்டங்களும் அப்படித்தான்! நான் கஷ்டத்தை விட்டாலும் அது என்னை விட்டது கிடையாது. என்னைக் கட்டிக்கிட்ட பாவத்துக்காக இந்த சின்னப் பொண்ணுமில்ல பட்டினி கிடக்க வேண்டியதா இருக்குன்னு ஒவ்வொரு நிமிஷமும் வேதனை.

அவளைப் பட்டினியில்லாம பார்த்துக்க வேண்டிய பொறுப்பு ஒரு பக்கம். இன்னொரு பக்கம் அவளோட கற்பைப் பாதுகாக்க வேண்டிய கடமை வேற...! கட்டியா சாப்பிடலைன்னா கஞ்சியாக்கூட சாப்பிடலாம். அதுவும் இல்லைன்னா பட்டினியா கூட கிடக்கலாம்... நாலு சுவத்துக்குள்ளே...! ஆனா அண்டியிருக்க ஒரு குச்சிலோ குடிசையோ வேணுமே! இல்லைன்னா பொண்டாட்டியோட பெண்மையே இல்ல பறிபோயிடும்?!

பசியும் பயமும் வயிற்றைப் பிசைந்தது.

அனுபவமில்லாத கட்டட வேலை! சுவத்து கூட சண்டை போட்டுத்தான் அழுக்கையும் பாசியையும் பிடுங்க வேண்டியதா இருந்துச்சு. பல தடவை பலன்ஸ் தவறி உச்சியிலேருந்து கீழே விழுந்துருவேனோன்னு பயமாப் போச்சு. ஜெகதீ கீழே நிழல்ல உட்கார்ந்துகிட்டே நான் தடுமாறி வேலை செய்யறதை அழுதபடி பார்த்துக்கிட்டிருந்தா.

வேலை முடிஞ்சதும் கூலி தரலை. "மொத்தமா சனிக்கிழமைதான் கிடைக்கும்"ன்னார் சண்முகம் அண்ணன். "இன்றைக்குக் கூலியை மட்டுமாவது கொடுங்க... சனிக்கிழமை வரை வச்சிக்கிறேன்! நாளையிலேருந்து வர்ற கூலியை மொத்தமா சனிக்கிழமை வாங்கிக்கிறேன்." சொன்னேன். ரெண்டு ரூபா கூலி கொடுத்தார்.

முரட்டுத்தனமா பழக்கமில்லாத வேலையை செய்ததாலே கையெல்லாம் செவந்திருச்சு. விரல்களை மடக்க முடியலை. ரணம்! ஜெகதீ பார்த்துட்டு கண் கலங்கினாள்.

"ஒரு நா அந்த சாமி 'நிச்சயமா கண்ணை திறக்கும்... ஜெகதீஸ்..."

"சாமி கண்ணை திறந்ததாலேதான் நீங்க எனக்குக் கிடைச்சிருக்கீங்க" மறுபடி அழுதா.

"நமக்கு ஒருநாள் விடியாமலா போயிடும்? குடுக்கிற தெய்வம் கூரையைப் பிச்சுக்கிட்டு கொடுக்கத்தான் போகுது... பாரேன்!"

"பிச்சுக்கிட்டு கொடுக்குதோ, இல்லையோ... முதல்ல கூரையைக் கொடுக்கட்டும்..."

கையிலேயிருந்த ரெண்டு ரூபாயை வச்சுக்கிட்டு சனிக்கிழமை வரை எப்படி சமாளிக்கிறதுன்னு பிரச்சினை.

இன்னும் நாலு நாள் இருந்தது. ஒரு நாளைக்கு ஒரு வேளையாவது சாப்பிட வேணாமா?

பெயிண்டர் வேலையைத் துப்புரவா தெரிஞ்சுகிட்டேன். ஆனாலும் என் வறுமை சாயத்தை மாற்றவே முடியலே. குழந்தைகள் பெத்ததும் ஒரு காரணம்! பணக்காரங்க பொழுது போகலைன்னா டிராமா போவாங்க. சினிமா போவாங்க. ஏழைங்க? 'கட்டில் சுகம்' கூட ஏழை பாழைங்களுக்கு ஒருவித பொழுதுபோக்குன்னுதான் சொல்லணும்!

அதிர்ஷ்டம்ன்றது பசுமாடு மாதிரிதான் போல! எல்லாருக்கும் அந்த பசு பாலை கொடுத்துச்சின்னா எனக்கு சாணியத்தான் கொடுத்துச்சு! அதுவும் பல சமயம் உதைதான் தந்தது. எந்த சந்தோஷத்தையும் விதி எனக்கு கிடைக்கவிட்டதில்லை... கிடைச்சாலும் நிலைக்கவிட்டதில்லை... மேஸ்திரி வாங்கிக் கொடுத்த உத்தியோகம், அமைதியான வீடு, அற்புதமான மனைவின்னு எவ்வளவு நிம்மதியா குடும்பம் நடத்தியிருக்கணும். நடத்தலை! அதற்கப்புறம்தான் கஷ்டத்துக்கு மேலே கஷ்டம்!

டைஃபோய்ட் காய்ச்சல் வந்து ரொம்ப சீரியஸாகி அவ்வளோதான், பிழைக்க மாட்டேனோன்னு நம்பிக்கை இழக்கிற அளவுக்கு ஆயிடுச்சு. கண் திறந்தா, ஒரே இருட்டாயிருக்கு... பார்வை போயிருச்சுன்னு பதறிட்டேன். ரொம்ப பயமாப்போச்சு. ஒரு மட்டிலும் எழுந்து நடமாடத் தொடங்கினப்ப சென்னையில் பயங்கர புயல் வெள்ளம்! மழை காரணமா பெயிண்டிங், வார்னீஷ், சுண்ணாம்பு வேலை எதுவும் கிடைக்கலை. வேற வேலையாவது செய்யலாம்னு வயல்ல அறுப்புக்குப் புறப்பட்டேன். அனுபவமில்லாததாலே விரல அறுத்துக் கிட்டதுதான் மிச்சம்.

ஜெகதி இட்லி சுட்டு எடுத்துகிட்டுப் போய் வீதி வீதியா, வீடு வீடா விற்றுப்பார்த்தா. உபயோகப்படல.





தொடர்ச்சி 18-ம் பக்கம்...




## த ஸ்டோலன் பிரின்சஸ்

மாயாஜாலம் மற்றும் சாகசங்கள் நிறைந்த 3டி அனிமேஷன் படம். ஹாலிவுட்டில் தேவதை கதைகளில் வரும் சுவாரஸ்யமான துணை கதைகளும் இருக்கின்றன. இளவரசி மிலாவை, சோர்மோமோர் என்ற தீயசக்தியிடம் இருந்து, ரஸ்லான் என்ற கேரக்டர் எப்படி காப்பாற்றுகிறது என்பது கதை. இதில் அழகான தேவதை, வீரம் மிகுந்த குதிரைகள், தீயசெயல்கள் செய்யும் மந்திரவாதி, வீரர்கள் என பலர் இடம்பெற்றுள்ளனர்.

திடீரென்று ஒருநாள் குதிரை போல் மாறி, மிலா என்ற பெண்ணை சந்திக்கிறார், ரஸ்லான். கண்டவுடன் காதலிக்க தொடங்குகிறார். மன்னரின் மகளான மிலா, இளவரசி என்ற விஷயம் ரஸ்லானுக்கு அப்போது தெரியாது. இந்நிலையில் அவர்களின் மகிழ்ச்சி நீண்ட நாள் நீடிக்கவில்லை. சோர்மோமோர் என்ற மந்திரவாதி, நீர்ச்சுழல் போன்ற மாயத்தோற்றத்தை ஏற்படுத்தி, ரஸ்லான் முன்பு மிலாவையும், அவள் கண்களில் மறைந்திருந்த காதலையும் தன் மந்திரசக்தியால் களவாடுகிறார். பிறகு ரஸ்லான், சோர்மோமோரின் மந்திரசக்தியை துரத்தி, அவருடைய எல்லா மாயத்தடைகளையும் தகர்த்து, தன் காதல் உண்மையானது என்று நிரூபித்து, இளவரசி மிலாவை மீட்கிறார்.

நல்ல விஷயங்களுக்கும், தீய விஷயங்களுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தில், அழகான ஒரு காதல் கதையும் இணைந்து வருகிறது. சிறுவர் முதல் பெரியவர்கள் வரை ரசிக்கும் வகையில் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது. விழிகளை விரித்து வியக்கும் விதமாக, 3டி அனிமேஷன் படமாக வந்துள்ளது. த ஸ்டோலன் பிரின்சஸ் என்ற தேவதை கதைகள், ரஷ்ய நாட்டு கவிஞர் அலெக்சாண்டர் புஷ்கினால் உருவாக்கப்பட்டது. ஓலெக் மாலாமுழ் இயக்கியுள்ளார்.




## வைஷ்ணவி வழக்கிலிருந்து நடிகர் விடுதலை!



பிரபல சின்னத்திரை நடிகை வைஷ்ணவி. பல்வேறு சின்னத்திரை தொடர்களில் நடித்தார். பாபா உள்ளிட்ட சில படங்களிலும் நடித்தார். வைஷ்ணவியும் சின்னத்திரை நடிகர் தேவ் ஆனந்த்தும் தீவிரமாக காதலித்து வந்தனர். இந்த நிலையில் காதலர்களுக்கு இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடால் கடந்த 2006ம் ஆண்டு வைஷ்ணவி தற்கொலை செய்து கொண்டார். வைஷ்ணவியின் தற்கொலைக்கு தேவ் ஆனந்த்தின் தூண்டுதலே காரணம் என்று வைஷ்ணவியின் பெற்றோர் அண்ணாநகர் போலீசில் புகார் அளித்தனர். இந்த புகாரின் அடிப்படையில் தற்கொலைக்கு தூண்டியதாக தேவ் ஆனந்த் மீது போலீசார் வழக்கு தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த மகளிர் நீதிமன்றம், கடந்த 2011ம் ஆண்டு தேவ் ஆனந்த்துக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து தேவ் ஆனந்த் மேல்முறையீடு செய்தார். இதன் தீர்ப்பில் தேவ் ஆனந்த் மீதான குற்றம் வலுவான சாட்சியங்களுடன் நிரூபிக்கப்படவில்லை என்று கூறி 5 ஆண்டு சிறைத் தண்டனையை ரத்து செய்யப்பட்டுள்ளது.

## ஹீரோயின் ஆனார் மகாலட்சுமி!



ஜீ தமிழ் சேனலில் ஒளிபரப்பாகி வரும் தேவதையை கண்டேன், விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் பொண்ணுக்கு தங்க மனசு தொடர்களில் வில்லியாக நடித்துக் கொண்டிருப்பவர் மகாலட்சுமி. விரைவில் கலைஞர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக இருக்கும் கண்ணகி தொடரில் நாயகியாக நடிக்கிறார். வில்லியாக இருந்து ஹீரோயினாகியிருக்கும் மகாலட்சுமி, புதிய உற்சாகத்தோடு கண்ணகி தொடரில் நடித்து வருகிறார். இதிகாச கால கண்ணகியின் கதை அல்ல இது. நவீன கண்ணகி. அநீதி கண்டு பொங்குவதாலும், சூழ்நிலைக்கேற்ப அதிரடி முடிவெடுப்தாலும் கண்ணகி என்று தொடருக்கு டைட்டில் வைத்திருக்கிறார்கள். விரைவில் கண்ணகி அவதாரத்தில் காட்சித் தரப்போகிறார் மகாலட்சுமி.

## தேவதையை கண்டேன் ஹீரோ மாற்றம்!



ஜி தமிழ் சனலில் பகல்நேரத்தில் ஒளிபரப்பாகும் தொடர் தேவதையை கண்டேன். தலையணைபூக்கள், தேவதையை கண்டேன் என ஒரே சனலில் இரண்டு தொடர்களில் ஒரே நேரத்தில் நடித்துக் கொண்டிருந்தபோது யாரடி நீ மோகினி சீரியலில் நுழைந்தார் ஸ்ரீ. தலையணை பூக்கள் முடிந்தது. இப்போது தேவதையை கண்டேனில் இருந்து வெளியேறியிருக்கிறார் ஸ்ரீ. அவரது பாத்திரத்தில் செய்யப்பட்ட மாற்றத்தை விரும்பாமலே வெளியேறினாராம். மனைவி மேல் பாசமாக இருப்பதாக சித்தரிக்கப்படும் பாத்திரம் அவருடையது. ஆனால் திடீரென இரண்டாம் கல்யாணம் செய்வதை போல கதை அமைக்கப்பட ஸ்ரீக்கு பிடிக்கவில்லையாம். அதனால் அவர் வெளியேற ஈஸ்வரை ஹீரோ ஆக்கியுள்ளனர்.

## பிக்பாஸால் இப்படியொரு பிரச்சனையா?




பிக்பாஸ் நிகழ்ச்சியால் ஏற்பட்டுள்ள விசித்திர குழப்பம் ஒன்றைப்பற்றிய செய்தி இது. பிக்பாஸ் முதல் சீசன் ஒளிபரப்பான போது, பயங்கரமாக விஜய் டிவிக்கு ரேட்டிங் எகிறியது. இதனால் சுதாகரித்துக் கொண்ட மற்ற சனல்கள், இம்முறை பிக்பாஸை கவர் பண்ணி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகிறார்கள். பல டிவிகள் வாரம் ஏழு நாளும் சீரியல்களை ஒளிபரப்ப ஆரம்பித்து விட்டனர். பூவே பூச்சூடவா ஹீரோயின் ரேஷ்மாவிற்கு இதனால் வித்தியாசமான பிரச்சனை. அவர் அடிப்படையில் டான்ஸர். மாதத்தில் 15 நாள் சூட்டிங். மிகுதி நாளில் டான்ஸ் புரோகிராம்களில் கலந்து கொள்வார். இதனால் உடல் எடையை சீராக பராமரித்து வந்தார். பிக்பாஸினால் வாரத்தில் ஏழு நாளும் சீரியல் ஒளிபரப்பாகும் என்றதும், மேலதிகமாக ஐந்து நாள் சூட்டிங். இதனால் டான்ஸிற்கே நேரமில்லையாம். விளைவு உடல் எடை ஐந்து கிலோ கூடி விட்டாராம். பிக்பாஸ் முடிய நாளிருப்பதால் இன்னும் எத்தனை கிலோ எகிறப் போகிறதோ என அம்மணி மிரண்டு போயிருக்கிறார்.

## தனுஷ் படத்தில் அனு இமானுவேல்!

ராஜ்கிரண்ரேவதி நடிப்பில் பவர் பாண்டி படத்தை இயக்கிய தனுஷ், அடுத்தப்படியாக மல்டி ஹீரோ படத்தை இயக்குகிறார். இதற்கான அறிவிப்பு சமீபத்தில் வெளியானது. இந்த படத்தில் நாகார்ஜுனா, சரத்குமார், எஸ்.ஜே.சூர்யா, ஸ்ரீகாந்த், அதிதிராவ் என பலர் நடிக்கின்றனர். இந்தநிலையில், தற்போது இப்படத்தில் இன்னொரு நாயகியாக விஷாலுடன் துப்பறிவாளன் படத்தில் நடித்த அனு இமானுவேல் ஒப்பந்தமாகியிருக்கிறார். அக்டோபர் மாதம் முதல் அவர் இப்படத்தின் படப்பிடிப்பில் கலந்து கொள்கிறார்.

## அதர்வா ஜோடியாகும் பிரியா பவானி சங்கர்!

சின்னத்திரையில் இருந்து சினிமாவுக்கு வந்தவர் ப்ரியா பவானி சங்கர். மேயாதமான் படத்தில் அறிமுகமாகி அதன் பிறகு கடைக்குட்டி சிங்கம் படத்தில் நடித்தார். தற்போது அதர்வா நடிக்கும் குருதி ஆட்டம் படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்கிறார். இவர்களுடன் ராதராவி, ராதிகா, ஆகியோர் முக்கிய கேரக்டரில் நடிக்கிறார்கள். டி.முருகானந்தம், ஐ.பி.கார்த்திகேயன் தயாரிக்கிறார்கள். 8 தோட்டாக்கள் படத்தை இயக்கிய ஸ்ரீ கணேஷ் இயக்குகிறார். படம் பற்றி அவர் கூறியதாவது: இது ஒரு கேங்ஸ்டர் கதை. ஆனாலும் வழக்கமான கதையிலிருந்து முற்றிலும் மாறுபட்டு இருக்கும். அதர்வா கேரக்டர் இப்போதைக்கு சஸ்பென்ஸ். பிரியா பவானி சங்கர் ஸ்கூல் டீச்சராக நடிக்கிறார். ராதிகா, ரதாரவி காமினேஷன் படத்தில் பெரிய அளவில் பேசப்படுவதாக இருக்கும், இருவருமே கதை கேட்ட உடன் நடிக்க ஒப்புக் கொண்டார்கள். மதுரை பின்னணியில் நடக்கும் கதை. அடுத்த வாரம் படப்பிடிப்பு தொடங்குகிறது. என்கிறார் ஸ்ரீ கணேஷ்.

## 9 கோடியை திருப்பி கொடுப்பாரா வடிவேலு?

ஷங்கர் தயாரிப்பில், சிம்புதேவன் இயக்கத்தில் சில ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட படம் இம்சை அரசன் 24ம் புலிகேசி. இம்சைஅரசன் 23ம் புலிகேசி படத்தின் இரண்டாம் பாகமான இப்படம் தொடங்கப்பட்ட நாள் முதலே பஞ்சாயத்து தான். சென்னைக்கு அருகே உள்ள ஈவிபி ஸ்டுடியோவில் பிரம்மாண்டமான அரங்குகள் அமைத்து படப்பிடிப்பு தொடங்கப்பட்டது. படப்பிடிப்பு தொடங்கிய சில நாட்களிலேயே, வடிவேலு, சிம்புதேவன் இடையே முட்டல், மோதல் ஏற்பட படப்பிடிப்பு தடைப்பட்டது. வடிவேலுவுக்குக் கொடுத்த அட்வான்ஸ், மற்றும் படத்துக்கு செலவழித்த தொகையையும் சேர்த்து 9 கோடி ருபாயை வடிவேலு திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று தயாரிப்பாளர் சங்கத்தில் புகார் அளித்தார், தயாரிப்பாளரான இயக்குநர் ஷங்கர். இதுகுறித்து பலமுறை தயாரிப்பாளர் சங்கத்திலிருந்து விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியும், வடிவேலு பதில் அளிக்கவில்லை. இம்சை அரசன் 24ம் புலிகேசி படத்தின் பிரச்சினை தற்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது. இம்சை அரசன் 24ம் புலிகேசி படத்தில் நடிக்க வேண்டும் அல்லது 9 கோடியை ஷங்கருக்கு திருப்பிக் கொடுத்து பிரச்சினையை முடிக்க வேண்டும். அதுவரை, வடிவேலுவை வைத்து எந்த ஒரு தயாரிப்பாளரும் படம் பண்ண வேண்டாம் என்று சங்க உறுப்பினர்களிடம், தயாரிப்பாளர் சங்கம் அறிவுறுத்தியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## சப்பாணி வேடத்தில் முதலில் நடிக்க இருந்தவர்!

கமல் நடித்த பட்டாம்பூச்சி மற்றும் தாம்பத்தியம் ஒரு சங்கீதம் போன்ற பல படங்களை தயாரித்த ரகுநாதன் தயாரிக்கும் புதிய படம் மரகதக்காடு. உண்மை சம்பவத்தின் அடிப்படையில் உருவாகியிருக்கும் இப்படத்தில் அஜய், ரஞ்சனா, ஜெயஸ்ரீ, இலியாஸ் காத்தவன் நடித்திருக்கின்றனர். மங்களேஸ்வரன் இயக்கி உள்ளார். இதன் ஆடியோ வெளியிடப்பட்டது. இதில் இயக்குனர் பாரதிராஜா கலந்துகொண்டு பேசும்போது,"இதில் நடிக்கும் நட்சத்திரங்களை நேரில் பார்க்கும்போது அவர்களின் அழகு கண்ணுக்குள் நிற்கிறது. ஆனால் படத்தில் அவர்களது தோற்றம் மாற்றப்பட்டிருக்கிறது. கமல் அழகாக இருந்ததால்தான் 16 வயதினிலே படத்தில் அவரை நான் சப்பாணி கேரக்டருக்கு தேர்வு செய்தேன். அழகாக இருப்பதை சற்று அழுக்காக்கி காண்பிக்கும்போதுதான் மக்களுக்கு பிடிக்கிறது. 16 வயதினிலே படத்தை பிளாக் அண்ட் ஒயிட் படமாக எடுக்க எண்ணிய சமயத்தில் நாகேஷைதான் சப்பாணி கதாபாத்திரத்தில் நடிக்க வைக்க முடிவு செய்திருந்தேன். பின்னர் அப்படத்தை கலரில் எடுத்ததால் கமலை தேர்வு செய்தேன்" என்றார்.




## இனி குடிக்க மாட்டேன்!

அன்னை தெரசா அறக்கட்டளையின் இந்த ஆண்டுக்கான விருது நடிகர் ராகவா லாரன்சுக்கு வழங்கப்பட்டது. ராகவா லாரன்ஸ் தனது தாயுடன் விருதை பெற்றுக் கொண்டார். பின்னர் அவர் பேசியதாவது: இந்த உலகத்தில் உள்ள கடவுள்களில் முதல் கடவுளாக நான் நினைப்பது தாயைத் தான். அதனால் இந்த விருதை என் அம்மாவுக்கு காணிக்கையாக்குகிறேன். ராயபுரத்திலிருந்து கோடம்பாக்கத்துக்கு நானும், அம்மா மூன்று சகோதரிகளும் வந்து வறுமையை எப்படியெல்லாம் அனுபவித்தோம் என்பது சொல்லி மாளாது. அதனால் பொறுமையாக வளர்ந்து நான் சம்பாதிப்பதை மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்று நினைத்து கொடுக்கிறேன். சாதாரணமாக இருந்த என்னை இந்தளவுக்கு உயர்த்திய மக்கள் கொடுத்த பணத்தை நான் திருப்பி தருகிறேன் அவ்வளவு தான். சினிமாவுக்கு வருவதற்கு முன்பு எனக்கு சிகரெட், மது என்று எந்த பழக்கமும் இல்லை. டான்ஸரான போது நண்பர்களின் வேண்டுகோளுக்காக எப்போதாவது குடிப்பேன். அதையும் நிறுத்தியாச்சி. ரொம்ப டென்சன் இருந்தா எப்போதாவது கொஞ்சம் ஒயின் அருந்துவேன். இப்போது இந்த அன்னை தெரசா விருது பெற்றதன் மூலம் அந்த விருதுக்கு மரியாதை கொடுக்க இனி ஒயின் கூட குடிப்பதில்லை என்று முடிவெடுத்திருக்கிறேன் என்றார்.


## குழந்தை பெற்றுக்கொள்ள மட்டுமே திருமணம்!

ஆடுகளம் படத்தில் அறிமுகமான டாப்சி, அதன்பின்னர் பல படங்களில் நடித்தார். தெலுங்கிலும் சில படங்களில் நடித்தார். பாலிவுட்டில் அவர் நடித்து வரும் படங்கள் வெற்றி பெறவே இப்போது பாலிவுட்டே கதி என கிடக்கிறார். வெளிநாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரரை டாப்சி காதலித்து வருவதாக அவ்வப்போது செய்திகள் வெளியாகின. டாப்சி அதற்கு எந்த விளக்கமும் கொடுக்கவில்லை. இந்நிலையில், தான் எதற்காக திருமணம் செய்வேன் என டாப்சி பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார். "எனக்கு குழந்தை பெற்றுக்கொள்ளும் ஆசை வரும்போது திருமணம் செய்து கொள்வேன். குழந்தை பெற்றுக்கொள்வதை தவிர வேறு எதற்காகவும் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்" என துணிச்சலான கூறியிருக்கிறார் டாப்சி.

## விக்ரம் பிரபுவை காப்பாற்றுமா வால்டர்?

சமீபத்தில் வெளிவந்த விக்ரம் பிரபு நடித்த 60 வயது மாநிறம் படம் அவருக்கு நல்ல பெயரை பெற்றக் கொடுத்தது. தொடர்ந்து தோல்வி படம் கொடுத்தவருக்கு இது ஆறுதலை கொடுத்தது. தற்போது துப்பாக்கி முனை, அசுரகுரு படங்களில் நடித்து வருகிறார். அதைத் தொடர்ந்து வால்டர் என்ற படத்தில் அர்ஜூனுடன் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். இது 3 பேரை மையப்படுத்திய கதை. அர்ஜுன், விக்ரம் பிரபு, ஜாக்கி ஷெராப் ஆகியோர் அந்த 3 நபர்களாக நடிக்கிறார்கள். சதீஷ்குமார் ஒளிப்பதிவு செய்கிறார். ரதன் இசை அமைக்கிறார், மதுக்கூர் மூவீஸ் சார்பில் சிங்காரவேலன் தயாரிக்கிறார். யு.அன்பரசன் இயக்குகிறார். இதன் படப்பிடிப்புகள் மதுரை, கும்பகோணம், தென்காசி, குற்றாலம் பகுதியில் நடக்க இருக்கிறது.

டி.நாராயண ரெட்டி,
செக்ஸாலஜிஸ்ட்




# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!

டாக்டர்... எப்படிச் சொல்றதுனு தெரியலை... கொஞ்சம் வெட்கமாவும் இருக்கு. மனைவி இறந்து ஆறு வருஷமாகுது. துணையில்லாம உணர்ச்சியை எப்படிக் கையாள்றதுனு தெரியலை. அதை அடக்கிவைக்க ஏதாச்சும் மருந்திருக்கா?' என்று 86 வயது மனிதர் என்னிடம் தயங்கித் தயங்கிக் கேட்டார். தகுந்த ஆலோசனைகள் சொல்லி அனுப்பி வைத்தேன். காதல், கலவி, அன்பு இவற்றுக்கு வயது கிடையாது. யாருக்கு வேண்டுமானாலும் எந்த வயதில் வேண்டுமானாலும் வரலாம், அது இயற்கையின் நியதி.

பல ஆண்டுகளாக ஒன்றாகக் குடும்பம் நடத்திய தம்பதியர் இன்பத்திலும் துன்பத்திலும் தோளோடு தோள் நின்றிருப்பார்கள். அவர்களில் ஒருவர் திடீரென இல்லாமல் போனால், அவர்களின் மனநிலை எப்படியிருக்கும்... இதை யாரும் யோசிப்பதில்லை.

இலங்கையில் செக்ஸ் பேசக் கூடாத, விவாதிக்கக் கூச்சப்படும் ஒரு விஷயம். அப்படியிருக்கும்போது, வயதானவர்களின் உணர்வுகளை எப்படி மதிப்பார்கள்..?

வயதாகிவிட்டால், 'அதெல்லாம்' கிடையாதென்று, ஒரு புனிதச்சாயம் பூசிவிடுவார்கள். ஆனால், வயதானவர்களுக்கும் செக்ஸ், அரவணைப்பு, அன்பு எல்லாம் தேவை. வயதானவர்களின் இந்த உணர்வை ஆங்கிலத்தில், 'இன்டிமஸி' (Intimacy) என்பார்கள். இதற்கு, 'தாம்பத்யம் தொடர்பான உணர்வு' என்பது அர்த்தமல்ல. கணவன் மனைவியிடையே இருக்கும் காதல் என்பது கட்டிப்பிடிப்பது, முத்தமிடுவது, ஸ்பரிசிப்பது, அன்பு செலுத்துவது என இருவருக்கும் இடையிலான பகிர்தல். இதை வேறு யாராலும் கொடுக்க முடியாது. இது, வயது ஆக ஆக அதிகரிக்குமே தவிர, குறையாது.

வாழ்க்கைத் துணை இறந்து போவதால் மட்டுமல்ல, உடல் உபாதைகளால்கூட இந்த எதிர்பார்ப்புக்குத் தடை ஏற்படலாம். 'உணர்வை வெளிப்படுத்தினால், யாராவது தவறாக நினைத்துவிடுவார்களோ' என்ற எண்ணத்தாலும் சிலர் உணர்ச்சியை அடக்கிக்கொள்வார்கள். துணை இறந்துவிட்டாலோ, பிரிந்து வெளியூரில் இருந்தாலோ இப்படியொரு நிலை ஏற்படலாம்.

வயதான ஆண்களுக்கு சர்க்கரை நோயால் ஏற்படும் விரைப்புத் தன்மைக் கோளாறு, மூட்டுவலி, தசை வலிமை குறைந்து போவது, உடல் சோர்ந்து போவது, மருந்து, மாத்திரைகளால் ஏற்படும் பின்விளைவுகள் போன்றவற்றால் உணர்ச்சிகள் பாதிக்கப்படலாம். ரத்த அழுத்தம், மன அழுத்தம், வலி நிவாரணி மாத்திரைகளால்கூட சிலருக்கு விரைப்புத்தன்மையில் கோளாறு ஏற்படலாம்; செக்ஸில் ஆர்வமில்லாமல் போகலாம்.

பெண்களுக்கு மாதவிடாய் நின்றவுடன், உடனடியாக ஹார்மோன் சுரப்பு நின்றுவிடும்; செக்ஸின்போது பெண்ணுறுப்பில் சுரக்கும் திரவமும் நின்றுவிடும். ஆண்களுக்கு வயது ஆக ஆக, கொஞ்சம் கொஞ்சமாக இந்த செக்ஸ் உணர்வு குறைய வாய்ப்பிருக்கிறது. எல்லாவற்றுக்கும் ஹார்மோன் சுரப்புதான் காரணம்.

வயதானவர்களுக்கு முதுமை காரணமாக ஏற்படும் சருமச் சுருக்கம் போன்ற தோற்றப் பிரச்னைகளால் தாழ்வு மனப்பான்மை ஏற்படும். அதனால், துணையுடன் நெருங்கிப் பழகாமல் ஒதுங்குவார்கள். சிலர் செக்ஸ் அளவுக்குச் செல்லாமல், தொட்டுப் பேசுவது, மனம் திறந்து பேசுவது போன்றவற்றை மட்டும் எதிர்பார்ப்பார்கள். அது கிடைக்கவில்லையென்றாலும், அவர்களின் உணர்வு பாதிக்கப்படும். இதனால், ஒருவிதக் குற்ற உணர்ச்சிக்கு ஆளாக நேரலாம். இது குறித்து மருத்துவர்களிடம் பேசவும் தயக்கம் ஏற்படும். இதைச் சரிசெய்வது எளிது. மனம்விட்டுப் பேசி, அவர்களின் உணர்வுகள் தவறல்ல என்பதைப் புரியவைத்தால் போதும்.

செக்ஸ் வாழ்க்கைக்கு எவ்வளவு அவசியம், வாழ்க்கையில் அதன் பங்கு என்ன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உடலால் வயதானாலும், மனதால் எவ்வளவு இளமையாக இருக்கிறார்கள் என்பதுதான் முக்கியம். ஆரோக்கியமான, சிறந்த மனநிலை என்பது உடலுக்கும் மனதுக்கும் குடும்பத்துக்கும் நல்லது. வயதானவர்களுக்கு இந்த உணர்வு ஒரு சிறந்த மருந்து; அதை அலட்சியம் செய்ய வேண்டாம்.

(இன்னும் கற்றுத் தருகிறேன்...)

---



# மாதவிடாய் கறை அவமானமா?

பொன் விமலா

காலையில் எழுந்ததும் சிறுநீர் கழிக்கவோ மலம் கழிக்கவோ நீங்கள் கழிவறை நோக்கி விரைகிறீர்கள் என்றால், உடல் கழிவுகளை அகற்றச்சொல்லி மூளை கட்டளையிடுகிறது என்று அர்த்தம். அதன் பின்பு கழிவறைக்குப் போகிறோம். ஆனால், எந்தக் கட்டளையையும் மூளை இடாமலே வெளியேறுவதுதான் மாதவிடாய். மாதத்தில் இந்த சில நாட்களில் மாதவிடாய் வரும் என்பது முன்கூட்டியே தெரிந்திருந்தாலும் எந்த நேரத்தில் வரும் என்பது யாருக்குமே தெரியாது. சிலருக்கெல்லாம் சொல்லிவைத்தாற்போல் மாதம்தோறும் சரியான நாட்களிலும் வந்துவிடுவ தில்லை. ஒரு வாரம் முன்பின்கூட ஆகலாம்.


முன்பெல்லாம் பெண்கள் பெரும்பாலும் வீட்டைவிட்டுச் செல்லாதவர்களாக இருந்தார்கள். எந்த நேரத்துக்கும் துணியை வைத்துச் சமாளித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், இப்போது எப்போதும் வீட்டைத் தாண்டி வெளியில் பயணிக்கும் சூழல் பெரும்பாலான பெண்களுக்கு வாய்த்திருக்கிறது. எப்போதும் கைப்பையில் நாப்கின் வைத்திருக்க வேண்டியிருக்கிறது. நமக்கு இல்லாவிட்டாலும், நம் சகதோழி காதில் வந்து ரகசியமாய் சொல்லிவிட்டுப் போகும்போது கொடுக்கவாவது எப்போதும் இருப்பொன்று தேவையாக இருக்கிறது.

சரி... இதெல்லாம் முன்னேற்பாடுகள் தான். நாப்கின் இல்லாத சூழல் ஒன்றில் தன்னையும் அறியாமல் ஆடையில் குருதி படிந்துவிட்டால், அதென்ன உலக மகா குற்றமா என்ன? சில நேரங்களில் நாப்கினே வைத்தாலும் அதிகப்படியான உதிரப்போக்கால் கறை படிவதென்பது சாதாரண நிகழ்வுதான். ஆனால், நீல நிற மையை நாப்கினில் கொட்டிக் காட்டும் விளம்பரங்களெல்லாம் கறைபடிவதை அவமானத்தின் அடையாளமாகத்தானே சித்தரித்துக் கொண்டிருக்கின்றன!

'செக்... செக்.. செக்' என பகிரங்கமாகவே சின்னத்திரையில் வரும் நாப்கின் விளம்பரத்தில் வகுப்பில் இருக்கும் பெண் பிள்ளைகள் தங்களின் பின்புறத்தைப் பார்த்துக்கொள்கிறார்கள். இவர்கள் தயாரிப்பு நாப்கினை வாங்கினால் ஆடையின் பின்புறத்தை அடிக்கடி சரிபார்க்க வேண்டாமாம். இதில் எட்டு மணி நேரத்துக்கு மேலாகத் தாக்குப்பிடிக்குமென்று இன்னொரு தகவலையும் பரப்புகிறார்கள். ஒரு உயிர் திரவம் சிறிய நாப்கினில் 8 மணி நேரம் தேங்கிக் கிடந்தால் பெண்ணுறுப்பு எவ்வளவு பாதிக்கப்படும் என்பதை யோசிக்கிறோமா?

நாப்கின் இருந்தால் குதிரையில் சவாரி செய்யலாம். ஓட்டப்பந்தயத்தில் ஓடலாம்.. வெற்றிக் கோப்பையோடு வீடு திரும்பலாம் என்கிற போலிக் கற்பிதங்களைத்தான் கையில் பிடித்துக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கிறோம். விளம்பரங்கள் மாதவிடாயைப் பெண்ணுக்கான பெரும்பாவமாய் சித்தரித்துக்கொண்டிருக்கும் அதே வேளையில், பள்ளிகள் என்ன செய்துகொண்டிருக்கின்றன? "ம்மா.. எதுக்கும் இன்னிக்கு ரெண்டு நாப்கின் வச்சிட்டுப் போயிடுறேன். மிஸ் அடிக்கடி பாத்ரூம் போகவிட மாட்டேங்குறாங்க. பாய்ஸ் வேற பேக் ரோவுல இருக்காங்க" என்று சொல்லும் மகளிடம் எவ்வளவு புரிதலை ஏற்படுத்தினாலும் "மிஸ்... பாய்ஸ்" என இரண்டே வார்த்தைகளில் தயக்கம் காட்டிவிட்டு நழுவிக்கொள்கிறாள். ஏழாம் வகுப்பிலேயே பெரும்பாலான பெண் பிள்ளைகள் வயதுக்கு வந்துவிடுகிறார்கள். அப்படியிருக்க இதுவரை மாதவிடாய் விழிப்புணர்வை இருபாலருக்கும் சொல்லித்தருவதைப் பள்ளிகள் கவனத்தில் எடுத்துக்கொள்வதில்லை.

நீங்கள் சந்திக்கும் சகோதரியோ.. தோழியோ உங்கள் முன்னால் கறையோடோ இல்லை மெதுவாகவோ நடந்து சென்றால் நீங்கள் உடனடியாக ஓடிச்சென்று நாப்கின் வேண்டுமா என்று கேட்கிறீர்களோ இல்லையோ... பின்னால் இருந்து கிசுகிசுக்காமல் இருந்தாலே போதும். எங்களுக்குப் பயமெல்லாம் கறை மீது அல்ல... கறை சேர முடியாமல் பெண்களுக்கென புதிதுபுதிதாகக் கட்டவிழ்ந்துகொண்டிருக்கும் இத்தகைய காரணங்கள்தான்!



# சூர்யா என்னை தெய்வமச்சான்னுதான் கூப்பிடுவார்... ஏன் தெரியுமா?

## ரமேஷ் கண்ணா எழுதும் 'திரையிடாத நினைவுகள் 6'

ப்ரண்ட்ஸ்... வாழ்க்கையில ப்ரண்ட்ஸ் யாரு? எப்படி வர்றாங்க? சில ப்ரண்ட்ஸ் எப்படி போறாங்க? ஒரு சிலருக்கு வாழ்க்கையில ப்ரண்ட்ஸ் முக்கியமா இருக்காங்க, ஒரு சிலருக்கு வாழ்க்கையைக் கொடுத்ததே ப்ரண்ட்ஸாதான் இருக்கும். ப்ரண்ட்ஸ் இல்லாதவங்க கண்டிப்பா வாழ்க்கையில மிகப்பெரிய பங்கை இழக்குறாங்க. அப்படி ப்ரண்ட்ஸ் இல்லாம யாரும் இருந்துவிட முடியுமா என்ன?


பாண்டியராஜனும் நானும் ஒன்னா சைக்கிளில் சுத்துனது, பின்னர் என்னைக் கூப்பிடாம அவரு ஷூட்டிங் ஆரம்பிச்சது, விவேக்கும் நானும் ஒன்னா காமெடி க்ளப்ல ஷோ பண்ணது, பிறகு எங்க நட்புனாலேயே நாங்க இயக்க வேண்டிய படம் கெட்டுப் போனது, ரவிக்குமாருக்கு அசிஸ்டன்ட் ஆனது, அவர் மூலமாக வந்த பெரிய வாய்ப்புகளும் எனக்கு வாய்க்காம போனது, அஜித் கூட தொடர்ந்து பல படங்கள் பண்ணுனது, விஜய் கூட ஒரே படத்தோட நின்னது... இப்படி எல்லாம் சுத்தி சுத்தி நட்புகளால் நிகழ்ந்தது, நட்போடு ஏதோ ஒரு வகையில் தொடர்புடையது. இவுங்க எல்லோருமே எனக்கு ப்ரண்ட்ஸ்தான். என் வாழ்க்கையிலயும் ப்ரண்ட்ஸ் என்ற வார்த்தை ரொம்ப முக்கியமானது. 'ப்ரண்ட்ஸ்' படம் எனக்கு மிகப்பெரிய பேரைக் கொடுத்தது. காமெடியன் என்பதைத் தாண்டிய முக்கியமான ரோல் அந்தப் படத்துல எனக்கு. அதுபோக. 'ப்ரண்ட்ஸ்' படம் எனக்கு ஒரு ரொம்ப நல்ல ப்ரண்டையும் கொடுத்தது.

சூர்யா... ஒரு புகழ்பெற்ற நடிகரோட பிள்ளையாக சினிமாவுக்குள் வுந்தவர். ஆனா, வந்தது மட்டும்தான் அப்படி. அதுக்கப்புறமா அவர் சினிமாவில் இருந்தது புகழ் பெற்ற நடிகரோட பையனா இல்லை. நம்மில் பெரும்பாலானவங்க நினைப்பாங்க, 'ஒரு பெரிய நடிகருக்கோ டைரக்டருக்கோ பிள்ளையாக இருந்தால் ஈஸியா சினிமாவில் ஜெயிச்சிடலாம்னு. ஆனா, அப்படி உள்ளே வந்து இன்னைக்கு சினிமாவுக்கு வெளியே போயிட்டவங்க எத்தனை பேர்? நிறைய... அப்பா சினிமாவில் வெற்றிகரமா இருந்திருந்தா கண்டிப்பா சாதகம்தான். முதல் படம் நடிப்பதற்கும் அந்தப் படம் ஓடலைன்னா அடுத்த படத்துக்கான வாய்ப்பை பசியில்லாமல் தேடுறதுக்கும். சில அப்பாக்கள் பிள்ளைகளை வைத்து படம் எடுக்குறாங்கதான். ஆனால், அப்படி எடுக்குற படங்களும் வெற்றி பெறுவது உறுதியில்லையே.

வாரிசு நடிகராக இருந்தும் சினிமாவில் பல அவமானங்களை சந்தித்து, கஷ்டப்பட்டு, தன் உழைப்பால் முன்னேறுபவர்கள் இருக்கிறார்கள். அப்படி ஒருவர்தான் சூர்யா. சூர்யா அப்படி என்ன கஷ்டப்பட்டுட்டாருன்னு கேக்குறீங்களா? ஒரு ஃபேமஸ் நடிகரோட பையன், இன்னொரு ஹீரோவுடன் சேர்ந்து நடிக்கிற படத்தின் ஷூட்டிங்குல தனி ரூமெல்லாம் கேக்காம (இல்லாம) எங்களோட தரையில் பெட்ஷீட் விரித்துப் படுத்துருக்கார். தன் தந்தையின் புகழையெல்லாம் தள்ளிவச்சுட்டு இயக்குனர்களிடம் வாய்ப்பு கேட்டிருக்கார். இதிலென்ன கஷ்டம்? அதை அந்த இடத்தில் இருந்து பார்த்தால்தான் தெரியும். சரி, சவால்கள் இல்லாமல் யாருமில்லை, எல்லோருக்கும் சவால்கள் ஒரே மாதிரி இருப்பதில்லை.

சூர்யாவையும் என்னையும் ப்ரண்ட்ஸ் ஆக்குனது ப்ரண்ட்ஸ் படம்தான். உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன், படையப்பா, அமர்க்களம் இப்படி பல படங்கள் நடிச்சு மெல்ல பிஸியான நேரத்துல வந்ததுதான் 'ப்ரண்ட்ஸ்' வாய்ப்பு. மலையாளத்துல இதே படத்துல என் கேரக்டர்ல சீனிவாசன் சார் நடிச்சிருந்தார். அவரும் என்னைப் போலவே நடிகர், வசனகர்த்தா, கதைகளும் எழுதியிருக்கார். தமிழில் அந்தப் பாத்திரத்தில் நடிக்க என்னை அழைத்தார் இயக்குனர் சித்திக். அவரோட இப்ப வரைக்கும் நல்ல நட்பு இருக்கு. ப்ரண்ட்ஸ் படத்துல விஜய், சூர்யா, நான் மூணு பேரும் கிட்டத்தட்ட முழு படத்துலயும் ட்ராவல் ஆவோம். அதனால் ஷூட்டிங்கிலும் ஒன்னா இருப்போம். விஜய் நல்ல மனிதர், எளிமையானவர்தான். என்னதான் இருந்தாலும் அவர் அப்பவே வளர்ந்த ஹீரோ. எங்களுக்கு அவர்கிட்ட நிறைய பேச தயக்கமா இருந்தது. சூர்யாவும் நானும் ஒன்னாதான் சுத்துவோம், ஒரே ரூம்ல தங்கியிருக்கோம், நிறைய பேசுவோம்.

அப்போ நான் ரொம்ப பிஸியா இருந்த நேரம். நிஜமாதாங்க... ஹீரோக்களை விட காமெடியன்ஸ் பிஸியாதான் இருப்பாங்க. ஆனா, எத்தனை வருஷத்துக்கு அதே மாதிரி பிஸியா இருப்பாங்க என்பது ஒரு கேள்விதான். அது, நான் பிஸியா இருந்த நேரம். கீழ பழனி, உடுமலைப்பேட்டை ஏரியால ப்ரண்ட்ஸ் ஷூட்டிங்.... மேல கொடைக்கானல்ல தெனாலி ஷூட்டிங்... ரெண்டுக்கும் நான் போய்ட்டுப் போய்ட்டு வருவேன். ப்ரண்ட்ஸ் ஷூட்டிங்ல இருந்து தெனாலி ஷூட்டிங் கிளம்புனா, 'ஜோவைக் கேட்டதா சொல்லுங்க'னு சூர்யா சொல்லிவிடுவார். தெனாலி முடிஞ்சு இங்க கிளம்புனா, 'சூர்யாவைக் கேட்டதா சொல்லுங்க'னு ஜோதிகா சொல்வாங்க. நானும், 'மச்சான் உன்னை ரொம்ப கேட்டாருமா, பாக்காம கஷ்டப்படுறாரு', 'தங்கச்சி உன்னைக் கேட்டுச்சுப்பா, உன்னைப் பாக்காம அது முகமே சரியில்ல'னு கொஞ்சம் எக்ஸ்ட்ராவா போட்டு சொல்லுவேன். அஜித்ஷாலினி காதலிலும் நான் இருந்திருக்கேன், சூர்யாஜோதிகா காதலிலும் நான் இருந்திருக்கிறேன். ரெண்டு ஜோடிகளும் இப்பவும் மகிழ்ச்சியா இருப்பது எனக்கு மகிழ்ச்சி. இப்படி அவுங்களுக்குத் தூதா, அன்பா



நான் இருந்ததால என்னை சூர்யா தெனாலி படத்தில் வருவது போல 'தெய்வமச்சான்'னு கூப்பிடுவார்.

சூர்யாவும் நானும் காரில் நிறைய சுத்தியிருக்கோம். திடீர்னு வந்து கூப்பிடுவார், டின்னர் போவோம். ஊரை சுத்திட்டு வருவோம். ஒரு முறை சூர்யாவின் நண்பர் ஒருவர் பன்ருட்டியில் ஒரு கடை திறந்தார். அந்த விழாவுக்கு சூர்யா, என்னையும் கூப்பிட்டார். நான், என் மனைவி, ரெண்டு பசங்க, சூர்யா எல்லோரும் சேர்ந்து என்னுடைய வேகன்ஆர் (Wagon R) காரில் போனோம். அது அவ்வளவு வசதியா இருக்காது. அதைப் பற்றியெல்லாம் அவர்

தொடர்ச்சி 18-ம் பக்கம்...







14-ம் பக்க தொடர்ச்சி...

மேஸ்திரியும் வேலையில்லாம கஷ்டப் பட்டாரு! நாம வேற அவருக்கு பாரமா இருக்க வேணாம், அவருக்கு கிடைக்கிற இருவது ரூபா வாடகைய கெடுக்கக் கூடாதுன்னு வீட்டைக்காலி பண்ணி கோட்டூர்புரம் போனோம். ஓலை குடிசை. சுத்தி வெள்ளக்காடு. கும்மிருட்டு! வயித்திலே ஒருவார பசி. திரும்ப ஆரம்ப நிலைமை

அப்பவாச்சும் புருஷன் பொஞ்சாதி ரெண்டு பேர் மட்டும் பட்டினி! இப்ப கையிலே ஒன்று வயித்துக்குள்ளே ஒன்று...! மொத்தகுடும்பமும் தொடர்ந்து ரெண்டு நாளா பட்டினி! குழந்தை கீதா பால்கேட்டு அழுதது. ஜெகதி சாப்பிட்டால்தானே குழந்தைக்குப் பால் சுரக்கும். குழந்தையோட பசி தீர்க்க வகை தெரியாம ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துகிட்டு அழுதோம்! வெளியே போய் பிச்சையாவது எடுத்துட்டு வந்து குழந்தை குட்டிகளுக்கு சோறு போடமாட்டோமான்னு எனக்கு வெறி வந்துருச்சு.

"அப்படி எதுவும் செய்துடாதீங்க! அப்புறம் வீட்டைக் காலி பண்ண சொல்லிடுவாங்க! ஏற்கனவே ரெண்டு மாச வாடகை பாக்கின்னு கத்றாங்க! இதைவேற செய்தோம்னா... "பிச்சைக்காரங்களுக்கெல்லாம் வீடு கிடையாது'ன்னு விரட்டிடுவாங்க" ஜெகதி பலவீனமா கெஞ்சினா. மூச்சு முட்டிச்சு அவளுக்கு. கிட்டத்தட்ட அரை மயக்கத்திலே இருந்தா!

"ஜெகதி... என்னாச்சும்மா?"ன்னு கலங்கினேன்.

குழந்தை வேற பால் கேட்டு பயங்கர கத்தல்.

"வயிறுஒருமாதிரியாபொரட்டுதுங்க. வயித்துக்குள்ளாற இருக்கிற குழந்தை என்னாகுமோ தெரியலை. மயக்கமா வருது... பசி தாங்க முடியலங்க" குழறினாள். அந்தக் காட்சி இப்பவும் கூட என் கண்ணிலே நிழலாடுது. "ஜெகதி! இரும்மா... இப்ப வாரேன்... கொஞ்சம் பொறுத்துக்க'ன்னுட்டு வெளியிலே ஓடறேன்...

இன்னமும் மழை கொட்டிக்கிட்டே இருக்கு. கிழிந்த கோணியைத் தலையிலே போத்திக்கிட்டு நாடார் கடைக்கு ஓடினேன். வீட்டை விட்டு அவசரமா கிளம்பினேனே தவிர, கடை நெருங்க நெருங்க தயக்கம். ஏற்கனவே அங்கே போன வாரம் வாங்கின கால் கிலோ அரிசிக்கு இன்னும் காசு தரல. அதற்கே போறப்ப வரப்ப எக்கிக்கிட்டிருக்காரு அந்த கடைக்கார நாடார். திருநெல்வேலிக் காரர்!

வேற வழியில்ல.. அவர் எதிரே போய் நின்றேன். குளிர்ல நடுங்கறேனா, பயத்திலே நடுங்கறேனான்னு எனக்கே



தெரியலை.

"அண்ணாச்சி... ஒருகிலோ அரிசி கடன் தாங்க! வேலைக்கிப்போனதும் கொடுக்..." முடிக்கவே இல்லை. அவர் கோபப்பார்வை பார்த்துட்டு குலை நடுக்கமாயிருச்சு.

"என்னலே... இதென்ன தர்மசத்திரமா... வாரவன் போறவனுக்கெல்லாம் அரிசிகொடுக்க? போன வாரம் வாங்கினதுக்கு காசு கொடுத்தியாலே? வெட்கமாயில்ல...? மானங்கெட்ட மூதி? அப்படி சோறு திங்கலேன்னா.. என்னலே? ஆங்... களுதை சம்பாதிக்கிற வரைக்கும் இதை திங்கறதுதானே?"

விளக்குக் கம்பத்துகிட்டேயிருந்ததைக் காட்டினார்.

"நா ஒண்டி கட்டையாயிருந்தா இப்படிக் கடன் கேட்கமாட்டேன் அண்ணாச்சி... பிள்ளை குட்டியெல்லாம் ரெண்டு நாளாப் பட்டினி.. சம்சாரம் வேற புள்ளத்தாச்சி..."

"என்னைக் கேட்டாலே பெத்தே...? அறிவுகெட்ட முண்டம்! படுக்கிறப்ப தெரிய வேணாம்? கழுதை... அரிசி கடன் கேட்கறதுக்கு "மோன்பக்' கேளேன்! மூட்டைப் பூச்சி மருந்தை! அதைக் கேட்க மாட்டியே?"

எச்சிலை முழுங்கினேன்.

"உழைக்க மாட்டதவனா இருந்தா அதைத்தான் வாங்கணும் அண்ணாச்சி! இதோ எப்படியும் ரெண்டு, மூணு நாளிலே மழை நின்னுரும்... நான் சம்பாதிக்க ஆரம்பிச்சுடுவேன்... இப்ப உள்ள கஷ்டத்துக்காக தற்கொலை செய்துக்கிட்டேன்னா நாளைக்கு வரப்போற சந்தோஷத்தை அனுபவிக்கிறது யாரு...?"னேன். சூடா பெருமூச்சு விட்டேன்.

"இப்ப நீ இங்கிருந்து போறியா என்னலே? கோட்டிக்காரன் மாதிரி பேசிக்கிட்டு?" அவர் சொல்லிகிட்டிருக்கிறப்ப யாரோ சைக்கிள்ளே வந்து கடை முன்னாடி ப்ரேக் போட்டு நிறுத்தினார்! சைக்கிளை ஸ்டாண்டு போட்டு நிறுத்திட்டு வந்து "நாடாரே! ஒரு பாக்கெட் சிசர்!" என்றார். நான் கொஞ்சம் தயங்கி ஒதுங்கி நின்றேன். அந்த வாடிக்கையாளர் சிகரெட் வாங்கிட்டுப்போனப்புறம் கடனுக்கு இன்னொரு தடவை முயற்சி பண்ணலாம்னு நினைச்சேன். ஜெகதி பாவம் என்ன பாடு படறாளோ? குழந்தைங்க பாவம் எனக்காக பசியோட காத்திருக்குமே!

வந்தவருக்கு சிகரெட் நீட்டின நாடார், நான் இருப்பதை கவனிச்சிட்டு "ஏய்... இன்னுமா நீ போகல..?"ன்னாரு என்னைப்பார்த்து.

"ஸார்... பாருங்க ஸார் இவனை! நெதக்கும் மாமூல் கேட்டு தொந்திரவு பண்றான்"னு சொன்னாரே பார்க்கலாம்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டுச்சு. சிகரெட் குடிச்சவரை அப்பதான் பார்த்தேன். மஃப்டியிலே இருந்த போலீஸ்காரர்.

"இங்கே வாடா"ன்னு கூப்பிட்டு என் அம்மாவை சம்பந்தப்படுத்தி கெட்ட வார்த்தை சொல்லி திட்டினார்!

"மவனே... மாமூல் கேட்கறியா? ஏரியாவுக்குப் புச்சா... யார்ரா நீ?"

"முட்டிக்கு முட்டி தட்டி லாக்கப்லே போட்டுருவேன்"

நான் பதறிப்போய் "ஐயையோ! அதெல்லாம் இல்ல ஸார்... நா... கடன்தான்... எப்பவும் அரிசியெல்லாம் கூட இந்தக் கடையிலேதான் ஸார் வாங்கறது. அவரையே... வேணா கேட்டுப்பாருங்க" நடுங்கிட்டே சொன்னேன். "போடான்னா போவாம போலீஸ்காரன் கிட்டயே நியாயம் பேசுறியா..."ன்னு சொல்லி சைக்கிள்ளேயிருந்த லத்தியை உருவினார்.

என் மேலே விளாச ஆரம்பிச்சாரு. சேறிலும் சகதியிலும் பொரட்டி பொரட்டி அடிச்சாரு.

இப்ப கூட ஞாபகமிருக்கு... விழுந்த மொத்த அடிகள்... பதிமூன்று.

என்னை அவரு மிருகத்தனமா அடிச்சது கூட வருத்தமில்லை. அப்பிராணியா இருந்த என்னைப் போய் ஒரு மிருகமா மாத்திட்டாரேன்றதுதான் என் சங்கடமெல்லாம். என்னுடைய இன்றைய வாழ்க்கைக்கு பிள்ளையார் சுழியே அந்த போலீஸ்காரர்தான். (தொடரும்)

---

17-ம் பக்க தொடர்ச்சி...

கவலைப்படமாட்டார். எங்களுடன் நேரம் செலவு செய்யவேண்டும். அவருடைய நேரம், அந்த மரியாதை எல்லாம் அவர் என்னுடனான நட்புக்குக் கொடுத்தது. அது இன்றும் தொடருது. ப்ரண்ட்ஸ் படம் வெளிவந்தது, மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. எங்களுக்கும் நல்ல பேரைக் கொடுத்தது. ஆனாலும் சூர்யா, தனி கதாநாயகனாக வெற்றி பெற வேண்டியிருந்தது. அதற்கான நல்ல வாய்ப்புக்காக காத்துக்கிட்டிருந்தார்.

விக்ரமன் சார் 'வானத்தைப் போல' மிகப்பெரிய வெற்றிக்குப் பின் ஒரு படம் தொடங்குறார். பிரஷாந்த்தை வச்சு பண்ணலாம்னு திட்டம் போட்டு, தேதிகள் பிரச்சனையால தள்ளிப் போய்க்கிட்டு இருந்தது. பின்னர் பிரஷாந்த் அந்தப் படத்தில் இல்லையென்றானது. நான் படத்தில் இருக்கேன்னு முன்னாடியே தெரியும். நான் சூர்யாகிட்ட சொன்னேன், "சூர்யா, நீ போய் விக்ரமன் சாரைப் பாரு.. இது நல்ல கதை, கண்டிப்பா ஹிட் ஆகும். நீ போய் அவர்கிட்ட பேசு"ன்னு. சூர்யாவுக்கு தயக்கம்... "நானா எப்படி போய் கேக்குறது? சார் தப்பா எடுத்துக்கமாட்டாரா?"ன்னு. "விஜய்க்கு விக்ரமன் சார் எடுத்த 'பூவே உனக்காக' படம்தான் வெற்றியின் தொடக்கமா இருந்தது. அப்படி உனக்கு அமைய வாய்ப்புள்ள ஒரு கதை இது. நீ வா போலாம்"னு நானே சூர்யாவை அழைத்துப் போனேன். விக்ரமன் சாரை சந்தித்து, 'சூர்யா இந்தக் கதைக்கு சரியா இருப்பார், நல்லா நடிப்பார்'னு சொல்லி பேசினோம். விக்ரமன் சாருக்கும் சூர்யாவை பிடித்துப் போய் அவரை வச்சே படத்தைத் தொடங்கினார். அந்தப் படம் வெளியாகி வெற்றியும் பெற்றது. அந்தப் படம்தான் 'உன்னை நினைத்து'.

அதுக்குப்பின்னாடி சூர்யா ஒருபக்கம் வளர்ந்து, டாப் ஹீரோவாகி... நான் ஒரு பக்கம் படங்கள் நடித்துக்கொண்டே இருந்தபோது... ஒரு நாள் கே.எஸ். ரவிக்குமார் என்னோட பழைய கதை ஒன்னைக் கேட்டார். அந்தக் கதை நான் கேப்டன் விஜயகாந்துக்கு எழுதியது. கதையைக் கேட்ட அவர், "நல்லாருக்கேயா..இதை படமா பண்ணலாம். இப்போ டாப்ல இருக்க சூர்யாவை வச்சே பண்ணலாம்"னு சொன்னார். உடனே சூர்யாவைப் பார்த்தோம், கதை சொன்னோம். உதயநிதி ஸ்டாலினைப் பார்த்தோம், கதை சொன்னோம்.

எல்லாம் விறுவிறுவென நடந்து 'ஆதவன்' படம் உருவாச்சு. படமும் வெற்றிதான். இப்போ, சூர்யா இருக்கும் உயரம் இன்னும் பெரிது. ஆனாலும் எங்கள் நட்பு அப்படியேதான் இருக்கு. அஜித்துக்கும் எனக்கும் ஏதோ பூர்வ ஜென்ம பந்தம் இருக்குன்னு சொன்ன மாதிரி, சூர்யாவுக்கும் எனக்கும் ஒரு தெய்வ பந்தம் இருக்கு. கொஞ்சம் அதிகமா சொல்றேனோ? செப்டம்பர் 11, என்னுடைய திருமண நாள். அவருடைய திருமண நாளும் அதேதான். இப்போ சொல்லுங்க... அவர் எனக்கு தெய்வம் தந்த மச்சான், நான் அவருக்கு 'தெய்வமச்சான்'தானே?

(தொடரும்)

# அடுத்தடுத்த சயனைட் மரணங்கள்!

## கர்நாடகாவில் கண்ணுக்கு தெரியாத புலிகளின் நெட்வேர்க்!

கே.ராகோத்தமன்

விடுதலைப் புலிகளைக் குறிவைத்துத் தேடிக்கொண்டிருந்த சி.பி.ஐக்கு, பெங்களூர் தோமலூர் வீட்டைத் தாண்டி நகரமுடியாமல் ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டது.

காரணம் இந்த ரங்கநாத். அவர் விடுதலைப் புலி அல்ல. அவரைப் பற்றி எங்களுக்கு யாரும் எந்தத் தகவலும் தந்திருக்கவில்லை.

அப்படியொரு பாதுகாப்பான இடத்துக்கு சிவராசனும் சுபாவும் போய்ச் சேர்ந்த விஷயமெல்லாம் பின்னால் வேறொரு வகையில் தற்செயலாகவே எங்களுக்குக் கிடைத்தது!

ரங்கநாத் ஒரு விடுதலைப் புலி அல்ல.

இலங்கைத் தமிழரும் அல்லர்.

ஆனால் ராஜிவ் காந்தி படுகொலையில் தேடப்படும் மிக முக்கியக் குற்றவாளிகளுக்கு அவர் ஏன் அப்படி அடைக்கலம் தரவேண்டும்?

புலிகள் தந்த பணம் காரணமாயிருக்கலாமா என்றால், சிவராசன் இருப்பிடத்தை அவர் சொல்லியிருந்தால், காவல் துறையே அவருக்குப் பல லட்சங்கள் தந்திருக்குமே? நாங்கள் அறிவித்திருந்தோம்.

சிவராசனைக் கண்டுபிடிக்க உதவினால் பத்து லட்சம் ரூபாய்.

சுபாவின் இருப்பிடம் தெரிவித்தால் ஐந்து லட்சம் பரிசு. பணக்கஷ்டத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் ரங்கநாத்துக்கு இதைவிடப் புலிகள் அதிக பணம் கொடுத்திருக்க முடியாதே.

போலீஸிடம் பயந்து அவர் பேசாதிருந்து விட்டாரா? என்றால் புலிகள் மீது அவருக்குப் பயமில்லையா?

தனது புத்தனஹள்ளி வீடு தவிர மாண்டியாவில் வேறு இரு இடங்களிலும் அவர் காயமுற்ற விடுதலைப் புலிகளைப் பராமரிக்க வீடு பார்த்துக் கொடுத்திருக்கிறார்!





சயனைடு மரணங்கள்

தெரிந்தே ஒரு பெரிய குற்றத்துக்குத் துணை போவதற்குத் தனியாகக் காரணங்கள் தேடிக்கொண்டிருக்க முடியாது. அது ஒரு மனப்பாங்கு. வினோத விருப்பம்.

தமிழ் உணர்வு என்பது அந்த விருப்பத்தின் தொடக்கமாக இருந்திருக்கலாம்.

ஆனால் தெரியாமல் செய்துவிட்ட குற்றம் என்று அதனை வருணிப்பதை என்னால் ஏற்கவே முடியாது. தெரிந்தே செய்த குற்றம்தான்.

ஏன் செய்தார், எது அவரைச் செய்யத் தூண்டியது என்பதைக் காட்டிலும் செய்த காரியத்தின் பரிமாணத்தை அவர் முழுதுமாக உணர்ந்தேதான் செய்தார் என்பதைப் பார்க்க, அவரது குற்றமும் பெரிதே.

இந்திரா நகர் வீட்டில் நடைபெற்ற அதிரடிச் சோதனை, அங்கே இரண்டு விடுதலைப் புலி இளைஞர்கள் சயனைட் அருந்தி இறந்தது பற்றி செய்தித்தாள்களில் பக்கம் பக்கமாகச் செய்தி வர, கர்நாடக மாநிலம் முழுதும் மக்கள் மத்தியில் அதிர்ச்சியும் பதற்றமும் ஏற்பட்டது.

நமக்குச் சம்பந்தமில்லாத யாரோ நமது மண்ணில் குற்றம் புரிந்துகொண்டிருக்கிறார்கள், நமக்கு இதனால் ஆபத்து வரும் என்கிற பயம் அவர்களிடையே பரவலாக இருந்தது.

இதன் தொடர்ச்சியாக, எங்கெல்லாம் தமிழர்கள் இருந்தார்களோ, எங்கெல்லாம் மாநிலத்தில் தமிழ்க்குரல் கேட்டதோ, அங்கெல்லாம் கன்னட மக்கள் கவனமுடனும் கூர்மையாகவும் உற்று நோக்க ஆரம்பித்தார்கள்.

சந்தேகத்துக்கு இடமாக எந்த நடமாட்டம் இருந்தாலும் உடனே காவல் துறைக்கு போன் செய்யத் தொடங்கினார்கள்.

இதன் தொடர்ச்சியாக மாண்டியா மாவட்டத்தில் உள்ள மூதடி என்ற கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு, சில புதிய மனிதர்கள் மீது திடீரென்று சந்தேகம் உண்டாக ஆரம்பித்தது.

அவர்கள் அந்த கிராமத்துக்குப் புதிதாக வந்திருந்தவர்கள். வாடகைக்கு வீடு எடுத்து வந்து தங்கியிருந்தவர்கள்.

சினிமா எடுக்கிறவர்கள் என்பதாக அவர்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தது. அவர்களுக்கு அப்போது தெரியாது. (சி.பி.ஐக்கும் தெரியாது!) மூதடி போலவே பிரூடா என்ற கிராமத்திலும் அதே போன்ற சில புதியவர்கள் அப்போது வீடு எடுத்துத் தங்கியிருந்தார்கள்.

அந்தக் கிராமத்து மக்களுக்கும் அவர்கள்மீது லேசான சந்தேகம் இருந்தது. இவர்கள் ஆகஸ்ட் 18ம் திகதி தமது சந்தேகத்தை உள்ளூர் காவல் நிலையத்தில் புகாராகப் பதிவு செய்தார்கள்.

உள்ளூர் போலீசார் இந்த இரண்டு கிராமத்து வீடுகளுக்கும் பரிசோதனைக்காகச் செல்ல, அவர்கள் சற்றும் எதிர்பாராவிதமாக உள்ளே இருந்தவர்கள் சயனைட் கடித்து விட்டார்கள்.

அப்போதுதான் அவர்கள் விடுதலைப் புலிகள் என்பதே போலீசுக்குத் தெரியும். இது பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மூதடியில் இருந்த வீட்டில் ஒன்பது பேர் இருந்தார்கள்.

பிரூடா வீட்டில் எட்டுப்பேர். ஆக, பதினேழு பேர், இவர்களுள் பன்னிரண்டு பேர் போலீசைப் பார்த்த மாத்திரத்தில் சயனைட் சாப்பிட்டு இறந்துவிட, மிச்சமிருந்த ஐவரும் மருத்துவமனைக்குக் கொண்டு போகப்பட்டார்கள்.

விஷயம் பெரிதாகிவிட்டது. எத்தனை சயனைட் மரணங்கள்! கர்நாடக காவல் துறை அதிகாரிகள் குழு உடனே மாண்டியாவுக்குச் சென்றது. விசாரணையில், அந்த இரு வீடுகளையும் வாடகைக்குப் பிடித்துக் கொடுத்தவர் தொழிலதிபர் ரங்கநாத் என்பது தெரியவந்தது. ரங்கநாத்? அப்போதுதான் அந்தப் பெயர் எங்கள் கவனத்துக்கே வருகிறது.

தமிழ்ப் பெயர்.

ஆனால் இலங்கைத் தமிழர் வைத்துக்கொள்ளும் விதமாக இல்லை.

தவிரவும் அவர் ஒரு தொழிலதிபர் என்று சொல்லப்பட்டது. அவர் தொடர்புடைய ஒரு பெங்களூர் முகவரியும் கிடைத்தது.

அதற்குமேல் தாமதிக்காமல் அவரது தொழிற்சாலை, புத்தனஹள்ளி வீடு என்று அடுத்தடுத்து முகவரி பிடித்து அவரை நெருங்க போலீசுக்கு அதிக அவகாசம் பிடிக்கவில்லை. **(தொடரும்)**







தமிழக அரசால் யாழ் பொதுநூலகத்திற்கு 50,000 நூல் வழங்கலும், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிற்கு நூல்களை கொள்வனவு செய்ய கல்வியமைச்சு வழங்கும் நிதியை அதிபர்களிடம் கையளிக்கும் நிகழ்வும் யாழ் நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



# முத்தம்... ஆயுள் கூட்டும் ஆரோக்கியம் காக்கும்!

**'உன் முத்தம் ஒரு மோசடி**
**அதைப்போல் பற்றாக்குறையான ஈகை**
**வேறொன்றுமில்லை'**

**கவிஞர் மகுடேசுவரன்**

இந்தக் கவிதையில் கவிஞருக்கு அதீத எதிர்பார்ப்பு. எவ்வளவு கொடுத்தாலும், 'இன்னும் வேண்டும்' என்று கேட்கிற வேட்கை. உண்மையில், அறிவியல்ரீதியாக முத்தம் தரும் பலன்கள் அற்புதமானவை. அண்மையில், இந்தியாவில் பாலியல் தொடர்பான ஒரு சர்வதேச மாநாடு (International Conference on Sexology) நடந்தது. இதில் கொரியாவைச் சேர்ந்த விஞ்ஞானி நாம் சியோல் பார்க் (Nam Cheol Park) உரையாற்றியது கலக்கல் ரகம். அவர் எடுத்துக்கொண்ட ரொபிக், 'முத்தம்.' மனிதர்களுக்கு ஆயுளை அதிகரிக்கச் செய்யும் என்பதில் ஆரம்பித்து, மன அழுத்தம் குறைப்பதுவரை முத்தத்தின் அருமை பெருமைகளை 40 நிமிடங்கள் அவர் பட்டியலிட, அரங்கமே ஆரவாரத்தில் அதிர்ந்தது.

'அன்பின் வெளிப்பாடு', 'ஆபாசம்'... இப்படி இருவேறு எல்லைகள் முத்தத்துக்கு உண்டு. பள்ளிக்குச் செல்லும் குழந்தையிடம் 'ஒண்ணு கொடுக்க மறந்துட்டியே செல்லம்...' என்று முத்தத்தைக் கேட்டு வாங்கும் அப்பாக்களும் இங்கே உண்டு. வீட்டின் நடு ஹோல்... கும்பலாக அமர்ந்து தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருக்கும் குடும்பம்... திடீரென்று ஒரு முத்தக்காட்சி... பதறிப்போய் சனலை மாற்ற ரிமோட்டைத் தேடும் அப்பாக்களும் உண்டு. அமெரிக்கக் கவிஞர் சில்வியா பிளாத், ஆங்கிலக் கவிஞர் ஜோன் கீட்ஸ், ஃபிரெஞ்ச் கவிஞர் விக்டர் ஹியூகோ... என முத்தம் குறித்து பொன்மொழிகள் எழுதிய பிரபலங்கள், எழுத்தாளர்கள், கவிஞர்களின் பட்டியல் வெகு நீளம்.

90களில் நடிகர் கமல்ஹாசன் எந்தெந்தப் பிரபல நடிகைகளுக்கெல் லாம் முத்தம் கொடுத்திருக்கிறார், இன்னும் யார் யாருக்கெல்லாம் கொடுக்கவில்லை என்று கணக்கு வைத்திருந்த ரசிகர்களெல்லாம் இருந்தார்கள். 'ஃப்ளையிங் கிஸ்' ஸைப் பிரபலப்படுத்தியதில் தமிழ் சினிமாவுக்கு முக்கியப்பங்குஇருக்கிறது. சரி... முத்தம் என்பது என்ன? ஒரு செயல்... ஏதோ ஓர் உணர்ச்சியை வெளிப்படுத்துகிற ஒரு சமாசாரம்... அவ்வளவுதானா? நிச்சயமாக இல்லை.

முத்தம் நம் வாழ்க்கையோடு எப்படி இயைந்த ஒன்றாக இருக்கிறது, அதன் வகைகள், முத்தம் கொடுக்கும் விதங்கள், அது தரும் நன்மைகள் குறித்தெல்லாம் செக்ஸாலஜிஸ்ட் காமராஜ் விவரிக்கிறார். "அன்பை, காதலை, பரிவை, காமத்தை வெளிப்படுத்தும் ஒரு வடிவம்தான் முத்தம். அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட சிலநாடுகளில்நடுரோட்டில் யாரென்றே தெரியாத ஒருவருக்கு முத்தம் கொடுப்பதுகூட சகஜமான ஒன்று. ஒருவரை வரவேற்கும்விதமாக, நட்பை வெளிப்படுத்துவதற்காக, மரியாதை கொடுப்பதற்காக இப்படிச் செய்வார்கள். சில நாடுகளில் ஒரு முறை, சில நாடுகளில் இரு முறை, ஃபிரான்ஸ் உள்ளிட்ட சில நாடுகளில் மூன்று முறை முத்தம் கொடுப்பதெல்லாம் வழக்கம்.

முத்தம் என்பது இயல்பான ஓர் உணர்ச்சி (Instinctual)... பசி, தாகம் எடுப்பது மாதிரியானது. குழந்தைக்கு அம்மா வாரியணைத்து முத்தம் கொடுப்பதும், காதலன் காதலிக்குக் கொடுப்பதும் அன்பின் மிகுதியால் ஏற்படுகிற இயல்பான ஒன்று. 3,600 ஆண்டுகளுக்கு முன்னர் நம் வேதங்களிலேயே முத்தம் குறித்த குறிப்புகள் இருக்கின்றன. வாத்ஸ்யாயனர் முத்தத்தின் வகைகள், அது ஏற்படுத்தும் கிளர்ச்சிகள் குறித்து 'காமசூத்ரா'வில் மிக விரிவாக எழுதியிருக்கிறார். உலகம் முழுக்க இலக்கியப் பாடல்களில், கவிதைகளில் இது பிரதானமான பேசுபொருளாக இருந்திருக்கிறது.

பல்வேறு வகையான முத்தங்கள் இருக்கின்றன. காதலோடு ஓர் ஆண் பெண்ணுக்கோ, பெண் ஆணுக்கோ கொடுப்பது; அம்மாவோ, அப்பாவோ பரிவோடு குழந்தைக்குக் கொடுப்பது; மரியாதையின் பொருட்டு ஒருவரின் புறங்கையில் முத்தமிடுவது; மதச் சடங்குகளின் பொருட்டு கொடுப்பது (தேவாலயங்களில் பிரார்த்தனை முடிந்து அப்பம் வழங்கிய பிறகு புறங்கையில் கொடுப்பார்கள்); அமைதிக்காகக் கொடுப்பது (Kiss of Peace)... யூதர்கள், கிறிஸ்தவர்கள் மத்தியில் இந்த வழக்கம் இருக்கிறது; மரியாதைக்காகக் கொடுப்பது...

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

உளவியல் ஆலோசகர்கள் முத்தம் குறித்து விவரிக்கும் சமூகக் காரணிகள் அர்த்தம் பொதிந்தவை...

"முத்தத்தை எதற்காகப் பரிமாறிக்கொள்ள வேண்டும் என்று கேட்டால் அது தரும் மருத்துவப் பலன்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

'நீயும் நானும் ஈருடல், ஓருயிர்' என்பதை மனிதர்கள் வெளிப்படுத்தும் வழிமுறைதான் முத்தப் பரிமாற்றம்; அன்பை வெறும் வார்த்தைகளால் சொல்லாமல், செயலாகக் காட்டுகிற விஷயம்; இருவேறு மனிதர்களுக்கு இடையில் ஓர் உணர்ச்சிப் பிணைப்பை (Emotional Bond), பந்தத்தை ஏற்படுத்தும் செயல்.

தாய் தரும் முத்தம் குழந்தைக்கு அம்மாவிடம் ஒரு நம்பிக்கையை, நெருக்கத்தை உண்டாக்குகிறது;

ஆண்பெண் உறவில் மிக முக்கியமாகத் தேவைப்படுவது நெருக்கம் (Intimacy). இது இருந்தால்தான், திருமண உறவே பலப்படும். திருமண வாழ்க்கையில், ஆணும் பெண்ணும் பரஸ்பரம் நேசம்கொள்வதற்கு முத்தம் உதவுகிறது. ஏதோ ஒரு தவறு... இருவரில் ஒருவர் மன்னிப்புக் கேட்கவேண்டிய சூழல்... அதை வார்த்தைகளில் கேட்காமல், உடல்மொழியில் கேட்கும்போது இணைக்கு நம் மேல் நம்பிக்கை பிறக்கும். அதற்கு முத்தம் உதவும். முத்தம் சிலருக்குப் பிடிக்காமலும் போகும்; அது விவாகரத்துவரை கொண்டு போய்விடுவதும் உண்டு. அதற்கு வாழ்க்கைத்துணை சிகரெட் பிடிப்பது, மது அருந்துவது போன்றவை காரணமாக இருக்கலாம். சிலருக்கு முத்தத்தால் நோய்த் தொற்று ஏற்படும் என்கிற அதீத பயம் இருக்கும். அதனாலும் முத்தத்தைத் தவிர்ப்பார்கள்.

தாம்பத்ய உறவுக்கு, அதற்கான சுமுகமான சூழலுக்குத் தயார்படுத்துவது முத்தம்தான். இது இல்லையென்றால், ஆணும் பெண்ணும் அன்யோன்யத்தை உணர முடியாமல் போய்விடும். பல விவாகரத்துகள் இந்த அன்யோன்யம் இல்லாததால்தான் நடக்கின்றன. 'அவர் எனக்கு முத்தம்கூடக் கொடுத்தது கிடையாது', 'அவ அசிங்கமா இருக்கா...' என்பதெல்லாம் முத்தம் கொடுக்காமல் போனதால் ஏற்பட்ட எதிர்வினைகளே.

முத்தத்தைச் சரியான முறையில் கொண்டு சேர்க்காததுதான் இன்றைக்குப் பல பிரச்னைகளுக்குக் காரணமாகிறது. பெற்றோர்கள், குழந்தைகளுக்கு உரிய முறையில் அறிமுகப்படுத்தத் தவறிவிடுகிறார்கள். விளைவு..? யார் தூக்கிக் கொஞ்சினாலும், அவர்களிடம் குழந்தை ஒட்டிக்கொண்டுவிடுகிறது. இதுதான் பல பாலியல் வன்கொடுமைகளுக்கும் காரணமாகிறது. முத்தத்தை உரிய முறையில் அறிமுகப்படுத்தவேண்டிய தேவை இன்றைக்கு இருக்கிறது" என்கிறார் நப்பின்னை.

## முத்தத்தின் வகைகள்

நெற்றியில் (Forehead) முத்தமிடுவது: ஃபிரெஞ்ச் முத்தம் (French Kiss) இதுதான் மிக நீளமான, ஆழமான முத்தம். உதட்டோடு உதடு பதித்து, நாக்கோடு நாக்கைத் தொட்டுக் கொடுப்பது. வெகு நேரம் நீடிக்கும் முத்தம்.

சாதாரண முத்தம்: உதட்டை லேசாக டச் பண்ணிவிட்டு விட்டுவிடுவது.

மென்மையான முத்தம் (Light Kiss): கீழ் உதட்டை மட்டும் முத்தமிடுவது.

பட்டாம்பூச்சி முத்தம் (Butterfly Kiss): ஒரு காதலன் காதலிக்கோ, ஒரு காதலி காதலனுக்கோ கண்ணில் கொடுப்பது; முத்தம் கொடுக்கும்போது கண் இமைகள் மூடிக்கொள்ளும், இமைகள் வந்து இறக்கைகள் போல் மறைக்கும் என்பதால் இதற்கு இந்தப் பெயர்.

ஸ்பைடர்மேன் முத்தம் (Spiderman Kiss): ஆணும் பெண்ணும் தலைகீழாக இருந்துகொண்டு ஒருவருக்கொருவர் கொடுத்துக்கொள்ளும் முத்தம். ஸ்பைடர் மேன் தலைகீழாக நின்றுகொண்டு தன் காதலிக்குக் கொடுக்கும் முத்தத்தைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். இது அந்த வகை.

உதட்டோடு உதடு: குறைந்தபட்சம் 20 விநாடிகள் கொடுப்பது.

இஸ்ரேல் உள்ளிட்டப் பல நாடுகளில் இது நடைமுறையில் இருக்கிறது; நட்பின் பொருட்டுக் கொடுக்கும் முத்தம் (Friendship Kiss); பாலியல் சாராத முத்தங்கள் (Non Sexual Kisses); புனித முத்தங்கள் (Holy Kisses), (இயேசு கிறிஸ்துவுக்கு ஜூதாஸ் முத்தம் கொடுத்து காட்டிக் கொடுத்தது).

புனித ஜோன் போல் போப் (Pope John Paul II) முதன்முறையாக ஒரு நாட்டுக்குப் போனால், அந்த நாட்டின் தரையை முத்தமிடுவதை வழக்கமாக வைத்திருந்தார். போப்பாண்டவருக்கு அடுத்த நிலையிலிருப்பவர் (Cardinal), பிஷப் போன்றவர்களைப் பார்க்கப் போகிறவர்களில் சிலர் அவர்களின் கால்களை முத்தமிடுவார்கள். இந்துக்களில் பலர் கோயில் தரையை, வாழ்ந்த மண்ணை முத்தமிடுவதுண்டு.

### முத்தம் கொடுப்பது எப்படி?


முதலில் வாயைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். நாக்கு, பல் சுத்தமாக இருக்க வேண்டும். முத்தம் கொடுப்பதற்கு முன்பாக உள்ளி, வெங்காயம் போன்றவற்றைச் சாப்பிட்டிருக்கக் கூடாது. மது, சிகரெட் கூடவே கூடாது. பிரியப்பட்டால் மின்ட் ஃப்ளேவர் ரொபி, ஏலக்காய் போன்றவற்றை சாப்பிடலாம்.

முத்தத்தை சரியான தருணத்தில் (Moment) கொடுக்க வேண்டும். முதல் தடவையாக முத்தம் கொடுப்பதாக இருந்தால், திடீரென்று கொடுத்து துணையை மிரட்டிவிடக் கூடாது. துணைக்குத் தெரியாமல், அவர்கள் எதிர்பார்க்காத நேரத்தில் கொடுக்கவே கூடாது. நம் காதலியோ, காதலனோ அவர்களும் நமக்கு எதிர்வினை ஆற்றுவதற்கான அவகாசம் கொடுக்க வேண்டும். நம் முத்தத்தை எதிர்கொள்ள அவர்களைத் தயார்படுத்த வேண்டும். ஆனால், கட்டாயப்படுத்தக் கூடாது. முதல் முத்தம் மிக ஆழமாக இருக்கவேண்டிய அவசியமில்லை; மென்மையாக இருந்தாலே போதுமானது. அந்த நெருக்கம், நம் துணையை இன்னும் நெருக்கமாக்க வழி செய்யும்.

மனரீதியாக, உணர்வுரீதியாக, உடல்ரீதியாக நன்மைகள் கிடைக்க அதிகமாக முத்தம் கொடுக்க வேண்டும்; துணையைக் கட்டிப்பிடிக்க வேண்டும். இன்றைக்கு மரியாதை, தொழில் காரணமாக யார் யாரையோ கட்டிப் பிடிக்கிறோம்; கட்டிப்பிடித்து, முத்தம் கொடுக்கவேண்டிய துணையை மறந்துவிடுகிறோம். முத்தத்தின் பலன்களை நினைவில் கொள்வோம்; யாருக்கு முன்னுரிமை கொடுப்பது என்பதையும் முடிவுசெய்து கொள்வோம்" என்கிறார் மருத்துவர் காமராஜ்.

'வெகு நீளமானது, ஆழமானது ஃபிரெஞ்ச் முத்தம்' என்கிறார்கள். 'நாங்கள் அதையெல்லாம் எப்போதோ பார்த்தவர்கள்' என்பதை உணர்த்துகிறது ஒரு குறள்.

'பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்.'




அதாவது, 'மென்மையான மொழியைப் பேசும் இவளின் வெண்மையான பற்களுக்கு இடையில் ஊறும் நீர் பாலோடு, தேன் கலந்ததைப்போல இருக்கிறது' என்பது இதன் பொருள்.

'மகிழ்ச்சி என்பது ஒரு முத்தத்தைப் போன்றது. அதை அனுபவிப்பதற்கு, நீங்கள் யாருடனாவது அதைப் பகிர்ந்துகொண்டே ஆக வேண்டும்' என்கிறார் அமெரிக்காவின் பிரபல வானொலி தொகுப்பாளர் பெர்னார்ட் மெல்ட்ஸர் (Bernard Meltzer). மறுக்க முடியாத உண்மை!

## ஆஸ்ரேலியாவில் முதியவர்களின் நிலைமை

பெரும்பாலான வளமான நாடுகளையும் போலவே ஆஸ்ரேலியாவின் குடிமக்களில் 65 வயதுக்கு மேலானவர்களின் தொகை வேகமாக அதிகரித்து வருகிறது. நாட்டின் சுமார் 24.15 மில்லியன் பேர்களில் 3.8 மில்லியன் பேர்கள் 65 வயதைத் தாண்டியவர்களாக இருக்கிறார்கள். அத்தொகை வேகமாக வளர்ந்து 2057 இல் அவ்வயதுள்ளவர்களின் தொகை நாட்டின் 22 விகிதமாகிவிடும் என்று கணக்கிடப்படுகிறது.

இந்த நிலைமை ஆஸ்ரேலியாவின் வயதானவர்கள் காப்பகங்கள் மீது பிரத்தியேக வெளிச்சத்தை வீசச்செய்கிறது. நாட்டின் மாநிலங்கள் தத்தம் பிரதேசத்தில் வாழும் வயதானவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்கின்றன. வயதானவர்களுக்கு அவரவர்

**உலக யன்னல்**

✒ தேசமித்ரன்

களுடைய தேவைக்கேற்ப வித்தியாசமான உதவிகளை மாநிலங்களின் சார்பாக நகரங்கள் வழங்குகின்றன. அவர்களுக்கான சேவைகள் எப்படியாக இருக்கவேண்டும் என்பதை நாட்டின் அரசு தீர்மானிப்பதுடன் அவை திருப்தியாக



இயங்குகின்றனவா என்பதையும் கவனித்து வருகின்றன.

சமீப காலமாக ஆஸ்ரேலியாவின் வெவ்வேறு பாகங்களில் இருக்கும் வயோதிபர் இல்லங்கள் திருப்தியான முறையில் சேவைகளை வழங்கவில்லை என்றும், சில இடங்களில் பல முறைகேடுகள் நடந்து இயலாத நிலைமையிலிருக்கும் முதியவர்கள் தாக்கப்பட்டும், காயப்பட்டும் இருக்கிறார்கள் என்றும் செய்திகள் வெளியாகியிருக்கிறது.

இதைப்பற்றி அறிய ஆஸ்ரேலிய அரசு ஒரு விசாரணையை நடத்தியிருக்கிறது. அவ்விசாரணைக்குழு அரசால், நகரங்களால் நேரடியாக நடாத்தப்படும் வயோதிபர்கள் சேவை நிலையங்களையும், அவர்களுக்கு உதவுவதற்காக தனியாராலும், சேவை அமைப்புக்களாலும் நடாத்தப்படும் வயோதிபர் நிலையங்களையும் பற்றி ஆராய்ந்து ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. ஆஸ்ரேலிய அரசு நிர்ணயித்துள்ள தரமான சேவைகளை வழங்காத நிலையிலிருக்கும் வயோதிபர் காப்பகங்களின் தொகை 292 விகிதத்தால் அதிகரித்திருப்பதாகவும், வயோதிபர்களை மோசமாகப் பாதிக்கப் படக்கூடிய நிலையில் காப்பகங்களை நடாத்துபவர்களின் எண்ணிக்கை 177 விகிதத்தால் கடந்த ஆண்டில் அதிகரித்திருப்பதாகவும் அவ்வறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

வேகமாக முதியவர்கள் தொகை வளர்வது எதிர்பார்க்கப்படும் இந்த நிலைமையில் அவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரம் குறைந்து வருவது மிகவும் கவலைக்குரியது என்று ஆஸ்ரேலியப் பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார். அவர்களுக்கான சேவைகளின் தரத்தை நிர்ணயிக்கும் அதிகாரத்தினர் தமது கட்டுப்பாடுகளிலும், வழிகாட்டுதலிலும் சரியான முறையில் இயங்கவில்லை என்றே அந்த அறிக்கையின் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.


வயோதிபர்களைச் சரியான முறையில் கவனிக்காத சேவை நிலையங்கள் மீதும் அவைகளின் காப்பாளர்கள் மீதும் விசாரணைகள் நடாத்தப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று பிரதமர் உறுதியளித்திருக்கிறார்.

# சாள்ஸ் அன்ரனியின் முடிவால் அதிருப்தியடைந்த தீபன்!

பீஷ்மர்

2009 மார்ச் இறுதிப்பகுதி. புதுக்குடியிருப்பை சுற்றி வளைத்த இராணுவம், நகருக்குள் நுழைந்திருந்தது. புதுக்குடியிருப்பு நகரத்தில் புலிகள் வாழ்வா சாவா போரில் ஈடுபட்டதால், நினைத்த வேகத்தில் இராணுவத்தால் முன்னேற முடியவில்லை. இதனால் தேவிபுரத்தின் பின்பகுதியால் புதுக்குடியிருப்பின் பின்பகுதியை நோக்கி இரணைப்பாலை சந்தியை நோக்கி இராணுவத்தின் 58வது டிவிசன் முன்னேற ஆரம்பித்தது. மார்ச் இறுதியில் இரணைப்பாலை சந்திக்கு சமீபமாக இராணுவம் வந்தது என்பதை கடந்த பாகங்களில் குறிப்பிட்டிருந்தோம்.

புதுக்குடியிருப்பு சந்திக்கு மேற்கிலிருந்து முன்னேறிய அதிரடிப்படை,


சாள்ஸ் அன்ரனி





தீபன் - பால்ராஜ்

53வது டிவிசன் என்பன, அப்போது பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலையாக இருந்த இப்போது இராணுவ முகாமாக இருக்கும் கட்டிடத்தை கடந்து முன்னேறியது. மந்துவில் பகுதிக்குள்ளும் இராணுவம் நுழைந்தது. இரணைப்பாலை சந்திக்கும் இராணுவம் வந்து விட்டது.

புதுக்குடியிருப்பின் வரைபடம் தெரிந்தவர்களிற்கு நாம் சொல்லும் லொக்கேஷனும், களச்சூழலும் புரிந்திருக்கும்.

அதாவது, பொன்னம்பலம் வைத்தியசாலை கடந்து செல்ல சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் புதுக்குடியிருப்பிலிருந்து இரணைப்பாலை செல்லும் வீதியின் இடதுபுறமாக சுமார் அரை கிலோ மீற்றர் தொலைவில் பிரபாகரனின் முகாம் அமைந்திருக்கிறது. அங்கு பிரபாகரனும் நான்கைந்து போராளிகளும் மட்டும்தான் தங்கியிருந்தார்கள். தனது மெய்ப்பாதுகாவலர் அணியிலிருந்த மிகுதி போராளிகளை யுத்த முனைக்கு அனுப்பியிருந்தார்.

பிரபாகரன் அந்த முகாமில் தங்கியிருப்பதால் அதற்கு நெருக்கமாக இராணுவத்தை வர விடாமல் போராளிகள் உக்கிரமாக போரிட்டு கொண்டிருந்தார்கள். அதனால்தான் தேவிபுரத்திலிருந்து முன்னேறி வந்த இராணுவம் புதுக்குடியிருப்பு இரணைப்பாலை வீதியோரமாக வந்தும், வீதியை கடக்க முடியாமல் திண்டாடியது. புதுக்குடியிருப்பிற்கு மேற்கு முனையிலிருந்து நகர்ந்த வந்த 53வது டிவிசனும் பொன்னம்பலம் வைத்தியசாலை வரை பெரும் சிரமப்பட்டே நகர்ந்து, தேங்கி நின்றது. மாறாக மந்துவில் பக்கத்தால் நகர்ந்த அதிரடிப்படை இவ்வளவு உக்கிர எதிர்த்தாக்குதலை சந்திக்கவில்லை. காரணம், பிரபாகரன் தங்கியிருந்த முகாமை நெருங்க விடக்கூடாதென்பதில் போராளிகள் மூர்க்கம் காட்டினர். அதனால் அதிக வளத்தை அந்த பகுதியில் பாவித்தார்கள்.

விடுதலைப்புலிகளில் புதிதாக எழுச்சி பெற்ற சாள்ஸ் அன்ரனியின் தலைமைத்துவம், சில தளபதிகளிற்கு சாதகமாக இருக்கவில்லை. சாள்ஸ் அன்ரனியின் நடவடிக்கைகள், முடிவுகளால் சில தளபதிகள் விரக்தியில் இருந்தனர்.

இதில் இன்னொரு விசயமும் உள்ளது. மனித உளவியலை புரிந்தால், இதை விளங்கிக் கொள்ளலாம். தமது தலைவரின் முகாமை தொட்டு விடும் தூரத்தில் இராணுவம் வரும் போது, எல்லாவற்றையும் வெறுத்து உக்கிரமான போர் புரிவார்கள். அது வாழ்வா சாவா போராக இருக்கும். அப்படித்தான் அந்த போர் நடந்தது.

புதுக்குடியிருப்பு நோக்கிய இராணுவத்தின் நகர்வு தீவிரமானதும், விடுதலைப்புலிகள் தமது நிர்வாகத்தை இரண்டாக பிரித்தார்கள் என்பதை குறிப்பிட்டிருந்தோம். இப்பொழுது நாம் குறிப்பிடும் சம்பவங்கிற்கு முன்னதாகவே அந்த நிர்வாகப் பிரிப்பு நடந்து முடிந்திருந்தது. புதுக்குடியிருப்பை விட்டு பின்வாங்குவதில்லை, இறுதிச்சமரை புதுக்குடியிருப்பிலேயே நடத்தி முடிப்போம் என பிரபாகரன் முடிவெடுத்திருந்தார். அதனால் அவர் தங்கியிருந்த புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் முகாமை விட்டு பின் வாங்காமல், அங்கேயே தங்கியிருப்பேன் என தளபதிகளிடம் சொல்லியிருந்தார்.

புலிகளின் அணிகளை இரண்டாக பிரிக்கும் போதே, பிரபாகரன் இதை தெளிவாக சொல்லியிருந்தார். தனது தலைமையில் ஒரு அணி புதுக்குடியிருப்பில் நிலை கொள்ளும். சாள்ஸ் அன்ரனி, பொட்டம்மான் தலைமையில் இன்னொரு அணி, நந்திக்கடல் நீரேரிக்கு அப்பால் நிலைகொள்ளுமென்று திட்டமும் வகுத்திருந்தார். தீபன், பானு, கடாபி, விதுர்ஷா, துர்க்கா ஆகிய மூத்த தளபதிகள் உள்ளிட்ட பெரும்பாலான தளபதிகள் பிரபாகரனுடன் புதுக்குடியிருப்பு முனையில் நிற்பதென்று முடிவானது. புலிகளிடமிருந்த போர்த் தேர்ச்சிமிக்க அணிகளும் அவர்களின் கீழ் நிலைகொண்டன. இதை ஏற்கனவே வாசகர்களிற்கு குறிப்பிட்டிருந்தோம்.

இந்த திட்டம் தயாரானதும், பிரபாகரன் ஒருநாள் தளபதிகளை அழைத்தார். மிகமிக சுருக்கமாக தனது திட்டத்தை கூறினார் "புதுக்குடியிருப்புத்தான் எங்கள் கடைசி களம். புதுக்குடியிருப்பை விட்டு நான் பின்வாங்கி செல்லவும் மாட்டேன். இனி பின்வாங்கி செல்லவும் இடமில்லை. புதுக்குடியிருப்பை தவிர்த்தால், நமக்கு பாதுகாப்பான இறுதி தளம் இல்லை. நீரேரிக்கு அப்பால் கடற்கரையோரம் ஒரு இடம் மிச்சமிருக்கிறதென யாராவது நினைக்கலாம். ஆனால் அது நமக்கு பாதுகாப்பான தளமல்ல. அங்கிருந்து யுத்தம் செய்து மாற்றமொன்றை உருவாக்க முடியாது. அது எம்மை அழிக்க இராணுவம் தேர்வசெய்துள்ள இடம். ஒரு மாற்றத்தை ஏற்படுத்த புதுக்குடியிருப்பில் இருந்தே முயற்சிப்போம். அது முடியாவிட்டால் இங்கேயே எல்லோரும் மரணமாவோம். நீங்கள் முன்னரணில் நிற்கிறீர்கள். உங்கள் முனை உடைபட்டால், அடுத்தது எனது நிலை. நானும் கடைசிவரை போரிடுவேன்" என பிரபாகரன் தளபதிகளிடம் உறுதியாக கூறியிருந்தார்.

இந்த இடத்தில் வாசகர்களிற்கு களநிலவரத்தையும் புரிய வைத்து விட வேண்டும். யுத்தம் இறுக இறுக புலிகளின் கட்டமைப்புக்களிலும் உடைவும், நெருக்கடியும் ஏற்பட ஆரம்பித்தது. புதுக்குடியிருப்பு நகரை புலிகள் இழந்த பின்னர், ஆனந்தபுரத்திலிருந்த பிரபாகரனின் முகாமை சுற்றிய சிறிய நிலப்பரப்பிலேயே நிலை கொண்டிருந்தனர். வழக்கமான புலிகளின் முன்னரன் கட்டமைப்பு இங்கு நிலைகுலைந்திருந்தது. மூத்த தளபதிகள் பலர் அங்கு நிலை கொண்டிருந்தனர். ஆளுக்கு 500 மீற்றர், அதைவிட சற்று கூடிய அல்லது குறைந்த நீளமான அரணையே கவனித்து வந்தனர். குறுகிய நிலப்பரப்பில் புலிகள் சுருங்க சுருங்க, அங்கு

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

# முதன்மைத் தமிழ் இராஜதந்திரப் போராளி போன போக்காளி அன்ரன் பாலசிங்கம்

பஷீர் சேகுதாவூத்

**2006** இல் புலிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்குமிடையில் போர் மீண்டும் உக்கிரமாகத் தொடங்கிய நிலையில், வன்னியில் நின்ற அன்ரன் பாலசிங்கம் ஐயாவுக்கு இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்து அவை இயங்கா நிலையை அடைந்தன. அவருக்கு உடனடியாக அவசர உயர்தர சிகிச்சை அளிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. வன்னியில் இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்த நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வசதி இருக்கவில்லை. ஆகவே, புலிகள் கொழும்பு விமான நிலையம் ஊடாக பாலசிங்கத்தை லண்டன் அனுப்புவதற்கான அனுமதியை அரசாங்கத்திடம் கோரினர். ஆனால் அனுமதி வழங்கப்படவில்லை.

அனுமதி மறுக்கப்பட்ட சில நாட்களில் அன்ரன் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் காணப்பட்டார். அங்கே அவருக்கு உயர்தர சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் இன்னும் சில நாட்களில் அவர் லண்டனில் சிறந்த வைத்தியத்தைப் பெற்ற வண்ணம் அங்குள்ள தனது வீட்டில் மனைவியுடன் வசிக்கத் தொடங்கினார்.

அன்ரன் பாலசிங்கம் வன்னியில் இருந்து எப்படி நோர்வேக்குத் தப்பிச் சென்றார் என்பது மிக முக்கிய வினாவாகும்.


பாலசிங்கம், உலகில் பரவலாக அறியப்பட்ட ஒரு தத்துவவியலாளராக இருந்தமை, சிறந்த இராஜதந்திரியாக நீண்ட காலம் செயற்பட்டமை, அவர் ஓர் எழுத்தாளுமையாக கவனிக்கப்பட்டமை மேலும் இடதுசாரியாக இருந்தாலும் கிறிஸ்தவராக அடையாளம் காணப்பட்டமை, இலங்கைக்கான சர்வதேசப் பங்களிப்புடனான சமாதானப் பேச்சுக்களில் புலிகளின் தலைமைப் பிரதிநிதியாகப் பங்கு கொண்டமை போன்ற காரணங்களால் உலகப் பிரசித்தமானவராய்த் திகழ்ந்தார்.

ஆகவே, இவரைக் காப்பாற்றுவது என்ற தீர்மானத்துக்கு உலகப் பெரும் சக்திகள் வந்தன.

சர்வதேச வான் எல்லைப் பரப்பைத் தாண்டி ஒரு முறை இலங்கையின் அநுமதியின்றி அதன் வான்பரப்புக்குள் இந்தியா நுழைந்த அனுபவத்தை உலகு அவதானித்திருந்தது.

எனவே, அன்ரனைக் காப்பாற்றும் நோக்கோடு மேற்குலகின் நேட்டோ அமைப்பு தனது போர்க் கப்பல் ஒன்றை இலங்கையின் கடல் எல்லையில் கொணர்ந்து நிறுத்திற்று. கப்பலின் மேலே நேட்டோ அமைப்பில் அங்கம் வகித்த நோர்வேயின் அதிவேக உலங்கு வானூர்தி ஒன்று தரித்திருந்தது. வன்னிக் கரையில் இருந்து அன்ரனையும் அவரது மனைவியையும் ஏற்றிக்கொண்டு விரைந்த கடற்புலிகளின் படகு அவர்களை நேட்டோவின் கப்பலில் இருந்தவர்களிடம் ஒப்படைத்தது. நோர்வேயின் வானூர்தி அன்ரன் தம்பதிகளை ஏற்றிக்கொண்டு சென்று அமெரிக்கத் தளமான டியாகோகார்சியாவில் இறக்கிவிட்டது. இதன் பின்னர் சட்டபூர்வமாக, தம்பதியினர் நோர்வையை அடைந்தனர். இதுதான் அன்ரன் பாலசிங்கம் தப்பிச் சென்ற கதையாகும்.

2002 ஆம் ஆண்டில் இருந்து ஐரோப்பியப் புலி ஆதரவாளர்களில் ஒரு தொகுதியினர் அன்ரனை ஓரங்கட்டும் நடவடிக்கையை ஆரம்பித்தனர். வன்னியில் இருந்த புலித் தலைமைக்கு அன்ரனைப் பற்றிய பொய்களையும், புனைவுகளையும் கூறினர், போட்டுக் கொடுத்தனர், அள்ளியும் வைத்தனர். இந் நடவடிக்கைகளினால் தமிழர்களின் பெரும் இராஜதந்திரி சோர்வடைந்திருந்தார். இந்தக் கூர் குறை கூறலில் ஏதாவதொரு



சர்வதேசப் புலனாய்வுத்துறை சம்மந்தப்பட்டிருந்ததா என்பதை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

ஒரு மாபெரும் உண்மையை இங்கு கூறியாக வேண்டும். அதாவது, சந்திரிக்காவின் காலத்தில் வெளிநாட்டமைச்சராக இருந்த கதிர்காமர் என்ற தமிழரின் கெட்டித்தனத்தினால்தான் புலிகள் உலகெங்கும் தடை செய்யப்பட்டார்கள் என்று பரப்புரை செய்யப்பட்டது. ஆனால் இதுவல்ல உண்மை, அன்ரன் பாலசிங்கம் அவர்கள் புலிகளின் ஒரு பகுதியினரால் ஒதுக்கப்பட்டமையே சர்வதேசம் புலிகளைத் தடை செய்தமைக்கான உண்மைக் காரணமாகும்.

"தம்பியின் பாலா அண்ணன்" வன்னியில் இருந்து தப்பிச் சென்று நோர்வேயில் வாழ்ந்த போது நோயில் இருந்து தப்பிப் பிழைத்தார். ஆயினும் தான் ஒதுக்கப்பட்டதனால், மேலும் உயிர் வாழ்ந்தாலும் தனது மக்களுக்கான போராட்டத்திற்குச் சரியான பங்களிப்பை என்னால் செய்ய முடியாது என்று அன்ரன் நம்பினார். ஆகவே இனிமேலும் உயிர் வாழ்தல் பிரயோசனமில்லை என்று எடுத்த உறுதியான தீர்மானத்தினால் அவர் மருந்துகளை உட்கொள்ள மறுத்தார் என்று ஒரு தகவல் கிடைத்தது.

அன்ரன் பாலசிங்கத்தின் மரணம் சயனைட் அருந்தாத சுய விடுதலைக்கான ஒருவகைத் தற்கொலை எனக் கொள்வது பொருத்தம்தானே?

---

கட்டளை மைய செயற்பாடு சீர்குலைந்து விட்டது. புதுக்குடியிருப்பு முனைக்கான ஒட்டுமொத்த கட்டளை மையமொன்று செயற்படவில்லை. குறுகிய வட்டத்தில் புலிகளின் அணிகள் சிக்கியதால், தளபதிகள் அடிக்கடி நேரில் சந்தித்துக் கொள்ள முடிந்தது. அப்படியான ஒருங்கிணைவு இருந்ததே தவிர, அனைவரையும் ஒருங்கிணைத்த கட்டளை மையமொன்று இருக்கவில்லை.

புலிகளின் வழக்கமான கட்டளை மைய செயற்பாடு இருந்தால், யுத்தத்தை இலகுவாக கையாள வசதியாக இருக்கும். முன்னரணில் இருக்கும் இளநிலை தளபதியொருவர், தனக்கு ஆட்லறி செல் உதவி தேவையென கேட்டால் கட்டளை மையத்தில் இருக்கும் மூத்த தளபதி உடனடியாக ஆட்லறி அணியை அந்த திசைக்கு ஒருங்கிணைப்பார். புதுக்குடியிருப்பு யுத்தமுனையில் இதெல்லாம் மிஸ்ஸிங்.

கட்டளை தளபதிகளாக இருந்த பானு, தீபன், கடாபி, துர்க்கா, விதுஷா போன்றவர்கள் களமுனையில் அணிகளை வழிநடத்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு சிக்கலான பிரச்சனை தோன்றியது. இது வெளியில் வராத சங்கதியொன்று. படிப்பதற்கு வாசகர்கள் பலரிற்கு சிரமமாகத்தான் இருக்கும். ஆனாலும் வரலாற்றிற்கு காய்தல் உவத்தல் கிடையாதல்லவா. ஆகவே பேசித்தான் தீர வேண்டும்.

விடுதலைப்புலிகளில் புதிதாக எழுச்சி பெற்ற சாள்ஸ் அன்ரனியின் தலைமைத்துவம், சில தளபதிகளிற்கு சாதகமாக இருக்கவில்லை. சாள்ஸ் அன்ரனியின் நடவடிக்கைகள், முடிவுகளால் சில தளபதிகள் விரக்தியில் இருந்தனர்.

அதில் முக்கியமானவர் தளபதி தீபன்!

தீபனிற்கும், சாள்ஸ் அன்ரனிக்கும் எங்கே முட்டுப்பட்டது, தீபனிற்கு எப்படியான அதிருப்திகள் இருந்தது என்பதை அடுத்த வாரம் சொல்கிறோம்.


(தொடரும்)



## சொல்லேர் உழவு

# தமிழ் மொழியைக் காப்பாற்றுவது என்பது என்ன தெரியுமா? 2

கவிஞர் மகுடேசுவரன்



நம் எல்லார் வீட்டிலும் பெரும்பாலும் மொழி அகராதிகளை வைத்திருப்போம். தமிழ் அகராதி இருக்கிறதோ இல்லையோ ஆங்கில மொழியகராதி கட்டாயம் இருக்கும். தமிழர் வீடுகளில் தமிழ் அகராதியே இராது. ஏனென்றால் தமிழ்ச் சொற்களுக்கு நன்றாகவே பொருள் தெரியும் என்ற நினைப்பு. முதல் வேலையாக ஒரு தமிழகராதி நூலை வாங்கி வைத்துக்கொள்க.


உண்மையில் ஆங்கிலத்தில் நாம் தெரிந்து வைத்துள்ள அளவுக்குக்கூட தமிழ்ச்சொற்களை அறிந்திருக்கவில்லை. நம் பேச்சுக்குப் பயன்படுகின்ற சில நூறு சொற்களுக்கு அப்பாலுள்ள தமிழ்ச் சொற்கள் அறியப்படாமல் கைவிடப்பட்டுக் கிடக்கின்றன. அவற்றை அறிவதும் இயன்ற இடங்களில் பயன்படுத்துவதுமே நம்மால் இயல்கின்ற மொழி வளர்ப்பு ஆகும். மொழியைக் காப்பாற்றுவது என்பது அதன் ஒவ்வொருசொல்லையும் காப்பாற்றுவதுதான்.

என்னிடம் கட்டடப் பணிக்கு வருகின்ற தலைக்கொத்தனார் (மேஸ்திரி) 'சப்போஸ்' (Suppose) என்ற ஆங்கிலச் சொல்லைத் தம் பேச்சில் பயன்படுத்துகிறார். அவரோ தொடக்கக்கல்வியளவே படித்தவர். 'சப்போஸ் நாளைக்கே செங்கல் விலை ஏறிப்போச்சுன்னா... சப்போஸ் இந்த இடத்துல இன்னொரு ரூம் போட்டா' என்கிறார். 'ஒருவேளை' என்கின்ற சொல் தெரியாமலில்லை. நான் அவ்விடத்தில் 'ஒருவேளை அப்படியாச்சுன்னா பார்த்துக்கலாம்' என்று பயன்படுத்திப் பேசினால் அவர் விளங்கிக்கொள்கிறார். ஆனால், அவருடைய பழக்கத்தில் எங்கோ ஓரிடத்தில் 'சப்போஸ்' என்ற சொல்லைக் கற்றுக்கொண்டார். அதைத் தம் பேச்சுமொழியில் ஆள்கிறார்.

சப்போஸ் என்று பயன்படுத்தத் தெரிந்தவர்க்கு ஒருவேளை, ஒருக்கால் என்று வாய்வரவில்லை. இப்படித்தான் சிறிது சிறிதாக தாய்மொழியின் இடத்தை வேற்று மொழி கைப்பற்றிக் கொள்கிறது. தமிழ்ச்சொற்கள் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. ஓர் எளிய சொல்தான், யாரும் பயன்படுத்தக் கூடியவாறுள்ள பேச்சுத் தமிழ்ச்சொல்தான், அதற்கே இந்நிலை என்றால் தமிழின் அருஞ்சொற்கள் எப்படியெல்லாம் துருவேறிக் கிடக்கும் என்று எண்ணிப் பாருங்கள்.

எடுத்துக் கூறிய இந்நிகழ்வானது பேச்சுத்தமிழ் மட்டத்தில் கைவிடப்பட்டு வரும் தமிழ்ச்சொற்களைப் பற்றியது. எழுத்துத்தமிழ் என்று இன்னொரு பெரும்பரப்பு இருக்கிறது. அங்கேயாவது தமிழ்மொழி தழைத்தோங்கி நிற்கிறதா? தேடியெடுத்து தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துகிறார்களா? அரிதினும் அரிதாக ஒரு சொல்லையேனும் புதிதாகக் கற்றுப் பயன்படுத்துவோம் என்று யாரேனும் முயல்கிறார்களா? இந்தப் பொருளில் புதிதாக ஒரு சொல் இருக்க வேண்டுமே, அதைத் தேடியெடுத்து ஆள்வோம் என்ற முனைப்பு யார்க்கேனும் இருக்கிறதா? இதற்குத் தமிழ்ச்சொல் என்ன, அன்றேல் நான் ஆக்குவேன் என்ற ஆக்கச் சிந்தனை உண்டா? இல்லை இல்லை.

எழுத்துத் தமிழின் நிலைமை இன்னும் கவலைக்கிடமாக இருக்கிறது. தலைக்கொத்தன் பெரிதாய்ப் படித்தறியாதவன். தன் பேச்சு. வழியாய் அறிந்த ஓரிரு சொற்களோடு நிற்கின்றவன். ஆனால், எழுத்தில் ஈடுபடுபவர்கள் யார்? தம் வாழ்வின் பெரும்பகுதியை மொழியோடும் மொழிச்சொற்களோடும் கழிப்பவர்கள். அவர்கள் ஊட்டும் சொல்லும் கருத்தும் தூண்டும் எண்ணமும் வேட்கையுமே குமுகாயத்தை ஆள்கின்றன. அவர்களேனும் புதுப்புதுச் சொற்களை நாடிச் சொல்ல வேண்டாவா ?




புதிய சொற்களை நாடாவிட்டாலும் பழுதில்லை, முடிந்தவரை ஆங்கிலச் சொல் கலவாமல் எழுத வேண்டும் தானே? அதைக்கூட அவர்கள் செய்வதில்லை. ஓர் ஆங்கிலச் சொல்லைக் கலந்து எழுதுவதில் வணிகக்கதை எழுத்தாளர் முதற்றே புத்திலக்கியம் படைப்பவர்வரை ஒருவரும் கூச்சப் படுவதில்லை. ஆங்கிலம் போன்றே வடமொழி, உருது முதலிய பிறமொழிச்சொற்களும் கலந்திருக்கின்றன.

ஆங்கிலக் கலப்பைக்கூட எளிதில் அறிந்துவிடலாம். வடசொற் கலப்பினை அவ்வளவு எளிதில் கண்டுபிடிக்க முடிவதில்லை. ஐக்கியம், முக்கியம், சகோதரி, நீதி ஆகியன வடசொற்கள் என்றால் பலர்க்கும் அதிர்ச்சியாக இருக்கும். அவை சொற் கட்டுமானத்திலும் ஒலிப்பிலும் தமிழ்போலவே விளங்குவதால் இத்தகைய குழப்பம் ஏற்படுவது இயற்கை. ஆக, இவை அனைத்திற்கும் ஒரேயொரு தீர்வுதான். நம் தமிழ்ச்சொல்லறிவைப் பெருக்கிக் கொள்வது. பேச்சிலும் எழுத்திலும் தமிழ்ச்சொல்லாட்சியை மேம்படுத்துவது.

(தொடரும்)






மறைந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனின் 102ஆவது பிறந்த தின நிகழ்வுகள் கண்டி பொல்கொல்ல கூட்டுறவு சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. சபாநாயகர் கரு ஜெயசூரிய, கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் மற்றும் நடிகர்கள் கே.பாக்கியராஜ், பாண்டியராஜன், ரமேஷ் கண்ணா, சரவணன், தேனிசைத் தென்றல் தேவா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


15
மூன்று கில்லாடிகள்!
கதை, படம்: ராஜே
முன்கதை: ஜெர்மன் படைக்கும் பிரெஞ்சுப் படைக்கும் போர் நடந்துவருகிறது. இதில் பிரெஞ்சுப் படையைச் சேர்ந்த மூரே தன்னிடம் இருக்கும் குறைந்த எண்ணிக்கையிலான படையினரை வைத்து, ஜெர்மனியின் பெரிய படையை பிரெஞ்சுப் பகுதியில் முன்னேற விடாமல் தடுக்கிறான். ஜெர்மனி படைக்கு உதவியாகப் பெரும் எண்ணிக்கையிலான போர் விமானங்கள் எந்த நேரத்திலும் வரலாம் என்ற நிலையில்...
மூன்று ஜெர்மனி விமானங்களில் இரண்டு விமானம் பிரெஞ்சுப் படையால் சுட்டு வீழ்த்தப்பட்டன. மீதமுள்ள ஒரு விமானம் மலையைச் சுற்றி வந்து கொண்டிருந்தது.
இந்த விமானங்கள் நம்மைக் குறிவைத்தே வருகிறது. முதலில் விமானியின் கவனத்தை நம்மை நோக்கித் திருப்புவோம்.
இதை வீழ்த்த வேண்டும்!
காய்ந்த புற்களில் நெருப்பை வை. ஜெர்மனிப் படை வீரர்கள்தான் ஏதோ சிக்னல் கொடுப்பதாக எண்ணிக்கொண்டு வரலாம்.
மூரே எதிர்பார்த்தவாறே, விமானியின் பார்வை புகை வரும் பக்கம் திரும்பியது.
நாம் எதிர்பார்த்தவாறே விமானம் நம்மை நோக்கி வருகிறது. துப்பாக்கியைக் கையில் கொடு!
விமானம் தன்னைச் சுட்டு விடக் கூடாது என்பதற்காகத் தரையில் பாய்ந்து உருண்டு எழுந்தான் மூரே.
அந்த ஒற்றை விமானத்தின் விமானியை நோக்கிக் குறிவைத்துச் சுட்டான்...
இவன் தப்பிவிடக் கூடாது.
விமானியின் அறைக் கண்ணாடி பொத்தல் பொத்தலாகத் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டது.
அடுத்த சில நொடிகளில் விமானம் தரையை நோக்கிப் பாய்ந்தது.
விமானம் தப்பியிருக்குமோ?
விமானம் மலையின் மறுபக்கம் சென்று விட்டது.
விமானியை நோக்கி மிகச் சரியாகச் சுட்டுள்ளேன் நிச்சயம் தப்பியிருக்க வாய்ப்பில்லை.
மூரே சுட்ட விமானம் தரையில் மோதி எரிந்தது.
ஜெர்மனி விமானப்படை அதிகாரிகள்... ஃபிரான்ஸுக்குள் எங்கெங்கெல்லாம் விமானத்தாக்குதல் நடத்த வேண்டுமென்று திட்டம் தீட்டினார்கள்.
இவன்தான் இரண்டாவது கில்லாடி. இவன் பெயர் ஹெலன். மூரேவின் நண்பன். எதற்கும் கவலைப்படாதவன். குறும்புத்தனம் செய்பவன். பயப்படாதவன்.
ஹேய் சீக்கிரம் வா! முதல் குரூப்பில் விமானத்தைச் செலுத்த உன்னை தேர்வு செய்துள்ளார்கள்.
முன்பு நீ என்னைப் பார்த்து என்ன சொன்ன. நீ விமான இன்ஞ்ஜினைத் துடைக்கக்கூட லாயக்கில்லைனு சொன்னேல்ல. என்னைத்தான் முதலில் தேர்வுசெய்துள்ளார்கள்.
அட முட்டாளே நீ சாகப் போகிறாய்!
ஜெர்மனி விமானங்கள் ஃபிரான்ஸை நோக்கி வரிசையாகப் புறப்பட்டுச்சென்றன.
(தொடரும்...)


1.பாரு... பாரு... பூனைகளைப் பாரு... கூறு... கூறு... 10 வித்தியாசங்களைக் கூறு!




2.ஒரு சுட்டி... ரெண்டு சுட்டி... மொத்தம் எத்தனை சுட்டி? 10 செகண்டில் சொல்லுங்கள் சுட்டி!





3.கிச்சுக் கிச்சு சிக்கிக்கிச்சு... எந்தத் தூண்டிலில் எது சிக்கிக்கிச்சு?




4.எந்தத் துண்டு எங்கே பொருந்தும்? உற்றுப் பார்த்து சரியாச் சொல்லுங்கள்!




5.ஒவ்வொரு வரிசையிலும் வேறுபட்டிருக்கும் படத்தைக் கண்டுபிடியுங்கள்!



## விடைகள்:

1



2 24

3 1-B, 2-A, 3-E, 4-D, 5-C


4 A-5, B-4, C-3, D-1, E-2

5





வீனஸ் எண்ரப்பிறைசஸ்
Venus Enterprises
Venus Aqua
RO Systems
All RO Domestice
Softener Plant
STP Plant
ETP Plant
Iron Remover Plant
Mineral water Plant
Panel board
Ozonator
UV. Power box
All Spare Parts Available
250 LPH
All Manufacture & Service
உங்களினதும் உங்கள் குழந்தைகளினதும் ஆரோக்கியமான வாழ்வுக்கான தூய்மையான குடிதண்ணீர்
VENUS AQUA
RO SYSTEMS
HOT & COOL
HOT & COOL
25 LPH
12 LPH
உங்கள் வீட்டு கிணற்றுத்தண்ணீரையே நல்ல தண்ணீராக மாற்றித்தரும்.
வீட்டுக்கு மட்டும்அல்ல தேநீர்விடுதிகள், தொழிற்சாலைகள்,பாடசாலைகள், வைத்தியசாலைகள், ஐஸ்கிறீம் உற்பத்திநிலையங்கள்,அலுவலகங்கள், என்பவற்றிற்கான எல்லாவிதமான இயந்திரங்களும் உண்டு.
இலவசமாக தண்ணீர் பரிசோதனை செய்து தரப்படும்.(TDS)Total dissolved Solids.
100% தூய்மையான குடிதண்ணீர்
Venusroslk@gmail.com
Office : 0212217744
0757227378
+91 9094708848
No.110 Manipay Road,Jaffna.
விற்பனைக்கு பிந்தியசேவை.



# Cosy

## HOTEL & RESTAURANT

North Indian, Punjabi, Chinese
&
Jaffna Foods



Free Home Delivery (Limited Area)
**Hotlines: 021 222 7100 / 021 222 5899**

Open Daily : 11.00 a.m. to 11.00 p.m.
272, Stanley Road, Jaffna.
15, Sirambiyadi Lane, Jaffna.

**We Accept all credit cards**

www.cosylanka.com
info@cosylanka.com
www.facebook.com/cosy.cosy.167

| COSY HOTEL & RESTAURANT | Non A/C | A/C |
|---|---|---|
| **Single bed** | **Rs. 2,000** | **Rs. 2,500** |
| **Double bed** | **Rs. 3,000** | **Rs. 3,500** |
| **Triple bed** | **Rs. 4,000** | **Rs. 4,500** |
| **Four bed** | **Rs. 4,500** | **Rs. 5,000** |

10% Service charge will be added

| | |
|---|---|
| Restaurant / party Hall | Generator Backup |
| Roof Top Beer Garden | Wi - Fi Facilities |
| Ample Parking | 24 Hrs Security Service |

*Gift Vouchers* **Rs. 2,000** **Rs. 1,000** **Rs. 500**
**Available here**




இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 23.09.2018 அன்று வெளியிடப்பட்டது.